# மதுரை கும்பாபிஷேகம்



பிரயாணக் கட்டுரை — வி. மீனுக்ஷிசுந்தரம், JMN, JP.

முதற்பதிப்பு: 1975-[1000]

# எங்கள்

# காணிக்கை

''மதுரை கும்பாபிஷேகம்'' நூல் விற்பனையில் கிடைக்கும் நிதியை கந்தன்மலை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத் திருப்பணிக்கு உரிமையாக்குகின்றோம்.

இங்ஙனம்,

வீ. மீனாக்ஷிசுந்தரம் JMN.,JP.
எஸ். பி. மாணிக்கம்
ந. நாராயணன்

உ

# மதுரை
# கும்பாபிஷேகம்

வீ. மீனாக்ஷிசுந்தரம், ஜே. எம். என்., ஜே. பி.

## பிரயாணக் கட்டுரை

பதிப்புரிமை பெற்றது.

விலை $ 2-00

உ

ஓம் சக்தி

# மதுரை கும்பாபிஷேகம்



தங்க அப்பாவுக்கும்

எங்க அம்பாவுக்கும்

அன்புடன்

சமர்ப்பணம்

— அம்பாவீமீசு

# முன்னுரை

**1963-ம்** ஆண்டு மதுரை மீனாக்ஷியம்மன் கோவில் மஹா கும்பாபிஷேகம் என்ற செய்தி காதில் எட்டியது முதல் என் உள்ளம் மதுரையிலேயே தோய்ந்தது.

ஆனால் கும்பாபிஷேகத்திற்குச் செல்ல முடியுமா என்ற நிலையை அன்னை திருவருள் எப்படியோ மாற்றி மதுரையம்பதியில் மஹா கும்பாபிஷேகத்தன்று அன்பர்களுடன் அடியேனையும் வீற்றிருக்கச் செய்து பேரருளை நல்கியது

மதுரைக்கும் தென் இந்தியாவிற்கும் அதுவே எனது முதலாவது பிரயாணம்

இந்தப்பிரயாணம் இனித்தது

பிரயாண அனுபவத்தை அந்தச்சமயத்தில் நடைபெற்ற மலைநாடு வார இதழில் எழுதிவந்தேன்.

இந்தக்கட்டுரை எழுத்தில் வந்து "மறைந்து" ஒரு மாமாங்கம் ஆகிவிட்டது

மாமாங்கம் ஆனால் கும்பாபிஷேகம் ஆகவேண்டும் என்பதுபோல இந்தப் பழைய கட்டுரையை அச்சேற்றி பிரயாணத்தை நினைவு கொள்ளவேண்டும். என்று சில அன்பர்கள் எழுத்தாளர் திரு பூ. அருணாசலத்துடன் முன்நின்றனர்

இவர்கட்குத்துணையாக கலாசாலை அச்சகத்தின் நிர்வாகிகள் திரு. **S. P.** மாணிக்கம்—நாராயணன் சகோதரர்கள் உறுதுணையாக இருந்ததால் எழுத்து இன்றைய நூல்வடிவைப் பெற்றுள்ளது

இவர்கட்கு நன்றி உரித்தாகுக

"மதுரை கும்பாபிஷேகத்தை" யாராவது படித்து முதல் பயணத்தில் யான் பெற்ற இன்பத்தில் ஓரளவு பெற்றால் அது முயற்சி எடுத்தவர்கட்கும் எனக்கும் பெரும் மகிழ்ச்சியளிப்பதாகும்.

"பெண்ணரசி அடிக்கமலம் தலைமேல் வைப்பாம்!

— **வீ. மீ. சுந்தரம்**

# அணிந்துரை

மலேசிய புத்தக வெளியீட்டுத்துறையில், மதுரை கும்பாபி ஷேகம் நூல் தனித்தன்மை வாய்ந்த சிறந்த நூலாகும்.

இந்நாட்டில் சிறுகதைத் தொகுப்புக்கள் வெளியான அளவில் பிரயாணக் கட்டுரை நூல்கள் வெளியாகவில்லையே என்ற குறை இருந்து வந்தது. அந்தக் குறையைப் போக்கும் அளவில் தென்னிந் தியாவிலுள்ள சில ஆலயங்களைப் பற்றியும் அதன் சிறப்பு அம்சங் களையும். தேவாரப் பண்களுடன் கலந்து தேறுக மதுரை கும்பாபி ஷேகம் வெளிவந்துள்ளது.

எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது பெரியவர் திருமிகு வி மீ. சுந்தரம் அவர்கள் மதுரை கும்பாபிஷேக வைபவத்தைக் காணச் செல்கிருர்கள் என்ற செய்தி எங்களுக்குத் தெரிந்ததும், அவரைச் சிறப்பு செய்து கௌரவித்து அனுப்பவேண்டும் என்ற அவா சுங்கை சிப்புட் ஸ்ரீ சுப்ரமண்யர் ஆலய தேவஸ்தான பரி பாலன சபா தொண்டர்களுக்கு எழுந்தது

1963ம் ஆண்டில்... மாலையில் ஒரு விசேஷ பூஜை நடத்தி விருந்துபசாரம் செய்யப்பெற்றது. தொண்டர்கள் நிறைந்த சிறப் பான விருந்தாக அது அமைந்திருந்தது

பெரியவர் மதுரையம்பதிக்குச் சென்று, கண்ட கண்கொள்ளாக் காட்சியையும் அதனைத் தொடர்ந்து பல முக்கிய ஆலயங்களுக்குச் சென்று. அனுபவித்த பேரின்பத்தையும் நயமிக்க கட்டுரையாக வடித்து, மலைநாடு வார இதழில் வெளியானபோது. பலரின் கவனத்தை ஈர்த்தது. அதனை பலரும் படித்து பாதுகாக்க வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்தில் இந்தக் கட்டுரையை நூலாக வெளியாக்கியுள்ளோம்.

புதிதாக தென்னிந்திய ஆலயத்தைச் சுற்றிப் பார்க்கச் செல்லும் ஒருவருக்குத் துணையாக, உகந்ததொரு வழிகாட்டி நூலாக மதுரை கும்பாபிஷேகம் நூல் அமைந்துள்ளது என நம்புகின்ருேம்

மலேசியாவின் மூத்த முதிர்ந்த எழுத்தாளர்களில் ஒருவரும் சிறந்த கட்டுரையாளருமான திருமிகு வீ மீ. சுந்தரம் அவர்கள் பயனுள்ள மதுரை கும்பாபிஷேகத்தை, அறிந்தவர்களும், அறியா தவர்களும் உணர்ந்து கொள்ளும் அளவில் நமக்கு எழுதியுள்ளார்.

மதுரை கும்பாபிஷேக நூல் வெளியிடும் வாய்ப்பை எங்களுக்கு நல்கிய திருமிகு வீ. மீனுக்ஷிசுந்தரம், ஜே எம் என்., ஜே பி அவர் களுக்குமனப்பூர்வான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிருேம்

*செயலாளர்,*
*மதுரை கும்பாபிஷேக*
*நூல் வெளியீட்டுக் குழு*
*1-8-1975*

இக்கண்.

பூ. அருணசலம், PPN.

# பதிப்புரை

"நினைத்துத் தொழுவார் பவந் தீர்க்கும் நிமலன் உறை கோவில்" என்பது திருநெறிய தமிழ் இதற்கொவ்வ, தமிழகத்திலுள்ள சிவத்தலங்கள், ஆலயங்கள் பலவற்றுக்கு யாத்திரை செய்து மதுரை மீனாக்ஷியம்மன் ஆலயத் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவை நேரில் தரிசித்துப் பெரும் பேறெய்தியவர் இப்பிரயாணக் கட்டுரையை வடித்துத்தந்துள்ள பெருந்திரு வீ மீ. சுந்தரம் JMN, JP. அவர்கள்

"சங்க நதிப் பெரியவர்" என்று நன்கு அறிமுகமாகியுள்ள இவர்கள் நடத்தி வந்த 'மலைநாடு' பத்திரிகையில் அவ்வப்போது எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்பே இந்தநூல்.

அறிவியல், சமூகம், வரலாறு, பாடசாலை வாசகம், கவிதை ஆகிய இத்துறைகளில் பல நூல்களைப் பதிப்பித்து மலேசியத் தமிழ் உலகத்திற்குப் படைத்துள்ள நாங்கள், இக்கும்பாபிஷேகப் பிரயாணக் கட்டுரையின் தொகுப்பை நூல் வடிவில் வெளியிடுவதிலே பெரு மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறோம்

நினைத்துத் தொழுவார் பாவங்களைத் தீர்க்கின்ற நிமலர் உறை கோவில் கும்பாபிஷேகக் கட்டுரையினை நூல் வடிவந்தந்திருக்கின்றதை, நாங்கள் பெற்றுள்ள பெரும் பேறெனக் கொள்கின்றோம்.

பேரா மாநில எழுத்தாளர் சங்க வழி உலகப் பெரும் நாவலாசிரியர் திருமிகு அகிலன் அவர்களால் எழுத்துப்பணிச் சிறப்புக்கென கேடயம் வழங்கப் பெற்றுப் பாராட்டப் பெற்றுள்ள இப்பனுவலின் ஆசிரியர், இக்கட்டுரையை எழுதி வளர்த்துள்ள 'அறம்', பூத்துக் காய்த்துக் கனிகுலுக்கித் தெய்வச் சிந்தனையைத் தூண்டி வளர்ப்பதற்குத் துணையாக இருக்கும் என்ற துணிவுடன் உங்கள் முன் படைக்கின்றோம்.

இக்கண்,

S. பிச்சைமாணிக்கம் — நாராயணன்

நிர்வாகிகள்

கலாசாலை அச்சகம்,

1-8-1975

சுங்கை சிப்புட்

மலேசியக் கவிமணி கிருஷ்ணதாசர் அளித்துள்ள

# சிறப்புப் பாயிரம்

## அறுசீர்க் கழில் நெடில் ஆசிரியம்

பேரறிஞன் தலைசிறந்த செயல்வீரன் பேச்சுநலம் பேணும் வள்ளல்
சீரியநற் சங்கநதி திகழ்பெரியோன் செந்தமிழில் தேர்ந்த செம்மல்
கூரியவீ மீனுக்ஷி சுந்தரனும் கொண்டாடும் கூடல் அம்மன்
பாரறிந்த கோவில்கும் பாபிஷேகம் தரிசித்திப் பனுவல் செய்தான்.

மன்னும்உல கியலறிவும் வளமான மொழித்திறமும் மருவும் மேலோன்
தன்னிகரில் மலேசியத்துத் தமிழுரைசால் முதுபுலவன் தன்மை மிக்கான்
அன்னைவீர மாகாளி அருள்மிகுந்த சுந்தரனும் அறிவிற் சான்றோன்
தன்னேடாம் 'மலைநாடு' தமிழிதழில் எழுதியதைத் தந்தான் நன்றே.

அறிவுநலம் ஆய்ந்துபுரி வினைத்திட்பம் அத்தனையும் அசைந்துருத
நெறிதவறு நேரறுபான் அகவைதனில் நெஞ்சுவக்க நிகழும் யாவும்
பெறும்பெரியோன் மீனுக்ஷி சுந்தரனிப் பெருநூலைப் படைத்திட் டானல்
செறிவுடைய மீனுக்ஷி தேவியருள் கிருபையினுல் செழித்து வாழி!

**தமிழ்மனை**
**உலு சபெத்தாங்,**
**தைப்பிங்.**
1–8–1975

உ



# மதுரை கும்பாபிஷேகம்

*வீ. மீனாக்ஷிசுந்தரம்*

---

### *கும்பாபிஷேகத்திற்குச் செல்கிறீர்களாமே*

"கும்பாபிஷேகத்திற்குச் செல்கிறீர்களாமே!" இந்தக் கேள்வியை இரண்டு நண்பர்கள் தனித்தனியே கேட்டபோது கேள்வி என்னை சிந்திக்க வைத்தது!

கும்பாபிஷேகத்திற்குப் போகவில்லையா? என இவர்கள் கேட்கவில்லை.

"செல்கிறீர்களாமே!" என்று கேட்கிறார்கள்.

நான் செல்ல முடிவு செய்து விட்டதாக எண்ணி கேள்வி கேட்கப்பெறுகிறது.

கும்பாபிஷேகம் மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கும்பாபிஷேகம் என நான் சொல்லவேண்டிய தேவையில்லை. 46 ஆண்டுகள் என் பெயருக்குக் காரணமாயுள்ள மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை தரிசிக்காமல் போக்கி விட்டேன்.

எத்தனையோ தலைமுறைகளுக்குப் பிறகு நடக்கும் மதுரைக் கும்பாபிஷேக நினைவு ஓயாது உள்ளத்தில் இடம் பெற்றிருக்கிறது.

செல்ல, நிலை இடந் தருமா என்ற மயக்கம் இருந்து வந்தது...அதற்காக போகாமல் இருப்பதாகவோ போவதாகவோ முடிவு செய்யவும் இல்லை.

மதுரை என்றதும், இன்ப நினைவுகள் உள்ளத்தில் பாயும்.

குமரகுருபரின் தமிழுக்கு உருகி அன்னை குழந்தை வடிவில் வந்து ரசித்ததை மறக்க முடியுமா?

பிட்டுக்கு மண் சுமந்த உள்ளத்தின் தன்மையை நினைவிலிருந்து நீக்க முடியுமா?

திருவிளையாடல்களும், திருக்குறளும், நக்கீரரும், பொற்றாமரைக் குளமும், சங்கமும் தமிழும், அருளும் பொலிவும், செந்துவர் வாய் உமையும் அவர் பங்கனும் அரசாளும் மதுரையை, நான் மாடல் கூடலை நினைவிலிருந்து இமையேனும் பிரிக்க முடியுமா?

நினைவில் நீங்காதது மதுரை ஆலவாய் அம்மையப்பன் ஆலய கும்பாபிஷேகம்.

போகத்தான் வேண்டும். இந்த இருபத்தி ஓராம் நூற்றாண்டில் மதுரை மாநகர் செல்லாமல் இருப்பேனா என்று பாடவேண்டிய அவசியம் இல்லை.

ஆயினும் புறப்பட வேண்டுமே – கடமையின் கட்டு வழி தர வேண்டுமே – அதன் மத்தியில் செல்ல வேண்டும் எனத் தீர்மானிப்பது எவ்வண்ணம்?

இந்த தடுமாற்றத்திற்கு வழிகாட்ட வந்தது போலும் நண்பர்களின் கேள்வி, "கும்பாபிஷேகத்திற்குச் செல்கிறீர்களாமே?"

கேள்விக்கு ஆம் என்றும் சொல்லவில்லை, இல்லையென்றும் சொல்லவில்லை, என்று பதில் தந்தேன்.

எனது சகோதரர், பிரயாணத்தை வாழ்வின் கண்ணாகக் கொண்டவர், மதுரையின் அன்புப் பிடிப்பினால், தன் பெயரையே மீனாட்சி புத்திரன் என மாற்றிக் கொண்டவர் இந்த நிலைக்கு சுலபமாக ஒரு முடிவு கண்டார்.

தன் நண்பர்களுடன் பிஞங்கில் பேசிக்கொண்டிருக்கும் போது என்னை கும்பாபிஷேகத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டும்; இதை உறுதியாகச் செய்ய வேண்டும் என ஒரு முடிவு செய்தார்.

அந்த முடிவை ஒட்டியே நானும் முடிவைச் செய்து பிரயாணத்துக்கு உரிய பத்திரங்களைப் பெற்றேன். சுங்கை சிப்புட்டில் இருக்கும் மா. கந்தசாமியும் கும்பாபிஷேகத்தை தரிசிக்க உடன வந்தார்.

கும்பாபிஷேகம் 28-6-63ந்தேதி—24-6-63ந்தேதி புறப்பட முடிவு.

இதுவரை நான் வெளியூர் சென்றவனல்லன்.

மதுரை மீனுட்சி சுந்தரேஸ்வரர் கும்பாபிஷேகத் திற்காக முதன் முறையாக நாட்டை விட்டுப் புறப்பட வாய்ப்புக் கிடைத்ததை பிறப்பின் பெரும் பயனுகக் கருதினேன்.

உறுதியாகப் புறப்படச் சொன்ன மீனுட்சி புத்திர னுக்கு மனதார நன்றியை உள்ளத்தில் செலுத்திக் கொண்டேன்.

நான் பிறந்த ஊர் சுங்கை சிப்புட்; அங்கு சென்று அன்னை மகா மாரியம்மன் வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ முருக பிரான், கந்தன்மலைக் காளியம்மை, ஆகியோரின் அன்பு ஆசிகளைப் பெற்றுக்கொண்டேன்.

இதற்கிடையில் ஸ்ரீ முருக பிரான் ஆலயத்தில் அன் பர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து வாழ்த்தி ஸ்ரீ முருக பிரானுக்கு பிரார்த்தனை செய்து உணவளித்து நல்லாசி கூறினர்.

# சென்னை வந்து சேர்ந்தேன்

24-6-63-ல திங்கட்கிழமை காலை தலைநகர் விமானத் திடலில் அன்பர் புடை சூழ நிற்கும்போது 'புறப்பட்டு விட்டோமே' என்ற நினைப்பு புதுமை உணர்ச்சியாயிருந்தது.

அன்று முதல் நாள் மாலை கோர்ட்டு மலைப் பிள்ளையார் கோவிலில் ரத்ன கிரீடதாரண வைபவத்தில் கலந்து கொண்டது நினைவில் இருந்தது. பக்த கோடிகளுக்கு வரையாது வழங்கும் கோர்ட்டு மலைப் பிள்ளையாருக்கு ரத்ன கிரீடத்தை எவ்வளவு பக்தி சிரத்தையுடன் கொண்டு வந்து காணிக்கையாகச் செலுத்தினர்கள்; கூட்ட மிகுதியினல் வணக்கம் செய்ய இடம் கிடைக்க முடியாது அன்னை மகா மாரியம்மன் ஆலயம் சென்று அர்ச்சனை செய்து வணங்கி வந்தபோது இங்கு விநாயகப் பெருமான் புதுக் கிரீடத்துடன் திரளான பக்தர் கூட்டமின்றி ஆனந்தமாய் காட்சி தந்து கொண்டிருந்தார்.

அவரை வணங்கி நல்லருள் பெற்று உள்ள நிறைவு கொண்டு இன்றைய பயணம் துவங்குகிறது.

சிங்கப்பூர் செல்பவர்கள் புறப்படவேண்டும் என்று ஒலி பெருக்கி மலாயிலும் ஆங்கிலத்திலும் சொல்ல மளமள எனப் பயணம் சொல்லி பிரயாணிகள் நுழைவாயில் வழியே விமானத்துள் நுழைந்தோம்.

இதில் பட்டிக் காட்டுத்தனம் ஏதேனும் இருக்கும் என்ருல் இதற்கு முன் நான் விமானத்தில் ஏறியதேயில்லை. ஆகவே புதிதாக நாட்டை விட்டுப்புறப்படும் எனக்கு விமானப் பயணமும் முதலாவது பயணம் ஆனது.

விமானம் வைகவுண்ட்; உள்ளிருந்தே விமானத் திடலில் நின்ற அனைவருக்கும் கைகளை ஆட்டி வாழ்த்துக் கூறினேன்.

புறப்பட்டது விமானம். மணி 10-00க்கு சிங்கை விமானத்திடலில் சேர்ந்தோம்.

அங்கு தவத்திரு ஸ்ரீ கரானந்த சுவாமியவர்கள் காத்திருந்து எங்களை இராமகிருஷ்ண ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

அங்கு இராமகிருஷ்ணர் முன்னிலையில் சென்று வணங்கி ஆசி பெற்றோம்.

ஸ்ரீ சுவாமி சித்தாத்மானந்தா, சுவாமி ஸ்ரீகரானந்தா ஸ்ரீ சுவாமி தாமோதரானந்தா ஆகியோர் நல்வாழ்த்துக் களைப் பெற்று அவர்கள் அன்னையின் அன்புடன் அன்னை யின் அன்புக் கரங்களுடன் அளித்த உணவை அருந்தி விமானத் திடலுக்குத் திரும்பினோம்.

மணி 1-45க்குப் புறப்பட்ட விமானம் இந்திய மணி 4-00க்கு சென்னை விமானத்திடலில் வந்து இறங்கியது.

87 டிகிரி சீதோஷ்ண நிலை என்று ஒலி பெருக்கியில் சொன்னார்கள்.

நல்ல சீதோஷ்ண நிலை என்றார் மீனாட்சி புத்திரன்.

மதுரையையும் இன்னும் பல புனித ஸ்தலங்களும், தீர்த் தங்களும் உள்ள தவ நாட்டில் அடி எடுத்து வைக்கிறோம் என்ற ஆனந்தம் மிகுந்தது. உள்ளத்தால் வணங்கி, வைத் திய, சுங்கப் பகுதியைத் தாண்டி காத்திருந்த அன்பர்கள் அன் பில் கலந்தோம்.

சென்சரி பிலவர் மில்ஸ் லிமிடெட் உயர்திரு மருதப் பிள்ளை அவர்கள் இல்லத்தை அடைந்தோம். அங்கு அவர் தாய்தந்தையரையும், சகோதரர் பி. கோவிந்தசாமி அவர் களையும் இல்லத்தினரையும் குழந்தைகளையும் கண்டு அளவளாவினோம்.

சென்னையில் முதல்க் கடமையாக திருவள்ளூர் செல்ல வேண்டும் என விரதம் ஏற்றிருந்தேன்; ஆகவே மாலை மணி 6-30க்கு திருவள்ளூர் புறப்பட்டோம்.

திரு. மருதப்பிள்ளை காரை வெள்ளையன் சாரதித்யம் செய்து வந்தார். பட்டாபிராமன, ராம நகர் என்ற ஊர் களைத் தாண்டி திருவள்ளூர் சேர்ந்தோம்.

என்னை அளித்த அன்னையை அளித்த திருவள்ளூரில் வீரராகவ சுவாமி ஆலயம் இருப்பதை அறிந்திருந்தேன். அங்கு ஆலய முன்னிலையில் நிற்கும்போது உள்ளம், பிறவி பயனுடையதாய் இருக்கவேண்டும் என வேண்டியது.

இதுதான் நான் இந்தியாவில் முதலாவதாக தரிசிக்கும் ஆலயம். ஐயன் ஸ்ரீ வீரராகவசுவாமி சயனத்தில் இருக்கும் திருக்கோலம். பக்தர் ஒருவர் சிரத்தில் ஒரு கை தவழ தரிசனம் தந்தார். அவர் முன்னர் உற்சவ மூர்த்தி; அன்னை பக்கலிருக்க அருள் பாலித்தார். இங்கு அர்ச்சனை செய்து பிரசாதங்களைப் பெற்று கனகவல்லித் தாயார் சந்நிதானம் சென்று வணங்கினோம். ஸ்ரீ ராமபிரான் கனக சீதாதேவியை உருவாக்கிய கட்டத்தைச் சொன்னார் ஆச்சாரியார். அழகும் அருளும் அன்பும் பொங்கும் திருவுருவம். அருளில் தோய்ந்து நின்றோம்.

முன்பு திருப்பதி சென்று வந்தபோது எனக்கு அர்ச்சனை செய்து தந்த ஞாபகம் தனக்கு இருப்பதாக அர்ச்சகர் சொன்னார். இதற்கு நான் ஒன்றும் சொல்லவில்லை. கனகவல்லித் தாயார் என்னைத் தாயாராக ஆட்கொண்டிருக்கலாம் அல்லவா?

ஆலயத்தில் ஒரு பக்கத்தில் அமர்ந்து பிரசாதங்களை சிறிது உட்கொண்டு மனநிறைவுடன் சென்னைக்குப் புறப்பட்டோம்.

சென்சரி ஹவுசில் வெளியிலிருந்து சில நண்பர்கள் வந்திருந்தனர், அவர்களில் முன்னாள் இங்கு இந்திய ஹைகமிஷனில் சிங்கையில் பணியாற்றிய திரு. சி. பி. மைக்கல் குடும்பத்தினரும் வந்திருந்தனர். வெகு நேரம் மலாயா இந்தியா பற்றி பேசிக்கொண்டிருந்து, நாளை சிதம்பரம் புறப்படப்போகிறோம் என்ற மகிழ்வில் துயில் கொண்டோம்.

## குருமணியை தரிசித்தோம்

அதிகாலையில் விழித்து விட்டேன், கதிரவனின் கிரணங்களுடன் புதுக்குரல்கள் கேட்டன; கா என்று கத்திடும்

காக்காய் இங்கு குறைவு. அங்கு மணிக்காக்காய்கள் பறந்து கொண்டேயிருந்தன. இடை இடையே குரல் எழுப்பிக்கொண்டிருந்தன.

திரு. ப. கோவிந்தசாமி [சம்பந்தி] அருகில் கந்த கோட்டம் இருப்பதை நினைவு படுத்தினார்கள். அனைவரும் காலையில் அங்கு சென்று ஆசிபெற்று மதுரை புறப்பட முடிவு செய்தோம்.

சந்தமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர் தல மோங்கு கந்தவேளை, தண்முகத்துய்ய மணியை, சண்முகச் சைவமணியை உண்முகத் தெய்வ மணியை, இராமலிங்க சுவாமிகள் உருகி உருகி வணங்கிய குருமணியைத் தரிசிக்கப் போகிறோம்.

ஆலயத்தில் நுழையும்போதே உள்ளம் இராமலிங்க சுவாமிகள் நினைப்பைக் கொண்டு வந்தது. பக்தர்கள் வணங்கும் காட்சி, வலம் வரும் காட்சி, அர்ச்சகர்கள் மந்திரமோதுதல், தெய்வ மணங் கமழ்ந்தது.

வினைக்கு முதல்வனை வணங்கினோம். கந்தவேளை வணங்கினோம்; ஏனோ ஆலயத்தை விட்டு வர மனம் வரவில்லை.

மதுரை செல்ல வேண்டுமே திருவருள் முன்னின்று தாயாகத் தந்தையாகத் தாங்கவேண்டும், எண்ணிய யான் எண்ணியவாறு எனக்கருள வேண்டும் என வேண்டி சென்சரி ஹவுஸ் திரும்பினோம்.

திரு. கோவிந்தசாமி மேற்பார்வையில் காலை சிற்றுண்டி பலமாக நடந்தது. பிரயாணத்தில் அலுப்பு தோன்றாமலிருக்க யோசனைகளைச் சொன்னார். ஒரு பிளாஸ்க் நிறைய தண்ணீர் கொடுத்தார்.

உயர்திரு. ஆறுமுகம்பிள்ளை அவர்களின் அம்பாசிடர் காரில் ராஜாமணி சாரதித்யம் செய்ய வாழ்த்துக்களுடன் புறப்பட்டோம். சிதம்பரம் சென்று தஞ்சை திருச்சி திருப்புத்தூர் வழியே 27 ந்தேதியன்று மதுரை மாநகர் செல்ல வேண்டுவதே குறிக்கோள்.

## குயிலுடன் கொஞ்சினோம்

வழியில் சுத்தானந்தக் குயிலைத் தரிசிக்கச் சென்றோம். இதற்கு எங்களுடன் ஈப்போ திரு. எம் எஸ். கந்தையாவும் வந்திருந்தார். சுத்தானந்த பாரதியார் முதன் முறையாக மலாயா வந்திருந்தபோது ஈப்போவில் ஒப்பற்ற ஒரு வரவேற்பை அளிக்க முன் நின்று பணியாற்றியவர் திரு. எம். எஸ். கந்தையா.

யோக சமாஜத்தில் நல்ல வேலையாக அவர் இருப்பதை அறிந்தோம்.

நாங்களாகவே அறிவிப்பின்றி மேல் செல்வதாகச் சொல்லிச் சென்றோம். மாடி செல்வதற்கு முன் "சுவாமி, மீனாட்சி புத்திரன்" என்று மீனாட்சி புத்திரன் குரல் கொடுத்தார். ஆஹா, எப்ப, வாங்க" என்று யோகியாரின் மணிக் குரல் கேட்டது.

"சுவாமி, மீனாட்சி சுந்தரம்" என்று நான் குரல் கொடுத்தேன், நீங்களா, ஆகா ஆச்சரியம் வாங்க" என்ற நாதம் பிறந்தது.

"சுவாமி எம்.எஸ். கந்தையா" என்ற குரல் எழுந்தது 'அடடா, எல்லோருமா, வாங்க" என்று உத்தரவு வந்தது.

உள்ளே சென்றோம். சுறுசுறுப்பு வடிவாய் மஹரிஷி விளங்கினார்.

அன்னை மீனாட்சியம்மனின் அழகிய பழைய படம் அவர் பின் இருந்தது. மேலே குருவி ஒன்று கூடு கட்டியிருந்தது. புத்தகங்கள், எழுத்துக்கள் தாள்கள், கட்டுக்கள் சுவாமி படங்கள்.

கீழே அச்சகத்தில் வேலை நடக்கிறது.

இடை இடையில் புரூப் வந்து செல்கிறது.

சீட்டியை எடுத்தார் குயில். ஊதினார், சமாஜவாசி ஒருவர் வந்தார். வாழைப்பழம் நன்னீர் கொண்டு வரச் சொன்னார். குயில் சாரணர்களின் டிஸ்ட்ரிக் கமிஷனராயிருந்தது நினைவுக்கு வந்தது.

அவரது புது எழுத்துக்களைப் பார்த்தோம்; அவர் எழுதி வைத்து பிரசுரமாகவேண்டிய மலையை நோக்கினோம். சிறு வயதில் அவருக்கு கிடைத்த புத்தகங்களை பொன்போல் போற்றி வைத்திருக்கிறார்.

துடிதுடிக்கும் அவர் மூலமாக அவர் உள்ளத்தை உணர்ந்தோம். காய்ந்த எளிய நிலக்கடலையை அருந்திக் கொண்டு எழுத்தருவி மூலம் புதுக்கருத்தை வழங்கும் அவரைப் பார்த்துக் கேட்டுக் கொண்டேயிருந்தோம்.

காலையில் கந்த கோட்டம் சென்று வந்ததைக் கூறினோம். வழியில் அவசியம் வடலூர் சென்று போகப்பணித்தார்.

பிரிய முடியாது, உத்திரவு பெற்று சுத்தானந்தரின் மகத்தான உள்ளத்தில் பொங்கும் இசையில் நீந்திப் புறப் பட்டோம்.

பிரபல கூவம் நதியைக் கடந்து, இதைவிடச் சிறிதாய் இருக்க முடியாது என்ற குடிசைகளையும், பெருங்கட்டடங் களையும், பனைமரங்களையும், பெரும்பாலும் ஆங்கிலத்தில் முத லில் தோன்றிய பெயர் பலகைகளையும் விளம்பரங்களையும் ரசித்துக் கொண்டே செங்கற்பட்டு வந்து சேர்ந்தோம்.

இங்கு காருக்கு பெட்ரோல் போட்டுக் கொண்டோம். மலைநாடு வார இதழுக்கு கலை உலகம் எழுதும் சென்னை வாசியின் இருப்பிடம் செங்கற்பட்டு. இங்கு இவருக்கு ஒரு கடிதத்தை வைத்துப் புறப்பட்டோம்.

## அகந்தை பறந்தது

வழியில் அச்சிறுபாக்கம் சென்றோம்.

கங்கைக்கும் அச்சிறுபாக்கத்திற்கும் இரண்டாயித் துக்கு மேற்பட்ட மைல் தூரம். பாண்டியன் ஒருவன் கங்கை யிலிருந்து மணல் கொண்டு வருகிறான் ஆலயம் கட்டுவதற்கு.

வைகையில் மணல் இல்லாமலா இருக்கிறது. ஆனால் புனித ஆறுகளில் ஒன்று கங்கை; அதன் மணலும் தான் கட்டு

விக்கும் ஆலயத்தில் சேர வேண்டும் என்ற நினைப்பு இந்தச் செயலில் இவனைத் தூண்டியிருக்க வேண்டும்.

மணல் கொண்டு வந்த வண்டியின் அச்சு இந்த பாக்கத்தில் இற்றது. ஏன், எனக் கவலை கொண்டான்.

இதை அடுத்து இங்கு ஆலயம் கட்ட உறுதி கொண்டதால் இந்த ஆலயம் எழுந்தது.

அன்னை இளங்கிளியம்மை சந்நிதானத்தில் வீற்று ஸ்தலப்பாடல்களைப் படித்து ஆலய வலம் வந்து தல விருட்சமாகிய கொன்றையை வணங்கினோம். வணங்கும்போது விளக்கு வைக்கும் பொந்திலிருந்து விழித்துப்பறந்தது ஆந்தை ஒன்று.

கங்கையிலிருந்து மணல் கொண்டு வருகிறோம் என்ற பெருமை தோன்றியதால், அகந்தை ஏற்பட்டதால் இந்த இடத்தில் வண்டியின் அச்சு முறிந்ததா?

இருந்திருக்கலாம். நாங்கள் வணங்கும்போது இருட்டுக் குருவியாகிய ஆந்தை பறந்ததை அகந்தை பறந்ததாக எண்ணிக் கொண்டோம். பயணத்தில் தரிசிக்கும் முதல் ஆலயம் அகந்தையை அகற்ற நிதர்சனமாய் சுட்டிக் காட்டியதே என எண்ணி இன்புற்றோம்.

அச்சிறுபாக்கம் பாடல் பெற்ற ஸ்தலம். நாங்கள் தரிசிக்கும் முதலாவது பாடல் பெற்ற ஸ்தலம் இதுதான்.

வழியில் செங்கற்பட்டை அடுத்த ஊரில் உணவருந்தினோம்.

இதுதான் முதன் முறையாக சாப்பாட்டுக் கடையில் நாங்கள் சாப்பிடுவது. இங்கு உணவு நன்றாக இருந்தது.

வடலூர் செல்லாமல் கடலூர் வழியே சிதம்பரம் செல்லலாமா என்ற யோசனை இடையில் வந்தது. இந்த யோசனையுடன் முச்சந்தியில் திரும்பியபோது இருபுறம் குளிர் நிழல் தந்து வந்து புளியமரம் ஒன்றின் கீழ் குளிர்பானக் கடை ஒன்றில் தாகத்தைத் தணிக்க இறங்கினோம்.

புளிய மர நிழலில் கடையும் அதை ஒட்டிய வீடுகளும் இந்தியாவின் ஒரு ரக வாழ்க்கையைக் காட்டியது. ஐசுக்குப் பதிலாக தண்ணீரில் கலர் போத்தல்கள் குளிராகிக் கொண்டிருந்தன.

## தடுத்தாட்கொண்டார்

இவற்றை நோக்கிய கண்களை வலப்பக்கம் திருப்பினேன். கைகாட்டும் பெயர் பலகை திருவெண்ணெய்நல்லூர் என்று காட்டியது. "திருவெண்ணெய் நல்லூர்" தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட் துறையுள் அத்தன் உள்ள ஊர். சுந்தரரைத்தடுத்து ஆட்கொண்டு அருளிய ஊர்.

வடலூர் செல்லும் காரை புளியமரத்தடியில் குளிர் பானக் கடையைக் காட்டி தாகத்தை ஏற்படுத்தி, தடுத்து திருவெண்ணெய் நல்லூரைக் காட்டிய திருவருளை 'பித்தா, நீ பெரும் பித்தன்; பித்தின்றியா அன்பர்கள் பால் இத்தனை இரக்கங்கொண்டு வழி காட்டுகிறாய்; தடுத்து ஆட் கொள் கிறாய்' என்ற நினைப்பு,

கார் திரும்பி திருவெண்ணெய் நல்லூர் புறப்பட்டது.

திருமணப்பந்தலில் மணக்கோலத்தில் திருப் பூட்டும் நிலையில் உள்ள சுந்தரரை அடிமை என ஓலை காட்டி நிரூபித்து இல்லத்தைக்காட்ட அழைத்து வந்த அந்த நாளை எண்ணினேன். என்ன கலவரம மிகுந்திருக்கும் பந்தலில்; பெண் வீட்டாரும்' பிள்ளை வீட்டாரும் என்ன தடுமாற்றம் அடைந்திருப்பார்கள். வாது செய்ய வந்த கிழவனாரும் விடாப்பிடியாக தர்க்கம் செய்து தன் அடிமைச்சீட்டு ஓலையை நிலைநாட்டி மாப்பிள்ளைக்கு தன் வீட்டைக் காட்ட அழைத்துச் செல்லும்போது என்ன போராட்டமாயிருந்திருக்கும். கிழவனார் சீட்டை ஆட்டி வேகமாய் முன் செல்ல "என்ன பித்தனிவன்" என்று சுந்தரர் பின் தொடர்ந்து உறவினரும், திருமண விருந்தினரும், ஊர் மக்களும். செல்ல.... அந்த வழியிலே நாமும் வயோதிகர் வீட்டை நோக்கப் போகிறோம்...

ஆலயத்தை அடைந்தோம். முகப்பில் சுந்தரர் தொடர்ந்து செல்ல ஆலயத்தை அடைந்ததும் வயோதிகர் மறைந்ததும் சுந்தரர் திகைப்புற்று நின்ற இடத்தை தரிசித்

தோம். ஆலயம் நுழைந்ததும் காட்சி தந்தவழக்கு மண்டபத் பார்த்தோம். இது தற்சமயம் பழுதான நிலையில் உள்ளது.

மணக்கோலத்துடன் நிற்கும் சுந்தரரையும் தடுத்தாட் கொண்டேசுவரரையும், வேற்கண்ணியம்மையும் தரிசித்து பிரசாதங்களை அணிந்து எங்களையும் தடுத்து ஆட்கொண்ட பெரும் பெருமையையும் கருணையையும் எண்ணி வழி திரும்பிச் செல்லும்போது சுந்தரர் திருமணம் நடைபெறவிருந்த ஊரை யும் தரிசித்து பண்ணுருட்டி சேர்ந்தோம்.

## வடலூர் வழியே தில்லைமாநகர்

பண்ணுருட்டி பலாப்பழப்பாட்டைப் பாட ஆரம்பித் தார் மீனாட்சிபுத்திரன்.

நான் காப்பிப்பாட்டை பாட ஆரம்பித்தேன். பத்மா விலாசில் தோசையும், பலகாரமும், காப்பியும் உட்சென்றது. காப்பி நன்றாயிருந்தது. இன்னுமொரு காப்பி கேட்டேன். முதல் டம்ளரின் ருசி இல்லை; மற்றுமொன்று கேட்டேன்; முதல் ருசி கிட்டவில்லை. ஆசைக்கோரளவு வைக்கவேண்டும் என்பதற்கு பாடம் போலும் என நினைத்தேன். மீனாட்சி புத் திரன் பலாக்கடைகளை வட்டமிட்டார்; அவரை நாங்கள் வட்டமிட்டோம். காருக்குப் பின் சில பலாப்பழங்கள் மாறின. பலாப்பழத்தை உடைத்து விற்பதைப் பார்த்தேன். அதைச் சுற்றி வட்டமிடும் ஈக்களின் தொகையைக் கணக்கிட யாரால் முடியும்?

வடலூர் செல்லாமல் கடலூர் வழியே செல்லலாம் என நினைத்த எங்கள் சபலம் இங்கு முற்று பெற்றது.

வடலூர் வழியே செல்வதுதான் சுருக்கமான நல்லவழி என்பதை இங்கு உறுதியாகச் சொன்னார்கள். சுத்தானந்தர் சொல்லிய யோசனையை மீறாமல் இருக்க, வழி சொன்னவர் கள் உதவினார்கள்.

ஞான சபை உள் நுழைந்தோம். இராமலிங்க சுவாமி கள் உள்ளத்தை உணர்வதற்கு அறிவைப் பெறுவது எந்தக் காலம்.

வலம் வந்தோம்; வணங்கினோம். அருட்ஜோதி மாலை விற்றுக்கொண்டு அன்பரிருவர் இருந்தனர். அளவளாவினோம். அவர்கள் இராமலிங்க சுவாமிகள் பாடல்கள் சிலவற்றைப் பாடினர். இதயங்களில் ஒரு அமைதி நின்றது. வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்; தாயாக எனை வளர்க்கும் தெய்வமதே தெய்வம், சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம் என்ற அடிகள் உள்ளத்தில் நடமாடின. சிற்சபை தில்லையை நினைவுக்குக் கொண்டு வந்தது.

புறப்படும்போது இராமலிங்க சுவாமிகள் வணங்கிய கந்த கோட்டம்; இதோ வடலூரில் இராமலிங்க சுவாமிகள் வளர்த்த சபையில் நின்று அடுத்து தில்லைச்சிற்றம்பலம்.

## தில்லைச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலவனார் அருள் பாலிப்பதில் இன்புற இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே எனவும் எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே எனவும் மனித்தப் பிறவியும் வேண்டும் எனப் பாடச் செய்து அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற எம்பெருமானைத் தரிசிக்கப்போகிறோம்.

நாளைப்போகாமலிருப்பேனா, தில்லைச்சிதம்பரம் போகாமலிருப்பேனா என்று ஊன் உயிர்க்கும் பொழுதெல்லாம் உருகி நந்தன் தில்லைச்சிற்றம்பலத்துக்கு இப்படித்தானே ஒரு வழியாக நடந்து சென்றிருக்கவேண்டும்.

நந்தன் நடந்த ஒவ்வொரு அடியும் எப்படி இருந்திருக்கும். இறைவன் என்றால் குழையும் உயிரைப்பெற்ற இந்த உத்தமோத்தமர் உருகி, உருகி அப்பனே உன்னை நெருங்குகிறேன் என பேரானந்தத்துடன் சென்றிருப்பார், கோபுரம் தெரிந்ததும், என்ன ஆனந்தம் அடைந்திருப்பார். வணங்கியிருப்பார், ஆடிப்பாடி இருப்பார்.

மதுரைதந்த அமைச்சர் மணிவாசகப் பெருமான் தேனினுமினிய திருவாசகத்தைப் பாடிக்கொண்டே இப்படித்

தானே நடந்து சென்றிருப்பார். அவர் எழுத்தில் ஐயன் மயங்கிதானே வந்து பிரதி எடுப்பார் ஒன்பது அவருக்குத் தெரியாது. அம்பலத்தே ஆடுகின்ற அவரையும் அன்னையையும் எண்ணி எண்ணி இன்புற்றுப் பாடிச் சென்றிருப்பார்.

ஆலயங்களுக்கு நடு நாயகமாக விளங்கும் தில்லை செல்லும் வழி இதுதானு? ஐயன் ஆனந்தக் கூத்தாடும் பொன்னம்பலம் செல்லும் வழி இதுதானு? என்ன இன்பம் தருகிறது இந்த நினைப்பு எல்லாம்.

சிதம்பரத்துக்கு ஐந்து மைல் தூரத்தில் ஒரு யாத்ரீகர் இல்லம். இங்கு சிரம பரிகாரம் செய்து உடை மாற்றி நேரே தில்லைச் சிற்றம்பலம் செல்ல திட்டமிட்டோம்.

இல்லத்தில் ஞானசம்பந்தன் என ஒரு அதிகாரி தங்கியிருந்தார்; அவர் அன்புடன் இல்லத்தை உபயோகிக்க உத்திரவு தந்தார்.

குளித்தோம் – சிற்றம்பலவா, உன் கிருபையால் இன்று உன்னை அடைய ஐந்து மைல்கள் தூரத்திலிருக்கிருேம். உன்னை தரிசிக்க 46 ஆண்டுகள் காக்க வைத்திருந்தனை போலும். ஐயனே, அணங்கொடு, சிவகாமசுந்தரி அன்னையொடு நின்னை தரிசிக்கும் வாய்ப்பைப் பெற என்ன தவத்தை எப்பொழுது செய்தேனே.

சிதம்பரத்தை நெருங்கும்போது மாலைமணி 7-00 இருக்கும். ஆனித்திருமஞ்சன விழாக்காலம்; நாளைக்கு மாணிக்க வாசகர் குருபூஜை.

தில்லைக் கோபுரம் மனிதனின் உன்னத எண்ணம் இறைவன் திருவடிகளைத் தொட முயல்வது போல வானை நோக்கி அழகுடன் எழுந்து காட்சி தந்தது.

தில்லைக்கூத்தன் கோபுரம் இது, ஒப்பற்றது அல்லவா? தெரிசனம் செய்தோம். அம்மையப்பன் ஆலயத்தை நெருங்கினோம்,

கோபுர வாயில் வழியே உள் நுழையும் போது மனித் தப்பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே என உணர்வு வந்தது.

எத்தனை பக்தர்கள் போற்றிய இடம்.

இருபுறமும் கடைகள்; இவற்றைத்தாண்டி முதல் பிர காரத்தை அடைந்தோம்.

என்ன ஆனந்தம் உள்ளே பாய்கிறது. தரையிலே வீற்று திருவாசகம் பாடினோம். தேவாரம் பாடினோம்.

ஊன் நிலாவி உயிர்க்கும்
பொழுதெல்லாம்
நான் நிலாவி இருப்பேன்
என் நாதனை......

ஆஹா, நாதன் உறையும் பொன்னம்பலம்.

கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரக தத்தை இங்குதானே கண்டார்கள் அடியவர்கள்.

மழை பெய்ய ஆரம்பித்தது. தில்லைக்கூத்தன் ஆலயத் தில் பெய்யும் மழை அருள் மழையல்லவா? வீற்றிருந்து பாடினோம்.

மனித சபலம் இடையில் வந்தது. மழைக்குப் பயந்து ஒதுங்கினோம்; மழை ஓய்ந்தது.

உள்ளே புகும் பேற்றைப் பெற்றோம்.

நடராஜர் சந்நிதானத்தில் பக்தர்கள் கூட்டம்; அவர் களுடன் சேர்ந்து கொண்டோம். வெள்ளிவாயில் பூட்டியிருக் கிறது. பூஜை இனி நடக்கும். கதவுகள் திறக்கும்; தீப ஒளி யில் சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான் திருக் காட்சி தருவார்.

என்ன பொருத்தமான சமயத்தில் வந்துள்ளோம். பக் கத்தில் முன்னால் பின்னால் பக்தர்கள். சிலர் பாடுகின்றனர் சிலர் மந்திரம் ஓதுகின்றனர்; கைக்கூப்பியவர் சிலர்; உருகி நிற்பவர் சிலர். இவர்களை தரிசித்தோம். சந்நிதானத்தை நோக்கி ஏங்கி நின்றோம்.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் புரிந்து நீ பாவி யேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி 'பெருக்கி உலப் பிலா ஆனந்தமாயதேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த

செல்வமே சிவபெருமானே யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன், எங்கெழுந்தருளுவதினியே என்றெல்லாம் பாடிநின்றோம்.

வெள்ளி வாயில் திறந்தது. கண்டாமணி பொறுத்து உள்ளத்தில் 'ஓமொலி' எழுப்பி ஒலிக்கிறது. தீப ஒளியில் நடராஜப் பெருமான் அன்னையுடன் அருள் பாலிக்கிறார்.

விபூதிப் பிரசாதம் பெற்று நமசிவாய வாழ்க என அணிந்து கொண்டோம்.

இதற்குப் பின் அர்ச்சனைகள் செய்தோம். நர்த்தன கணேசருக்கும் சிவகாமி சுந்தரி அன்னைக்கும் நடராஜப் பெருமானுக்கும் செய்தோம்.

சித்ர கூடத்தில் விளங்கும் கோவிந்தராஜப் பெருமானுக்கும லட்சுமித் தாயாருக்கும் செய்தோம்.

ஓடும் நேரம், ஓடும் காலம் நடு நாயகமாகிய தில்லையில் இன்னும் கூட நேரம் இருக்க வழி தராதா என ஆசை கொண்டோம்.

உயர்திரு. சிவசாமி தீட்சிதர் அவர்கள் அன்புடன் எங்களோடு அளவளாவினார். மாதம் தோறும் அர்ச்சனை செய்து விபூதி பிரசாதங்களை அனுப்பி அருள்தரும் புனிதர் இவர். ஆலயத்துக்கு வெளியில் வந்து ஸ்ரீ முருக பிரான் சந்நிதானத்தில் அமர்ந்து நன்னாரிவேர் சர்பத்தை அருந்தினேன். மீனாட்சி புத்திரன் முதலியோர் மாம்பழ ரசம் அருந்தினார்கள், ஆனந்தமாயிருந்தது.

ஆலயத்தை விட்டு ஒரு வழியாகப்பிரிந்து அண்ணமலை நகர் சென்றோம். கல்விக்கோயிலாகிய அண்ணமலை சர்வகலாசாலை விருந்தினர் விடுதியில் தங்க மீனாட்சிபுத்திரன் ஏற்பாடு செய்திருந்தார்.

அங்கு சென்று உணவருந்தி தில்லை நகர் வீதிகளில் சுவாமி வீதி உலாவருதலைத் தரிசிக்கச் சென்றோம்.

கைலைமலையைத் தூக்கும் பத்துத்தலை இராவணன். இறைவன் பாதவிரல் அழுத்த நசுங்கி விழிக்கும் இராவணன் தன்தலை ஒன்றைக் கிள்ளி நரம்புகளைப் பிய்த்து சுதி சேர்த்து சாம கீதம் பாடுகிறான். வாகனம் தங்க வாகனம்.

மேலே இறைவன் அம்மையுடன் வீற்றிருக்கிறார்.

இந்த உன்னத உற்சவ முர்த்தி, ஸ்ரீசண்டிகேசுவரர், விநாயகப் பெருமான், சுப்ரமண்யர், இன்னும் பலர் புடை சூழ சகடையில் ஊர்வலம்.

முன்னல் நாதஸ்வரம் இசை வழங்குகிறது பக்தர் திரள்.

காட்சியில் கலந்து நின்றோம்.

## பித்தற்குப் பல்லாண்டு

சேந்தனர் ஞாபகம் வந்தது. பல்லாண்டுகளுக்கு முன்னர் இத்தகயை ஒரு உலாவரும் போது தேர் அசையாமல் நின்றது.

ஏன் என முயன்றும் ஒன்றும் முடியாதுபோக "சேந்தன் பல்லாண்டு பாடட்டும்" என்ற அசரீரி பிறந்து விறகு வெட்டி விற்கும் சேந்தனர், கூட்டத்தில் எங்கோ நின்ற சேந்தனர், ஒருவரும் அறியாத சேந்தனர், தனித்து பொறுக்கி எடுக்கப்பெற்று மக்கள் முன்தோன்றி பல்லாண்டு பாடினர்.

சேந்தனர் 13 பல்லாண்டுகள் பாடினர். இறைவனல் பொறுக்கி எடுக்கப்பெற்று, தன் உலாவின் போது பல்லாண்டு பாடப் பணிக்கப்பெற்று சேந்தனர் எப்படிப் பாடியிருப்பார்.... என்ன மனே நிலையிலிருந்திருப்பார்... மக்கள் திரள் எவ்வண்ணம் அவரை நோக்கி பின் வந்திருக்கும்....

இதே வீதிகளில் தானே இதெல்லாம் நடந்திருக்கும்....

...பண்டுமின்றும் என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே...

பல்லாண்டு கூறுவோம்; பித்தற்குப் பல்லாண்டு பல்லாண்டு கூறுவோம்.

சிவசாமி தீட்சிதர் அவர்கள் எங்களை ஸ்ரீ நடராஜ வித்யா சபை காரியதரிசி தீட்சிதர் அவர்களிடம் அழைத்துச் சென்றார்.

அவர்களுடன் அன்புடன் அளவளாவினேம் ஸ்ரீ குஞ்சிதாங்கிரிஸ்தவம் எனும் அரிய நூலை வழங்கினர்.

## திருப்பணி சபையில் சேர்வோம்

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயில் திருமதில் சபை பற்றிய விபரங்களை இவர்கள் மூலமாகத் தெரிந்துக் கொண்டேன். இதற்கு ஆவன செய்யுமாறு என்னையும் பணித்தார்கள்; தில்லையில் இத்தகைய பணிப்பு ஏற்பட்டதே என ஆனந்தமடைந்தேன்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயிலின் திருமதில், அவற்றைச் சேர்ந்த முகப்புமண்டபங்கள். கோபுர வாயில்கள் வரை, நடைவழிகள், இவைகளைப் பழுது பார்த்தும், புதுப்பித்தும், பாதுகாவல் செய்தும் வர வேண்டியதற்கு சந்தா, நன்கொடை முதலிய உதவிகளைக்கொண்டு பூர்த்தி செய்தலும், இது சம்பந்தமான திருப்பணிகள நிரந்தரமாய் நடைபெற்றுவர, பாதுகாவலோடு கூடிய வழிகள் செய்தலும், இச்சபையின் உன்னத நோக்கமாகும்.

இதற்கு நல்ல ஒரு திட்டத்தை வகுத்துள்ளனர்.

இந்தக் குறிக்கோளில் பற்று கொண்ட நல்லன்பர்கள் (யாருக்குத்தான் தில்லை திருப்பணியில் ஈடுபட ஆவல் இருக்காது) மூன்று வகையாக அங்கத்துவம் பெறலாம்.

(1) சாதாரண அங்கத்தினர்.

இந்த சபைக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ101 வீதம் கொடுக் அன்பர்கள் சாதாரண அங்கத்தினர்கள்.

(2) ஆயுள் அங்கத்தினர்

ஒரு சேர இரண்டாயிரம் ரூபாயும் அதற்கும் மேலும் கொடுக்கும் அன்பர்கள் ஆயுள் அங்கத்தினர்கள். இந்தத் தொகையை செலவிடாமல், அதை நிரந்தரமான நிதியாக தகுந்த பந்தோபஸ்துடன் வைத்து, அதன் வரும்படியை மட்டிலும், வருஷவாரி செலவு செய்ய உபயோகித்தல்.

(3) கௌரவ அங்கத்தினர். இச்சபையின் திருப்பணிகளுக்குப் பெரும் பொருளுதவி செய்பவர்கள் கௌரவ அங்கத்தினர்கள். இவர்கள் கொடுக்கும் தொகையானது அப்பொழுதே பூராவும் செலவு செய்யப்பெறும்.

இந்தத் திருப்பணி அலுவல்களுக்கு ஆவன செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் எழுந்தது.

தில்லைச் சிற்றம்பலத்தில் நடைபெறும் திருப்பணியில் பங்குபெற வாய்ப்புக் கிடைப்பது பிறவி தரும் பயன் அல்லவா?

காலையில் புறப்படவேண்டும். இவர்களிடம் அன்புடன் பிரியாவிடை பெற்றுக்கொண்டோம்.

நாளை மணிவாசகர் குரு பூஜை ஆதலால் தில்லையிலேயே திருவாசகம் ஒன்று வாங்க எண்ணி தீட்சிதர் ஒருவர் மூலம் பூட்டிய கடையைத் தட்டி திருவாசகம் வாங்கினோம்.

திரு. சிவசாமி தீட்சிதரிடம் பயணம் சொல்லி பஞ்சமூர்த்திகளை மீண்டும் தரிசித்து, மீண்டும் தில்லை வந்து நின்னருளில் கலக்கவேண்டும் என திடம் செய்துகொண்டு அண்ணமலை நகருக்கு இரவு 2-00 மணிக்கு வந்து சேர்ந்தோம்.

இரவில் தூக்கம் வர மறுத்தது.

தில்லையில் வாணம் பாய்ச்சும் ஓசை கேட்கிறது. வெளியில் சென்று தில்லையை நோக்கி நின்றேன். இடையிடையே வெடிச் சத்தம்; ஒளி; நேரமானது. அங்கு அம்மையப்பன் மத்தியில் நிற்காமலிருக்கிறோமே என்ற ஏக்கம் பிடித்தது.

ஒரு வழியாக நித்திரை கொள்ளச் சென்றேன்.

காலையில் அண்ணமலைநகர் பொலிவுடன் காட்சி தந்தது. கல்வித் தெய்வத்தின் நகரில் இருப்பதுபோலிருந்தது. இங்கு அதிக நேரம், இருந்து சுற்றிப்பார்க்க இயலவில்லையே எனக் கவலை வந்தது. பேராசிரியர் மீனாட்சி சுந்தரம் அவர்களைப் பார்க்க விரும்பினோம். ஆனால் அவர் வெளியூர் சென்றிருந்ததால் இந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.

## அம்மா, அப்பா

அன்புடன் அளித்த சிற்றுண்டியை அருந்தி அண்ணுமலை நகருக்கும் சிதம்பரத்துக்கும் வணக்கம செலுத்திப் புறப்பட்டோம், அம்மையப்பா என அமுது ஞானப்பால் பெற்ற சீர்காழியை நோக்கி....

தோடுடைய செவியன் என்ற திருமுறைப் பாடலைக் கேட்டிருக்கிருேம்; அது திருஞான சம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளியது என்பதை அறிந்திருக்கிருேம்.

எல்லா இடங்களும் நல்ல இடங்களே. சீர்காழியும் பல பதிகளில் ஒன்றுதான். எல்லா ஊர்களிலும் உள்ளது போல இவ்வூரும் உத்தமர்கள் உள்ள ஊர்தான்.

இதில் ஒரு சிறந்த உத்தமர், சிவபாத இருதயர் எனும் பெயர் உள்ளவர். சிவனது பாதத்தை இருதயத்தில் நிலை நாட்டும் நினைப்பு எத்தகைய நினைப்பு? இது எளிய நினைப்பா? சிவபாத இருதயரின் தந்தையார் இந்தப் பெயரை மைந்தனுக்குச் சூட்டியிருக்கின்ருர். அவர் எவ்வளவு தூரம் சிவனது பாதங்களை துணையெனக் கொண்டிருக்க வேண்டும்.

சிவனது திருவடிமலர்களை வேண்டி. இந்தக் குடும்பத்தினர் எத்தனை தலை முறைகளாக வந்தனை செய்திருக்க வேண்டும்?

இவரது இல்லக் கிழத்தியார் உத்தமியார் பகவதி எனும் நாமம உடையவர்; இவர்களுக்கு மூன்று வயதுள்ள பையன் ஒருவன்.

சூட்டிக்கான பையன். அழகிய வதனம்; பிஞ்சு மொழிகளால் தாயும் தந்தையும் பாடும் பாடல்களை ஒப்புவித்து இன்பந்தரும் செல்லக்குழந்தை.

சிவபாத இருதயர் காலையில் துயில் களைந்து, சீர்காழி ஆலயத்தில் உள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி பிரம்ம புரீசுவரரையும் திருநிலைநாயகி அன்னையையும் தோணியப்பரையும் பெரியநாயகியையும் வணங்குதல் தவருத வழக்கம். 4-30 மணிக்கு இவர் தன்னை இந்த நித்திய கடமையில் செலுத்தி விடுவார். இவரைப் போல இன்னும் பலர் பிரம்ம தீர்த்தத்தில் நீராடி வணங்குவது வழக்கம்.

ஒருநாள் காலை குழந்தை விழித்துக்கொண்டு தானும் தந்தையுடன் வருவதாகப் பிடிவாதம் செய்தது. மூன்று வயது குழந்தையை 4-30 மணிக்கு தீர்த்தத்துறைக்கு அழைத்துச் செல்ல தந்தையார் விரும்பவில்லை; அன்புடன் குழந்தையை துயில் கொள்ளச் சொன்னூர்; அன்னை பகவதியும் அப்படியே சொன்னூர்கள்; குழந்தை பிடிவாதம் செய்தது. வரத்தான் செய்வேன் என அடம் பிடித்தது.

சிவபாத இருதயர் நெறிதவருதவர். நேரத்தை குழந்தையை சரிப்படுத்துவதில் செலவிட விரும்பவில்லை. குழந்தையை ஏந்திக்கொண்டு அம்மையப்பன் நாமத்தை உள்ளத்தில் கொண்டு ஆலயத்தினுள் நுழைந்தார்.

காலை மணி 4-30; இருட்டான நேரம். சிறு பிள்ளைகள் வரும் நேரமா? என்ன பிடிவாதம். குழந்தையைப் பார்த்தார். அவன் பைம்முகம் உடன் வருகிரேம் என்ற மலர்ச்சியில் மலர்ந்திருந்தது. அப்பாவிடம் ஏதேதோ பேசிக்கொண்டே வருகிருன்,

பிரம்ம தீர்த்தத்தை நோக்கினூர். உள்ளம் சிலிர்த்தது. வற்ருத இந்த தீர்த்தம் வாழ்விற்கு அமுதாக, பிறவி பயனடைய, பிணியகற்றி புனிதந்தர வாய்த்ததே; சீர்காழியில் பிறந்தது என் முந்தைய நல்வினை. தீர்த்தத்திலிருக்கும்போது, நின் கோபுர தரிசனமும், நின் நினைவு மன்றி யாதுமிலை......

பையனை செல்லமாய் படிக்கட்டில் உட்கார வைத்தார். இதோ கணத்தில் குளித்து வருகிறேன்; சமத்தாயிருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். "சரிப்பா" என பிள்ளை சொன்னதில் அரை திடம்பெற்று தீர்த்தத்தை வணங்கி, நாமத்தை உள்ளடக்கி நீராடினூர்.

....குழந்தை கொஞ்சநேரம் அப்பா சென்ற வழியே பார்த்திருந்தது; தண்ணீரில் இறங்கியதைப் பார்த்தது. இருட்டில் சரியாக தெரியவும் இல்லை; இன்னும் பலர் தண்ணீருள் இறங்குவதையும் பார்த்தது.

அப்பா தலையை தண்ணீருள் புகுத்துகிறார்; தலையை வெளியே எடுத்தாரா இல்லையா? குழந்தை இந்த வேடிக்கையில் நேரத்தைப்போக்கியது.

## பால் ருசிக்கிறது!

பசி ஒரு புறம் வர ஆரம்பித்தது. அப்பா என அழைத்தது.

தண்ணீரில் நீராடும் ஆசையில் அப்பாவுக்கு குரல் கேட்கவில்லை. பதில் கிடைக்காது போகவே வேகமாய் அழைத்தது.. பதில் இல்லை; பசி ஒரு புறம்; பீதியும் வந்திருக்கும். அம்மாவைக் கூப்பிட்டழுதது. அப்பாவையும் கூவியது.

பிரம தீர்த்தத்தில் இந்தக் குழந்தை அம்மே, அப்பா எனக்கதறியது.

என்ன குரல்; என்ன ஏக்கம்; என்ன கனிவு. கெஞ்சும் குரல் இது உள்ளத்தைத் தொட்டு உருக்குகிறதே.

அம்மா... அப்பா.... எனக்கதறியது.

அப்பாவுக்குக் கேட்கவில்லை.

பிரம்ம தீர்த்தத்தின் புனித நீரில் ஆடும் அவர் உள்ளம் அம்மையப்பன் இந்த நிலையைத் தனக்குத் தந்த இன்பத்தில் திளைத்து இருக்கிறது.

ஆனல், பிரம்ம தீர்த்தத்திற்குப் பக்கத்தில் இருக்கும் ஈசுவரருக்கு குழந்தையின் அழுகை பொறுக்கவில்லை. அன்னை பெரிய நாயகியுடன் புறப்பட்டு ஓடோடியும் வந்தார்.

அன்னை பொன்வள்ளத்தில் படிக்கட்டில் இருந்து கதறும் குழந்தையை அணைத்து பால் ஊட்டினார்கள்.

குழந்தையின் அழுகை நின்றது. காதில் தோடுடன், விடை ஏறி, இளம்பிறை சூடி வெண்ணீறு பூசி அழகின் அழகாய் தன் உள்ளத்தைப் பிடித்துக் கொண்ட இவர்கள் யார்?

பால் ருசிக்கிறதே...

பசி தீர்ந்தது..

குழந்தை நோக்கியது; கண்கொட்டாமல் தன் உள்ளத்தை விழுங்கிய இவர்களை நோக்கியது. அவர்கள் புறப்பட்டு விட்டார்கள்.

திசையையே நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தது.

''என் கண்மணி, சமத்து, அழவேயில்லை, புறப்படுவோம் வா'', சிவபாத இருதயர் நீராடி அம்மையப்பன் திருமுன் செல்லத்தயாராக வந்துவிட்டார். நிற்கும் மகனைப் பார்த்து அழைக்கிறார்.

முகத்தைப் பார்க்கிறார்; கண்ணீர் வடிந்து ஓய்ந்தது போல் தோன்றின கண்கள், ஆனால் அவை ஒளி மிகுந்து ஆனந்தம் தந்தன.

இது என்ன?

பால் வடிந்திருக்கிறதே, உதடுகளின் ஓரத்தில்! யார் இந்தக் காலையில் பால் கொடுத்திருப்பார்கள். தண்ணீருக்குள் இருக்கும்போது பையன் அழுதானே, யார், எவர், கொடுத்தாரோ, என்ன பாலோ!

தம்பி, சொல் பால் சாப்பிட்டாயா? ஆம் யார் கொடுத்தது?

மேலே கையைக் காட்டுகிறான்.

ஒன்றும் சரிவராது. மேலே காட்டுகிறானே. ஒரு கோல் எடுத்து மிரட்டிக் கேட்கிறார். பையன் மேலே கோபுரத்தை நோக்கிக் கையைக் காட்டிபால் கொடுத்தது யார் என்று சொல்கிறான்.

தோடுடைய செவியன்
விடை ஏறி

ஓர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசி
என் உள்ளம் கவர் கள்வன் பால் கொடுத்தான்.
ஏடுடைய மலரான்
முனை நாட் பணிந்தேத்த
அருள் செய்த
பீடுடைய பிரமாபுறம்
மேவிய

பெம்மான் பால் கொடுத்தான்.

ஐயன் பக்கத்திலிருக்கும் அம்மை காதில் அணிந்த தோடு குழந்தை உள்ளத்தில் பதிந்து விட்டது. அவர் தானே பால் ஊட்டினார்.

அம்மையும் அப்பனும் வந்து என் குழந்தைக்கு பால் ஊட்டியிருக்கிறார்கள். நம்ப முடியவில்லையே.

ஏன் நம்ப முடியவில்லை! ஞானப்பால் உண்டதால் அல்லவா குழந்தை இனிய தமிழில் பால் மணம் அனுப் பிஞ்சுக்குரலால் பாடுகிறேன்....

ஆஹா, தூக்கினார் குழந்தையை; ஆடினார்; பாடினார் ஓடினார்.

காலையில் சூரியன் கிழக்கே உதயமானவன் இவருடன் சேர்ந்து ஓடிய மக்களைக் கண்டான்.

பிரமபுரீசுவரர் முன் நின்றார்....

குழந்தையை நோக்கினார், அது தன் குழந்தை மட் டிலுமல்ல. திருமுறை தர, சமயம் தழைத்தோங்க வந்த ஞானக் குழந்தை திருஞான சம்பந்த மூர்த்தியல்லவா?

ஐயன் முன்னிலையில் உருகிப்பணிந்தார்.

சீர்காழி செல்லும்போது இந்தக் காட்சிகள் இதயத் தில் நிறைந்தன.

குளத்தில் படிக்கட்டு....

அழுதால் உன்னைப் பெறலாமே என மணி வாசகர் ஏன் பாடினார்......

படிக்கட்டில் உட்கார்ந்து அம்மையே யப்பா எனக் கதறியதற்கு நீ கிருபை செய்தனையே......

இந்த நினைப்பு மணிவாசகரை இப்படி எழுதச் சொல்லியிருக்குமோ?

சீர்காழி சேர்ந்தோம். காலை மணி எட்டு இருக்கும். இன்று மணிவாசகர் குரு பூஜை புனித தினம். (26-6-63-ந் தேதி)

வெளியில் பம்பில் கைகால் சுத்தம் செய்து உள்ளே நுழைந்தோம்.

கண்கள் குளத்தைத்தான் முதலில் பார்த்தன. பிரம்ம தீர்த்தம் இதுதான் என அறிந்தோம்.

அதோ எதிரில் இருக்கும் படிக்கட்டுத்தான் குழந்தை ஞானப்பால் சாப்பிட்ட இடம். அதற்கென வளைவும் கட்டப் பெற்றிருக்கிறது.

அங்கு சென்று நோக்கினோம்; இந்த சம்பவத்தைச் சித்தரிக்கும் சிலைகளைப் பார்த்து மகிழ்ந்தோம்.

அங்கும் இங்கும் குளத்தில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தனர்.

ஒரு படித்துறையில் சென்று தீர்த்தத்தை வணங்கி தலையில் தெளித்துக்கொண்டோம்.

ஆலயத்தினுள் சென்று பிரமபுரீசுவரர் முன் நின்றோம்.

பால் கொடுக்கப் புறப்பட்ட ஐயன் அல்லவா?

எங்களுக்குப் பக்கத்தில் ஒரு வழிபோக்கு சாமியார் நின்றார்.

எல்லோரும் உள்ளே சுவாமியை நோக்கி நின்றோம்.

சாமியார் "வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ, வகையறியேன் இந்த ஏழை படும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ, இது

தகுமோ, இது முறையோ, இது தருமந்தானோ'' என இராம லிங்க உள்ளத்தைப்பாடுகிறார்.

என் உள்ளத்திலும் பாட்டு புகுந்தது. 'இது தகுமோ இது முறையோ, இது தருமந்தானோ மாடமணிப் பொது நடஞ் செய் வள்ளல் யான் உனக்கு வாய்த்த மகன் அலனோ. நீ எனக்கு வாய்த்த தந்தையிலேயோ, கோழை, உலகுயிர்த் துயரமினிப் பொறுக்கமாட்டேன்.

கொடுத்தருளும் நின் அருள் ஒளியை கொடுத்தருளும் இப்பொழுதே......'' எனச்சேர்ந்து பாடினேன் – அழுதால் பெற லாம் என ஓடிவந்து வரம் தந்த சந்நிதானத்தில் பாடிய வழிப் போக்கு சுவாமியை மனதால் வாழ்த்தினேன்.

பிரமபுரீசுவரர், பெரியநாயகி அன்னை, சட்டைநாதர் ஞானசம்பந்தர் சந்நிதானத்தில் எல்லாம் அர்ச்சனை செய் தோம்.

பிரம்ம தீர்த்தத்தைத் தீர்த்தம் என மதித்து, பிரம புரீசுவரரை, திருநிலைநாயகி அன்னையை, அம்மையப்பன் எனப் போற்றி வணங்கினால் ஞானசம்பந்தர்கள் இன்றும் என்றும் இங்கு உருவாகிக்கொண்டேயிருப்பார்களே என்ற நினைப்பு உறுதியைத் தந்தது.

வணங்கி பிரம்ம தீர்த்தத்திற்கு மீண்டும் வந்தோம்.

ஞானசம்பந்தர் படிக்கட்டில் வீற்றிருந்த கதையைப் பேசிக்கொண்டே வந்தோம்....

என்ன ஆச்சரியம்! அதே படித்துறையில் உடை ஒன்றுமின்றி வீற்றிருக்கும் குழந்தை யார்?

குழந்தைக்கு மூன்று வயது அல்லது கொஞ்சம் கூடு தலாய் இருக்கலாம்.

என்ன நிம்மதியாக வீற்றிருக்கிறது. நீரில் தாய் குளிப்பதால் அதற்கு அழவேண்டிய தேவையில்லை.

நோக்கிக்கொண்டேயிருந்தபோது தாய்மார்கள் பேச்சு காதில் கேட்டது.

பையன் அழமாட்டனம்மா. அப்பா வர்ராங்க என்று சொன்னால் அழவே மாட்டான்; அப்படியே இருப்பான் என்கிறார் தாய்.

அப்பா வருகிறார் என்று சொன்னதும் அழாமல் வீற்றிருக்கும் இந்தக் குழந்தை அம்மையும் அப்பனும் வருவதாய் இருந்தால்....

பையனைப் படம் பிடிக்க வேண்டும் என்றேன்.

மீனாட்சிபுத்திரனும், கந்தசாமியும் படம் பிடித்தார்கள்.

படிக்கட்டில் இருந்து, மெதுவாய் மேல் ஏறி பையன் காட்சி தந்தான்.

ஞானசம்பந்தர் இப்படித்தான் படித்துறையில் இருந்திருப்பார் என்பதற்கு நிதர்சனக் காட்சி தந்ததும் இறையருள்தான் என எண்ணி மகிழ்ந்தோம்.

அம்மையே அப்பா, எனக்கதறும் உள்ளத்துடன் புறப்பட்டோம்.

வழியெல்லாம் மக்கள் மத்தியில் சென்றோம். வீடுகளும், குடிசைகளும், வயல்களும், கால் நடைகளும இருபுறமும நிழல்தரும் புளியஞ்சாலைகள், முதலின நாட்டையும் மக்களையும் காட்டின.

இடை இடையே சுமை தாங்கிகள் தலையில் பாரம் தூக்கிச் செல்பவர்கட்கு உதவி செய்ய மௌனமாய் நின்றன.

## வைத்தீஸ்வரன் கோவில் — வர்ணிக்க முடியுமா?

காட்சிகளைப் பார்த்துக் கொண்டும் பேசி கொண்டும் வந்த நாங்கள் எதிர்பார்ப்பதற்கு முன் ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில் வந்து சேர்ந்தோம்.

திருப்புள்ளிருக்குவேளூர் என்பது ஆலயத்தின் பெயர்.

இதுவரை ஆலயங்களில் அளவு, சிற்ப வேலை முதலியவைபற்றி எழுதவேயில்லை.

எழுதப்போவதும் இல்லை என்று நினைக்கிறேன்.

ஏனெனில் மலாயாவிலிருக்கும் போது மதுரை, தில்லை ஆலயங்கள் பெரியவை; கோபுரம் உயரமானது; சிற்பங்கள் அழகுடன் உயிர் உள்ளது போன்றவை; ஒப்பற்ற கலையழகு மிகுந்தவை என்றெல்லாம் சொல்லக் கேட்டிருக்கிறோம். படங்களைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறோம்.

ஆனால் அங்கு நேரில் சென்ற ஆலயங்களை தரிசிக்கும் போது இதுவரை பார்த்த சித்திரங்கள், படங்கள், படித்த விளக்கங்கள் எல்லாவற்றிற்கு மேல் ஒப்பற்றதாய், சிறப்புடையதாய், கற்பனைக்கு அப்பாலுள்ளதாய், பெரியதினும், பெரியதாய் உலப்பிலா இன்பம் அளிப்பதாய் எண்ணங்களின் நிறைவாய் அவை விளங்கின.

இவற்றை யாரேனும் விளக்கியோ, எழுதியோ, வரைந்தோ கூறினால் கற்பனையில், அவற்றை அனுமானிக்கலாம் என்று எண்ணுவது முடியாததொன்றாக எனக்குத் தோன்றுகிறது.

நேரில் பார்த்தால் அன்றி ஆலயங்களின் பூரண பொலிவைக் கொண்டு வந்து கற்பனையின் முன் நிறுத்த இயலாது என்று எண்ணுகிறேன்.

இதனால் எளிய என் எழுத்தினால் விவரிக்க முடியாத ஆலயங்களை விவரிக்கும் பணியில் ஈடுபடாமல் வண்ணச் சிறப்புடன் அருள் மணங்கமழும் இந்த உன்னத ஆலயங்களைத் தரிசிக்காத வாழ்வு வாழ்வல்ல, ஆகவே ஒரு முறையேனும் எப்படியேனும் சென்று நேரில் கண்டு யான் பெற்ற இன்பத்தைப்பெற வேண்டும் என்று வேண்டுவதோடு ஆலயங்கள் சிற்பம் முதலிய அழகுகளை விவரிக்கும் முயற்சியை நிறுத்திக் கொள்கிறேன்.

வைத்தீஸ்வரன் ஆலயத்தில் ஸ்தல விருட்சமாகிய வன்னிமரத்தைத் தரிசித்தோம். துவஜ ஸ்தம்பமருகில் பிணி முதலியன வராமல் இருக்க உப்பு முதலியன வாங்கி வைத்தோம். வெல்லத்தை புனித தீர்த்தத்தில் கலந்தோம்.

வைத்தீஸ்வரரும் தையல்நாயகி அம்மையும் முத்துக் குமார சுவாமியும் அருள் பாலிக்கும் திருப்புள்ளிருக்கு வேலூரில் அர்ச்சனை செய்யும்போது ஆனந்தமாய் இருந்தது. அருட் பிரசாதங்களைப்பெற்று கோயில் யானைக்கு தேங்காய் வாழைப்பழம் கொடுத்தோம்.

ஒவ்வொரு ஆலயமும் ஈர்க்கிறது. அங்கங்கு பலமணி நேரம், ஏன் பல நாட்கள் இருந்து விடலாமா என்ற ஆவல் பிறக்கிறது.

வந்தது மதுரை கும்பாபிஷேகத்திற்கு; அதுதான் குறிக்கோள் என்பதை அறிவு சுட்டுகிறது.

புறப்படுகிறோம்......

## நானூறு கோவில்கள்

மாயவரம் வழியில் வந்தது; சாப்பிடும் நேரம். காளியா குடி லாட்ஜில் ஒய்வாய் இருப்பதற்கு ரூம் வசதி செய்து கொண்டோம்.

நல்ல சாப்பாடு; அபூர்வமான மாங்காய் உணவோடு வந்தது. நிம்மதியாக, திருப்தியாக சாப்பிட்டு, மாங்காய் கூடைகளும் வாங்கி காரில் சேர்த்துக்கொண்டு கும்ப கோணம் வந்தோம்.

கும்பகோணத்தில் உயர்திரு. ராஜகோபால் நாயுடு உயர்திரு. பாஷ்யம் நாயுடுவைப் பார்க்கச் சென்றோம். இரு வரும் வெளியூர் சென்றிருந்தார்கள். திரு. நாயுடு இல்லத்தில் காப்பி அருந்தி புறப்படுமுன் கும்பகோணத்தைச் சற்று நோக்கினோம்.

கும்பகோணத்தில் எத்தனை ஆலயங்கள் இருக்கின்றன என்று மீனாட்சிபுத்திரனிடம் கேட்டேன்.

நானூறு என்றார்.

நானூறு இருக்கலாம் போல் என் மனதில் தோன்றி யது. எங்கு நோக்கினும் கோபுரங்கள் வானுற ஓங்கி எழுந் தன.

ஆயிரம் நாமங்கூறிப்பாடும் ஆவலைப் பக்தர்கள் பெற்றிருப்பதை நாமத்திற்கொரு ஆலயம் கட்டும் பரம பக்தியில் ஈடுபட்டுள்ளனர் என்று தோன்றியது. மாமாங்கக் குளத்தைத் தரிசித்து, தஞ்சை நோக்கிப்புறப்பட்டோம்.

## குருநாதன் முன்னிலையில்

தஞ்சை செல்லும் ஞாபகம் மேலோங்கி நின்றது. இந்த சமயத்தில், 'சுவாமிமலை' என்றார் மீனாட்சி புத்திரன், பெயர் பலகையைப் பார்த்து.

சுவாமிமலை ஆறுபடை வீடுகளில் ஒன்று காரை அங்கு செலுத்துவோம் என்றேன்.

இது வேறு 'சுவாமி மலை' என்றார் டிரைவர் ராஜாமணி.

பார்ப்போமே என்று முடிவு செய்தோம். சுவாமிமலை வழியே செல்லும்போது ஆற்றில் ஒரு யானை குளித்துக் கொண்டிருந்தது; அது ஆனந்தமாகப் புரண்டு குளித்ததைப் பார்த்ததும் கணேசப் பெருமான் ஞாபகம் வந்தது.

தொடர்ந்து சென்றதும் பெரிய ஆலயம் தோன்றியது.

திருவேரகம் எனும் சுவாமிமலையைத் தாண்டிச் செல்லாமல் பெயர்பலகையை மீனாட்சிபுத்திரன் கண்களில் தோன்றச் செய்தது சுவாமி நாத குருநாதர் திருவருள் போலும்.

திருமுருகன், அரும்பெயர் மரபில் பெரும்பெயர் முருகன் படை வீடுகள் ஆறு. திருபரங்குன்றம் முதலாவது படை வீடு; திருச்சீரலை வாய் (திருச்செந்தூர்) இரண்டாவது படை வீடு; திரு. ஆவினன் குடி மூன்றாவது படை வீடு; திரு வேரகம் (சுவாமிமலை) நான்காவது படை வீடு, குன்றுதோறாடல் ஐந்தாவது படை வீடு, பழமுதிர்சோலை ஆறாவது படை வீடு ....

நான்காவது படை வீடாகிய சுவாமி மலையை தரிசிக்கும் வாய்ப்பு உள்ளபடி எதிர்பாராமல் கிடைத்ததே என்பதில் மகிழ்ந்தோம்.

வழக்கமாக அர்ச்சனை செய்து பிரசாதங்கள் அனுப்பி வரும் உயர்திரு சுவாமிநாத குருக்கள் எங்கிருக்கிறார்கள் என்று விசாரித்து உள்ளே சென்றோம்.

கீழ்க்கோயிலில் அப்பன் சந்நிதானமும் அம்மை சந்நிதானமும் அருள்பாலித்தன. அம்மை சந்நிதானத்தில் வணங்கி மேலே செல்ல யோசித்துக்கொண்டிருக்கும்போது சுவாமிநாத குருக்கள் வந்து சேர்ந்தார்.

அவர் அழைத்துச் செல்ல 64 படிகளைத் தாண்டி ஸ்ரீ முருக பிரான் சந்நிதானம் சேர்ந்தோம்.

அங்கு சுவாமிநாத வரதருக்கு குருக்கள் அர்ச்சனை செய்து தந்தார்.

குருவாய் வருவாய் அருள்வாய் குகனே எனச் சிந்தித்து கீழே வந்தோம்.

சுவாமிநாத குருக்கள் இல்லத்திற்கு அழைத்துச்சென்றார். அவர்கள் அன்புடன் அளித்த சிற்றுண்டியை அருந்தி பிரியாவிடை பெற்று கொண்டு தஞ்சை பயணத்தைத் தொடர்ந்தோம்.

## எவ்வளவு பெரிய உள்ளம்

தஞ்சை என்றதும் உள்ளத்தில் பிரகதீஸ்வரர் ஆலயம் நினைவுக்கு வந்தது.

பெரியகோயில் என்று வழங்கும் இந்த நிழல் விழாக் கோபுரமுடைய ஆலயத்தை பெரிய மன்னவன் திருப்பணி செய்தான்.

சோழ மன்னர்கள் ஆட்சி காலத்தில் கடல் கண்டதும் கங்கை கண்டதும் கலை வளர்த்ததும் இன்றும் உயிர்ப்புச் சக்திகள்.

அவ்வரிசையில் வந்த ராஜராஜன் எடுத்த இந்த ஆலயம் அவன் எண்ணங்களுக்குக் காரணமாயுள்ள இறைவனுக்கும் அன்னைக்கும் ஓயாத வணக்கம்.

மதுரை, மதுரை என்ற செல்லும் வேகத்தில் தஞ்சையை அணுகினோம். பெரிய கோயிலைத் தவிர்த்து வேறு ஒன்றும் பார்க்க முடியாது. பிரபல சரஸ்வதி மஹால் என்ன ஆவது?

மறுமுறை பார்க்கலாம் என்றார் மீனாட்சிபுத்திரன்.

சரித்திர சம்பந்தமான இடங்கள், நகரம், வீதிகளைப் பார்க்க வேண்டாமா?

மதுரைக்கு போக வேண்டாமா?

தஞ்சையை அணுகினோம். பிரமாதமான மதில்கள் தோன்றின; அவை அலங்கங்கள் என்று அறிந்து கொண்டேன்.

திடீர் என கோபுரம் தெரிந்தது. காவி நிறத்தில் வானை நோக்கி எழும் இக்கோபுரத்தை நெருங்க அதன் உயரமும் ஒப்பற்ற அழகும் தெளிவானது. ஆலயபிரஹார மதில் எவ்வளவு பெரியது...!

உள்ளே சென்றோம். வழியில் இருபுறத்திலும் யாசகம் வாங்குபவர்கள் வீற்றிருந்தார்கள்.

அர்ச்சனைக்குரிய பொருள்களை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தோம்.

கொடி மரத்தின் முன் மண்டியிட்டு வணங்கினோம்.

மணி அடித்தது.

என் அன்னை பெரியநாயகி அம்மனுக்கு பூஜை. அங்கு ஓடினோம்; அன்னையை தீப ஒளியில் தரிசித்தோம்.

நந்திகேஸ்வரரைத் தரிசித்தோம். இவ்வளவு பெரிய நந்தியா? அந்த நந்தியிருக்கும் மண்டபம் சின்னதா, தூண்கள் சிறியதா, சிற்பங்களில் எதுதான் சிறியது.

படி ஏறிச் சென்றோம். என்ன பிரம்மாண்டமான அழகு. இதுவரை ஆலயங்களில் நுழையும்போது, ஆலயங்களில் இருக்கும்போது ஏற்படாத நினைப்பு இங்கு ஏற்படுவது ஏன்?

இதுவரை ஆலயங்களினுள் நுழையு முன்னும் எங்கும் கனிவும் பணிவும் உடல் குழையும் நிலையும் வரும்.

இங்கு உள்ளம் குழைந்தாலும், உடல் வளைய மறுப் பதேன்.

இந்த கம்பீரத்திற்கு மத்தியில் வளைவுக்கு இடமே யில்லை போலும்.

ஆலயத்தை எடுத்த ராஜ ராஜ சோழனின் இதயம் ஆலயத்தில் அப்படியே நின்றது. அதன் விசாலமும்; கம்பீர மும், இணையற்ற, ஒப்பற்ற, வளையாத, சிறிது என்பதை இன்னது என்று அறியாத அவன் உள்ளம் அங்கு துடித்தது.

அர்ச்சனை டிக்கட்டுகளை வாங்கிக்கொண்டு உடன் ஓது வார் ஒருவரையும் அழைத்துக்கொண்டு பிரஹதீஸ்வரரைத் தரிசிக்கச் சென்றோம்.

## *ஏக்கமும் அருளும்*

மாபெரும் துவார பாலகர்கள் இருவர்; இடப்பக்கம் கணேசர். ஐயன் பெரியவரிலும் பெரியவராக லிங்க வடிவில் விளங்குகிறார்.

பெரிய சந்நிதானத்தில் நிற்கும்போது, மீண்டும் சோழ னின் உள்ளத்தின் உயரமும், விசாலமும் கம்பீரமும் முன் நின்றது. அந்த உள்ளம் பிரஹதீஸ்வரருக்கு அஞ்சலி செய்ய முற்பட்ட உயர்வை எண்ணியது.

அர்ச்சனை ஏணியில் ஏறி உயர நின்று மலரை அணி வித்து அர்ச்சனை செய்கிறார்.

ஓதுவார் பாடுகிறார்.

வணங்கினோம்.

ராஜராஜன் பிரஹதீஸ்வரரை வணங்க வரும்போது என்ன நிலையில் ஆலயம் இருந்திருக்கும்; திரளான பக்தர் கள், இசையும், ஓதலும், மங்கள நாதமும் அவன் உருகும் உள்ளமும் பக்தி சொட்டுவதோடு மாண்பின் வனப்பும் சொட்டுவது போலிருக்கும்.

பிரசாதங்களைப் பெற்றுக் கொள்கிரோம், வணங்குகிரோம்.

ஒரு ஏக்கம் வந்தது.

அன்று சோழன் இந்த ஆலயத்தை தன் நாதனுக்கு அர்ப்பணித்தபோது அவன் உள்ளத்தில் என்னென்ன வகையில் வணக்கங்களைச் செய்ய வேண்டும், விழாக்களை எவ்வண்ணம் பிரமாதமாக நடத்திக் காண வேண்டும் என்றெல்லாம் எண்ணி இன்புற்றிருப்பான்.

இன்று வெளிப்புறங்களில் விளக்குகள் குறைவு. அங்கு ஒன்றும் இங்கு ஒன்றும் ஆலயத்தின் வனப்பைக் காட்டுவதாய் இல்லை. உள்ளும் அவவண்ணமே. சோழனின் உள்ளத்தைப் புற விளக்குகள் பிரதிபலிக்கவில்லை.

அந்த மகத்தான உள்ளமில்லாமல் பிரஹதீஸ்வரரை எட்டி அவர் பாத கமலங்களைத் தொடுவது எப்படி?

சோழனின் அன்பையும், அவன் கனவையும் நினைப்பையும் காண்பதென்று என்ற ஏக்கம் எனக்கு வந்தது போலவே நாதனுக்கும் இருக்குமோ என எண்ணினேன்.

வெளியிலே யாசகத்திற்கு வீற்று யாரேனும் ஏதேனும் தரமாட்டார்களா என ஏங்கிய தோற்றத்துடன் காட்சி தந்தவர்கள் வதனங்கள் ஞாபகத்துக்கு வந்தது.

பெரிய கோயிலில் சோழனின் எண்ணத்திற்கேற்ப பொலிவு காண்பது என்று?

இந்த ஏக்கத்தை வெளியில் வீற்றிப்பவர் படம் பிடித்துக் காட்டுகின்றனர் தம் நிலையினால்.

தேங்கி நிற்கும் இந்த ஏக்கம் நிறைவு பெற பிரஹதீஸ்வரர் எண்ணினால் போதும். உள்ளங் கொண்டால் போதும். சோழனின் உள்ளம்போல் பொலிவு ததும்பி விளங்க அருள் பாலிக்க வேண்டும் என்ற பிரார்த்தனை எழுந்தது. புறத் தோற்றத்தினால் எழுந்த நினைவு இது.

புறத்தோற்றத்திற்கு அப்பாற்பட்டவர், ஐயன். ஆனால் அவருக்கு ஆலயம் எடுத்த சோழனின் எண்ணம் அங்கு தாண்டவமாடிய அவன் உள்ளக்கிடக்கை, எனது சிந்தையை இவ்வண்ணம் திருப்பியது போலும்.

பிரஹதீஸ்வரரை உள்ளத்தில் நிறுத்தி வணங்கினோம்.

அன்னை பெரியநாயகி ஆலயம் நண்ணினோம். அங்கு ஐயனைப் போன்ற பெரிய அமைப்புள்ள ஆலயத்தில் அன்னை இல்லை.

கொஞ்சும் திருமுகததோடு அன்னை அருள் பாலித்தார். நின்னை தரிசிக்க அருள் பாலித்தனையே என உள்ளம் உருகியது. இங்கும் ஓதுவார் பாடினார்.

அவர் இசையுடன் தந்த இறவாத் தமிழ் உள்ளத்தில் பாய்ந்தது. அன்னையின் திருவடிகளைப் பணிந்துப் பிரிந்தோம், திருச்சிராப்பளளி செல்லும எண்ணத்தோடு

தஞ்சை மாநகரே உன்னைச் சரிவரப் பார்க்கவில்லை. நிழல் விழா இந்த கோபுரத்தைப் பகலிலே யான் பார்க்கவில்லை, மீண்டும வந்து உன் இதயத்தில் கலக்க வேண்டும். என்ற உறுதியை ஒரு புறம் செய்து கொண்டேன்.

முப்பது மைல்களுக்கு சில மைல்கள் கூடுதலானதூரத்தில் திரிசிரபுரம் உண்டு. திரிச்சிராப் பள்ளியில் இரவு தங்கி மறுநாள் மதுரை செல்லப்போகிறோம். இந்த இனிய நினைவு இடை இடையே உயிருக்கு இன்பச் சுதியைச் சேர்த்துக் கொண்டே வந்தது.

## தாயுமானவர் அன்பில்

உச்சிமலைப்பிள்ளையார் கோபுரம் என்றார் மீனாட்சி புத்திரன்.

தரிசித்தேன், தாயுமான சுவாமி எனும் கருணைக்கடல் இருக்கும் அந்த கோபுரத்தை தரிசித்தேன்.

வழியில் திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் நெல் ஆலையில் சிறிது சிரம பரிஹாரம் செய்து கொண்டு திருச்சி டவுனில் நுழைந்து, மலாயா ஹவுஸ் உள் நுழைந்தோம்.

இங்கு மீனாட்சிபுத்திரனின் அருமைத்தாயாரும், சொந்த மைத்துனர் முத்துச்சாமி பிள்ளையும் ஏனைய உறவினர்களும், அன்பர்களும் சகோதரர் முருகையாவும் அன்புடன் வரவேற்றனர். தாயாரைத் தரிசித்து வணங்கினேன்.

நாங்கள் புறப்பட்டு திருச்சி வந்தவரை உள்ள கதையைப் பேசினோம். ஏதோ பல நாட்கள் இந்தியாவில். சுற்றி வந்தவர்கள் போல் பேசினோம். சென்னையிலிருந்து என்று புறப்பட்டீர்கள் என்று அன்பர் ஒருவர் கேட்டார். நேற்றுக் காலை புறப்பட்டோம். இரவைத் தில்லையில் கழித்தோம்.

இரண்டாவது இரவு திருச்சியில் என்றேன் 26-3-63. நேற்றுத்தானே சிதம்பரத்தில் தில்லைக் கூத்தன் திருமுன் நின்றோம்.

இன்று திருச்சிராப்பள்ளியில் தாயுமானவர் ஒப்பில் அன்பில் இருக்கிறோம். தாண்டிய நகரங்கள் கனவு போலிருக்கிறது.

வாழ்வில் ஓடிய ஆண்டுகள் பல. இவற்றில் இன்று வரை சென்ற நாட்கள் இரண்டும் பெரும் பயனுடையதாகி விட்டன.

நாளை திருப்புத்தூர் வழியே மதுரை, அண்ணலும் அன்னையும் அரசாட்சி செய்யும் ஆலவாயில்...

மீனாட்சிபுத்திரன் என்னை திரு. கரு. சிதம்பரம் பிள்ளை இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு அவரிடம் பேசிக்கொண்டு அங்கேயே தங்கினோம்

காலையில் திரு. சிதம்பரம் பிள்ளை அவர் பேத்திகள் இருவரை அறிமுகம் செய்து வைத்தார். அவர் புதல்வார் திரு. குமரசாமியின் மகள் சகுந்தலை ஒன்று அவர் புதல்வியின் மகள் மகேஸ்வரி.

இருவரையும் படிக்கும் பள்ளி முதலிய விபரங்களை விசாரித்துக் கொண்டிருக்கும் போது ஆல் இந்திய ரேடியோ நிலையத்திலிருந்து திரு. ரமணி வந்தார்; சைவ, சிவ பிருந்தாதேவி சகோதரர் உலகநாதன் வந்தார்.

எல்லோரும் சேர்ந்து சிதம்பரம் பிள்ளை இல்லத்தில் பசியாறினோம். திருச்சி முருங்கக்காயை ருசித்து ருசித்துச் சாப்பிட்டேன்.

திரு மீனாட்சி புத்திரன் இல்லத்திற்கும் திரு. சிதம்பரம் பிள்ளை இல்லத்திற்கும் இடையில், உள்ள முச்சந்தியில் ஒரு சிறு ஆலயம்.

முனீஸ்வரர் மூலவர்; விநாயகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேத முருகபிரானும் அங்கு காட்சி தந்தனர்.

இங்கு வணங்கினோம். வணங்கிக் கொண்டிருக்கும் போது வெளியே சந்நியாசி ஒருவர் நடந்து செல்கிறார். பாடிச் செல்கிறார். பூபாளத்தில் ஏதோ சமஸ்கிருத ஸ்லோகம் உள்ளத்தில் பாய்ந்தது. யாரிவர்? ஓடி நிறுத்திக் கேட்கலாமா? என முந்தியது உள்ளம். செய்யவில்லை.

அவர் செல்லும் திசையையே நோக்கினேன். வேகமான அவரது நடை அவரது சாயல் அவரை சாதாரணமானவர் அல்ல என்பதை உணர்த்தியது.

அவர் சென்ற திசையை வணங்கி மீனாட்சிபுத்திரன் இல்லம் சேர்ந்தோம்.

காலையில் வயலூர் போய் வருவோம் என்றார் மீனாட்சி புத்திரன்.

வயலூர் பற்றி விசாரித்தேன்.

## வயலூர், குன்றக்குடி

வயலூர் திருமுருகன் திருத்தலம், அருணகிரிநாதர் பாடல் பெற்றது என்றார் திரு. உலகநாதன்.

எல்லோரும் அங்கு சென்றோம்.

அர்ச்சகர் அழகாக இசையோடு அர்ச்சனை செய்து தந்தார். திரு. உலகநாதன் பாடல்கள் பாடினார்.

வள்ளி தெய்வயானை சமேத முருகபிரானைத் தரிசித்தோம். தீப ஒளியில் ஞானப்பிழம்பினை எண்ணிப் பணிந்து திருச்சி திரும்பி மீனாட்சிபுத்திரர் சகோதரர் முருகையாவையும் அழைத்துக்கொண்டு தாயாரிடம் விடைபெற்று திருப்புத்தூர் வழியே மதுரைக்குப் புறப்பட்டோம்.

திருப்புத்தூர் வந்து சேரும்போது மணி 1-45 இருக்கும். உயர்திரு ஆறுமுகம் பிள்ளை அவர்களும் துணைவியாரும் செல்வர் தங்கவேலும் செல்வி தங்க நாச்சியாரும் அன்பர்

களும் அன்புடன் வரவேற்றனர். மானுமதுரை காந்தி சேவா சங்க ஊழியர் உயர்திரு. ரா. ப. ராமசாமி அவர்களும் வந்திருந்தார்கள். தரிசித்தேன்.

அன்புடன் அளவளாவிய பின்னர் உணவருந்திஞேம். ஓய்வு எடுத்துக்கொண்ட பின்னர் குன்று தோருடும் குமர னின் திருத்தலமாகிய குன்றக்குடிக்கு எங்களை உயர்திரு. ஆறு முகம் பிள்ளை அழைத்துச் சென்ருர்கள்.

முதலில் குன்றக்குடி ஆலய தர்மகர்த்தா மகாசந்நி தானம் தவத்திரு குன்றக்குடி அடிகளாரை தரிசிக்க சென் ேரும்.

திருக்காளத்தி நாதன் காட்சி தந்தார். அவரை வணங்கி மேலே சென்ேரும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் மலாயா வந்திருந்த போது சுங்கை சிப்புட் மகாத்மா காந்தி கலாசாலேக்கு தைப்பொங்கலன்று வருகை புரிந்து பொங்கல் பானையில் பால் ஊற்றி பொங்கல் விழாவை ஆரம்பித்து வைத்திருந் தார்கள். மாலேயில் ஒரு அரிய சொற்பொழிவும் ஆற்றியிருந் தார்கள்.

ஆகவே அவர்களை மீண்டும் காணும்போது கலாசாலே யில் இருபுறமும் நின்று மாணவர்கள் வரவேற்றதும், பால் பொங்கியபோது பொங்கலோ பொங்கல் என எழுந்த குரல் களும், வண்ணத்தமிழில் அடிகளாற்றிய உரையும் நினைவில் எழுந்தன.

அடிகளார் அன்புடன் காந்தி கலாசாலே பற்றி விசாரித் தார்கள். ஆதீனம் ஆற்றும் கல்வித் திட்டங்கள் பற்றி அறிந்து கொண்டேன். பொதுவாக நாட்டில் சமயத்தோடியைந்த வாழ்வு பயனுடன் உருவாவது பற்றி எல்லாம் பேசிஞேம்.

இங்கு அன்புடன் அளிக்கப்பெற்ற பிரசாதங்களை உண்டு திரு. முருகபிரானைத் தரிசிக்கச் சென்ேரும்.

தோகையடி விநாயகரைத் தரிசித்து பல படிகளைத் தாண்டி திருமுருகன் சந்நிதானம் சென்ேரும்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய் மருவாய் மலராய் மணியாய் கருவாய் உயிராய் கதியாய் விதியாய் குருவாய் விளங்கும் முருகபிரானுக்கு இங்கு தமிழில் அர்ச்சனை நடைபெற்றது.

குருவாய் வந்தருளவேண்டும் என வேண்டி பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு எங்களைப் திருப்புத்தூர் திருத்தளிநாதர், சிவகாமியம்மன் வைரவஸ்வாமி ஆலயத்திற்கு அழைத்துச் சென்றூர்கள். இங்கு செல்லும்போது இரவு மணி 7-30 இருக்கும்.

## சித்சபையில்

ஆடும் கூத்தர் தாண்டவம் புரிந்தருளும் தாண்டவம் ஏழு. பொன்னம்பலம் எனும் தில்லையில் ஆனந்தத் தாண்டவம். வெள்ளியம்பலம் எனும் மதுரையில் சந்தியா தாண்டவம். திருக்குற்ருலத்தில் சித்திர சபையில் திரிபுர தாண்டவம். திருவாலங்காட்டில் ரத்னசபையில் காளி தாண்டவம். திருநெல்வேலியில் தாமிரசபையில், முனி தாண்டவம், திருப்புத்தூரில் சித்சபையில் கௌரி தாண்டவம்.

ஐயன் தாண்டவமாடிய மேடைகளில் பொன்னம்பலத்தைத் தரிசித்தோம். இன்று சித்சபையைத் தரிசிக்கிறேம். நாளை அன்னை மீனுட்சியம்மனும் சுந்தரேஸ்வரரும் ஆட்சி செய்யும் மதுரை வெள்ளியம்பலத்தைத் தரிசிக்கப் போகிறேம்.

நாதஸ்வரத்தின் இன்னிசை தவழ்ந்து உள்ளத்தை ஒருமுகமாக்கியது.

திருத்தளி நாதர் சிவகாமியம்மை வைரவ சுவாமி சந்நிதாங்களில் தரிசனம் செய்து பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டோம்.

கோயில் மரமாகிய கொன்றையைத் தரிசித்தோம். இதன் கீழ் அகத்தியர் தவம் செய்துள்ளார். ஓங்காரம் கொன்றை மரமாக நின்று தவம் செய்தது இங்குதான்.

மனிதன் சுலபமாக தன் காரியத்தைச் சாதிக்க முயல்கிருன். ஆண்டவன் ஆடிய சித்சபை, இலட்சுமி தேவி, ஸ்ரீ அகத்தியர், ஓங்காரம் பூஜித்த உன்னத ஸ்தலம், திருப்புத்தூரில் இலங்கும் இந்தத்திருக்கோயில். ஆனுல் சில நிமிடங்களில் அங்கு பல்லாண்டுகளாகத் தவழ்ந்து பொங்கும் அருளை அறிந்து பெறுவது எவ்வண்ணம், இந்தக் காரியத்தைச் செய்ய முற்பட்ட என் எளிய உள்ளத்தை நைந்துகொண்டு ஆலயத்திற்கு எதிரில் இருந்த ராஜாஜி மாணவர் ஹாஸ்டலுக்குச் சென்ருேம்.




## மதுரையிலிருந்து வந்த அழைப்பு

ஹரிஜன மாணவர்கட்காக உள்ள இந்த இல்லத்தில் மாணவர்கள் வரிசையாக வீற்றிருந்தார்கள். இல்லத்தைப் பொறுப்பேற்று நடத்தும் அன்பர்கள் அன்புடன் வரவேற்றனர். உயர்திரு. ஆறுமுகம்பிள்ளை எங்களை அறிமுகம் செய்து வைத்தார்கள். நாங்களும் சில வார்த்தைகள் சொல்லி மாணவர்கள் சிறந்தவர்களாக வர வேண்டும் என வாழ்த்தி விடை பெற்றுக்கொண்டு திரு. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் இல்லம் திரும்பினேம்.

நாளை கும்பாபிஷேகம்.

மதுரையில் திரு. ஆறுமுகம் பிள்ளை வீட்டில் தங்குவதற்கு இடம் பிடித்திருந்தார்கள். அன்றிரவு மணி 11.00க்கு ஆலவாய் நோக்கிப் புறப்பட்டோம் மதுரை சேர்வதற்கு பல மைல்களுக்கு முன்னதாக மீனாட்சிபுத்திரன் கோபுர தரிசனம் என்றார்.

## ஆலவாயில்

நான்கு கோபுரங்கள் தீப அலங்காரத்துடன் காட்சி தந்தன. எனக்கு பிரமிப்பு ஏற்பட்டது. இவ்வளவு தூரத்திலிருந்து நான்மாடல் கூடலை தரிசிக்கிறோம். கோபுரங்கள் அருகில் நோக்கினால் எப்படி இருக்கும். பொற்றாமைக் குளம் எப்படி இருக்கும். வைகை எப்படி இருக்கும். அன்னை திருமுன், ஐயன் திருமுன் எவ்வண்ணமிருக்கும்.

மதுரை என்ற பெயருள் தோய்ந்துள்ள கதைகள் எத்தனை. 64 திருவிளையாடல்கள் தலையானவை. வைகைக் கரையில் சுடு மணலில் நின்ற தென்னவன் பிரமராயன் நினைவு வைகைக்கு இல்லாமலா போகும். அவருக்கு இறங்கி தன் கரைகள் பீறிட ஐயன் ஏற்படுத்திய வெள்ளம் பாயும் போது வைகை அடைந்த ஆனந்தம் எவ்வளவாயிருந்திருக்கும். இந்த வெள்ளத்தை அடைக்க பிஞ்சுக் குழந்தை முதல் வஞ்சிப் பாட்டி வரை மண் அள்ளி சுமந்துபோட்டதை வைகை மறக்குமா? இந்த மண்ணைச் சுமக்கவும் அந்தப் பாட்டியின் பிட்டைச் சுவைக்கவும் ஐயன் வேலையாளாக வந்த வண்ணவடிவை வைகை மறக்க முடியுமா? அன்றி மன்னன் விசாரித்து வரும்போது ஐயன் பேசி முதுகில் அடிவாங்கியபோது அனைவரும் முதுகைப்பிடித்து ஐயன் திருவிளையாடல் என உணர்ந்து உவகையடைந்ததை மறக்க முடியுமா?

இந்த சம்பவம் நடப்பதற்குச் சில தினங்கட்கு முன்னர் அழகிய குதிரைகளை ஓட்டிவந்து தென்னவன் பிரமராயருக்காக மன்னவனிடம் இராவுத்தர் கோலத்திலே ஆலவாயன் கயிறு மாற்றித் வந்ததை மறக்கமுடியுமா? அன்று மக்கள் திரள் குதிரைகளைப் பார்த்துப் பார்த்துப் பேசியதும், மன்னவன் மகிழ்ச்சியினால் பொங்கியதையும் மறக்க முடியுமா?

அன்றிரவு ஒரே கூச்சல். குதிரைகள் எல்லாம் நரிகளாகி இப்படித்தானே ஓடின.... மன்னவன் அறிந்ததும் அடைந்த கோபமும், தென்னவன் பிரமராயனை இழுத்துக் கொண்டு வந்து இங்கு நிறுத்தியதும்... மதுரையின் மூச்சான கதைகளாயிற்றே.

சங்கம் வளர்ந்தது இங்கல்லவா? புலவர் மணி நக்கீரர் நிமிர்ந்து நின்று பொற்றாமரைக் குளத்தில் விழுந்ததும், சென்று திருமுருகாற்றுப் படையும், கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி பாடியதும், குமரகுருபரர் உருகி உருகி தன் பாடல்களைப் பாடியதும், மன்னன் முன்னர் பாடியதைக்கேட்டு மகிழ என் அம்மை குழந்தை வடிவில் வந்து அருளியதும்...... திருக்குறள் இசைத்ததும், வேதத்தின் குரலும், நாதத்தின் இசையும் சேவல் குரலை மறைத்து மானிடரை துயில் களையச் செய்வதும் மதுரையல்லவா?

அந்தத் திருமணம், ஊரெல்லாம் வானெல்லாம் திரண்டு வந்த மங்களத் திருமணம் அது வாழ்வுக்கெல்லாம் மங்களமன்றோ.

அது நித்திய நினைவல்லவா? அழகர் மலை அழகன் ஸ்ரீமன் நாராயணன், ராஜ ராஜேஸ்வரி, மீனாக்ஷியம்மனை சுந்தரேஸ்வரருக்கு தாரைவார்த்துக் கொடுத்த திருமண வைபவம் சிந்தனைக்கு, கண்ணுக்கு எண்ணத்திற்கு நித்திய மங்ளமல்லவா.

திருஞானசம்பந்தர் வந்து தங்கி, சமணர்களிடம் வாதிட்டு வெற்றி பெற்றதும் அவர் அமுதுததும்பும் வார்த்தைகளில் மதுரை மணாளனைப் பாடியதும், என்றுமுள தமிழ் தந்ததும் மறக்க முடியுமா?

தொண்டே வடிவாய் திருநாவுக்கரசர் அன்பின் உருபோல இங்கு வந்து ஆனந்தமாகப் பாடிப் பணியாற்றியதை மறக்க முடியுமா?

மதுரை பற்றிய நினைவெல்லாம் சிறப்புடையன.

எல்லாவற்றிற்கும் மேலாக அம்மையும் அன்னையும் அருள்பாலித்து ஆட்சி செய்யும் மதுரையல்லவா?

வைகை எல்லாம் தாண்டி மதுரை மாநகர் சேர்ந்தோம். உயர்ந்துகொண்டே தெளிவாகவும் தெரிந்து கொண்டு வந்து கோபுரங்கள் என் பிரமிப்பை உயர்த்திக் கொண்டு வந்தன......

டிரைவர் இதுதான் வீடு என்று கொண்டு வந்து சேர்த்தார். இரவு மணி 12-30 இருக்கும்.

## கும்பாபிஷேகத்திற்குப் புறப்பட்டோம்

அதிகாலையில் துயில் களைந்து மதுரை மாநகரின் புனித நீரில் குளித்து மீனாட்சி சுந்தரேஸ்வரர் கும்பாபிஷேக சுப வைபவத்தில் கலந்து கொள்ளக் கிடைத்த பெரும் வாய்ப்பினுக்காக அம்மையப்பனுக்கு அஞ்சலி செய்து காலை மணி 7-00க்கு புறப்பட்டோம், ஆலயத்தை நோக்கி.

அழகின் வடிவமாக வானுற ஓங்கி எழுந்த நான் மாடல் கோபுரங்கள் இதயத்தின் இன்ப எல்லை போலக் காட்சி தந்து கொண்டேயிருந்தன. திருப்பணி செய்யப் பெற்று கூப்பிய கரங்களின் புனித நிதர்சன வடிவு போல உள்ளத்தில் இந்த கோபுரங்கள் துடித்தன. சொட்டும் இந்த அழகு வடிவங்களை வடித்தெடுத்த தெய்வச்சிற்பி யாரோ. ராஜராஜேஸ்வரி அன்னைக்கும் அழகருக்கும் இவை ஓயாது ஆற்றும் அஞ்சலி நம் உள்ளத்தின் உள்ளத்தில் ஆற்றும் அஞ்சலிக்கு வெளிச் சின்னங்கள் போலும்.

மௌனமாக அவரவர் உள்ளங்களில் தோய்ந்த சிந்தனையோடு மதுரை மாநகரின் புனித வீதிகளில் நடந்தோம். எங்கு நோக்கினும் மக்கள். அனைவரும் ஆலயத்தை நோக்கிச் செல்கின்றனர். அனைவரையும் தேங்கி நிற்காது சேரும் இடத்தில் சேரும்படியாக போலீஸ்காரர்கள் அனுப்பிக் கொண்டே இருந்தனர். ஒருவினாடி நின்றால் நடக்கும் திரளில் தடை ஏற்படுகிறது.

நாங்கள் செல்ல வேண்டியது அஷ்ட சக்தி மண்டபத்தின் வழியே என்று அழைப்புக்கார்டில் குறிப்பிட்டிருந்தது.

கிழக்கு சித்திரை வீதியில் உள்ள இந்த மண்டபம் அன்னை மீனாட்சியம்மன் சந்நிதானத்திற்குச் செல்வதற்கு வழி என்பதை பின்னர் அறிந்து கொண்டேன்.

மகிழ்ச்சியுடன் திருப்தியும் பொங்கும் மக்கள் திரளோடு சேர்ந்து இடை இடையே கோபுரங்களை நோக்கி நோக்கி அஷ்டசக்தி மண்டபத்தின் முன் வந்து நின்றோம்.

ஆனந்தம் பொங்கியது. அந்தப் பேரழகில் உள்ளம் தோய்ந்தது. இந்த வாயிலின் வழியே உள்ளே சென்று அம்மையப்பனின் கும்பாபிஷேகத்தைத் தரிசிக்கப் போகிறோம்.

மலாயாவில் சுங்கை சிப்புட் எங்கே, தலை நகர் எங்கே, மதுரை எங்கே.

ஓயாது மனிதனைச் சுற்றிக் கொண்டிருக்கும் கடமைகள் எனும் கட்டுக்கள் எங்கே?

இவை எல்லாம் புறத்தே ஒதுக்கச் செய்து, காத்து, அஷ்டசக்தி மண்டபத்திற்கு முன் நிற்கச் செய்த அந்த ஒப்பற்ற கருணைக்குப்பாத்திரமாகச் செய்ததே இந்தப் பிறவி.

உள்ளே செல்ல வேண்டும் மீனாட்சி புத்திரன் சினிமாப்படங்களைப் பிடிக்கிறார். இந்த ஒப்பற்ற அழகுக் காட்சியைப் பார்க்காதவர்கட்குக் காட்ட வேண்டாமா, அந்த நல்ல பணியில் ஈடுபட்டுள்ளார். என் உள்ளம் உள்ளே பாய்கிறது. என் உள்ளத் துடிப்பில் கலந்து மீனாட்சிபுத்திரன் உள்ளே செல்லப் புறப்பட்டார்.

புரியாத இன்பம் என்னைப் பிடித்தது. அறிவில் தெளிவை யான் காண முடியவில்லை. பிரமிப்பைக் கண்டேன். அஷ்டசக்தி மண்டபத்தில் நுழைந்ததும், விநாயகர் தரிசனம் தந்தார்... வணங்கி உள்ளே சென்றோம்.

முதலில் கண்ணில் தோன்றியது பொற்றாமரைக்குளமா, அல்லது சந்நிதானமா, ஞாபகம் இல்லை. பொற்றாமரைக் குளத்தின் புனித அழகில் உள்ளம் குதித்தது. கும்பாபி

ஷேகத்திற்காக ஏற்பாடுகள் செய்திருப்பதால் குறிப்பிட்ட வழியினைப் பற்றித்தான் செல்ல வேண்டும். அந்தப் பக்கம் போக முடியாது. இடது பக்கம் பொற்றாமரைக் குளம் தரிசித்துக் கொண்டே செல்ல முன்னால் ஒரு பலிபீடம்.

வணங்கினேன். வகுத்த பாதைப்படி வலது பக்கம் திரும்ப வேண்டும். சந்நிதானத்தை நோக்கி வணங்கினேன் வண்ணப்பணித்து என்னை வா என்ற வான் கருணை உள்ளத்தில் அமுது எனப்பொங்கியது. மீனாட்சிபுத்திரனை யார் சந்நிதானம் என்று கேட்டேன். என் அன்னை மீனாட்சியம்மன் திருமுன்னர் நின்றேன் என்பதை உணர்ந்து, முதலிலேயே உணர்ந்துகொள்ளவில்லையே என வெட்கப்பட்டேன்.

செல்லும் வழியைக் காட்டிக்கொண்டிருந்தனர் திருப்பணிக்குழுத் தொண்டர்கள். நடுக்கட்டு மண்டப வழியே மேலே சென்று மேற்கு நோக்கியிருக்கும் போது இடது பக்கத்தில் அன்னை மீனாட்சியம்மன் வலது பக்கத்தில் அப்பன் சொக்கேசர் கோபுரமும் உள்ள பிரகாரத்தின் மேல் தளத்திற்கு வந்து சேர்ந்தோம்.

இங்கு அமைச்சர்கள் முதலியோர் வீற்றிருப்பதற்காக பலகை மேடை போடப் பெற்றிருந்தது. இதைத் தாண்டி மேடையருகில் நின்றோம்.

நாங்கள் நின்ற இடம் மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத்தில் மையமான இடம்.

ஒருமுறை சுற்றிப் பார்த்ததும் இன்று கும்பாபிஷேகம் ஆகப்போகும் கோபுரங்கள் பன்னிரண்டும் இரு தங்க விமானங்களும் காட்சி தந்தன.

முதலாவதாக கோபுரங்களை வர்ணிக்கவேண்டும். இது சாத்தியமானதாக எனக்குத் தெரியவில்லை. ஒரு கோபுரம் அல்ல, நான்கு திசைகளிலும் உள்ள கோபுரங்களை வர்ணிக்க வேண்டும். ஒப்பற்ற அழகுடன் அழகு வடிவங்களைக் கொண்ட இந்த கோபுரங்கள் சிற்பிகளின் திறனால் தெய்வ மணங்கொண்டு திகழ்ந்தன.

அடுத்து உள் பிரகாரத்தில் உள்ள கோபுரங்கள்.....

அன்னை ஆலய தங்க விமானம், அப்பன் ஆலய தங்க விமானம்.

ஒலிபெருக்கியில் தெய்வத் தமிழில் தேவாரப் பாடல்கள் பொங்கி வந்தன, திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும தென்கூடல் திரு ஆலவாயான புகழினைப் பாடினர் அவர்களது இறவாத் தமிழில்.

மங்கையர்கரசியையும் குலச்சிறையாரையும். மன்னவரையும் அழைத்துக்கொண்டு திருஞானசம்பந்தர் ஆலயத்தினுள் சொக்கேசர் சந்நிதானத்திற்குள் செல்கிறுர். துடிக்கும் அவரது உள்ளம் அழகன் நினைபபில் துடிக்கிறது. கொட்டுகிருர் அருவியைப் போல அமுதத் தமிழில் அவர் புகழினை..... ஆடும் கூத்தனின் நாட்டிய இசை அவர் உள்ளத்தில் தாண்டவமாடுகிறது. அவர் திருவுருவம் தவழ்கிறது. அவர் புகழ்பரவுகிறது. பாடுகிறுர்....

விடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே

பட்டிசைந்த அல்குளாள் பாவையாளோர் பாகமா
ஒட்டிசைந்த தன்றியும் உச்சியாளோ ருத்தியாக்
கொட்டிசைந்த ஆடலாய் கூடல்ஆல வாயிலாய்
எட்டிசைந்த மூர்த்தியாயிருந்த வாறி தென்னையே

குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ அருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென்முகம் மனே

முதிருநீர்ச் சடைமுடி முதல்வநீ முழங்கழல்
அதிரவீசி யாடுவாய் அழகன்நீ புயங்கன்நீ
மதுரன்நீ மணளன்நீ மதுரையால வாயிலாய்
சதுரன்நீ சதுர்முகன் கபாலம் ஏந்து சம்புவே:

ஆதியந்த மாயிஞய் ஆலவாயில் அண்ணலே
சோதியந்த மாயிஞய் சோதியுள்ளோர் சோதியாய்
கீதம் வந்த வாய்மையால் கிளர்தருக்கி ஞர்க்கலால்
ஓதிவந்த வாய்மையால் உணர்ந்துரைக்க லாகுமே.

ஒலிபெருக்கியில் இந்தக்காட்சியுடன் பாடல்கள் பத்தும் பொங்கி வந்தன.

அன்று மக்கள் திரள் திரண்ட சூழ்நிலை வேறு.

இதோ திருநாவுக்கரசரின் பாடல் பொங்குகிறது. பழுத்த பக்தராகிய திருநாவுக்கரசரின் உள்ளம் அன்பிலேயே தோய்ந்து ஊறியதோ .....

வாயானை
மனத்தானை
மனத்துள் நின்ற
கருத்தானை
கருத்தறிந்து
முடிப்பான் தன்னை
தூயானைத்
தூவெள்ளை ஏற்றான் தன்னை, சுடர்திங்கட் சடையானை
தொடர்ந்து நின்றென் தாயானைத்
தவமாய தன்மையானைத்
தலையாய
தேவாதி தேவர்க்கென்றும் சேயானைத்
தென்கூடல் திருஆலவாய்ச் சிவனடியே
சிந்திக்கப் பெற்றேன் யானே...

## கும்பாபிஷேகத்தில்..

பேசுவது யாரால், சிந்திக்கும் மனது தூண்டப்படுவது யாரால், நடத்த எண்ணுவது, நடத்துவிப்பது அனைத்தும் யாரால், இத்தனையும் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் போதாமல் தொடர்ந்து நின்று தாயாக நிற்கும் அந்தக கருணைச் சுடரொளியை....

தாயாக நிற்கின்றான். பிள்ளையின் தவறுதலை அறியாதவள் தாய். பிள்ளையைக் காத்துவளர்ப்பதே பித்தாகக் கொண்டவள் தாய். தாயாகிப் பித்தனுகவும் ஆகிய பெரும் பெருமை ஐயனது அல்லவா?

திருநாவுக்கரசர் திருத்தாண்டகம் ஒலி பெருக்கியில் சொட்டுகிறது.

மதுரை......

திருவாசகம் எனும் பக்திப் பெருக்கில், விளைந்த தேனமுதைத் தர வழி தந்தது மதுரை அல்லவா?

ஆடும் பிரான் ஆட்டுவிக்கின்றார். ஆடுகின்றார்....

அம்மையப்பன் கும்பாபிஷேகத்திற்கு மத்தியில் அடியோமையும் வீற்றிருக்கத் திருவுள்ளம் கொண்டு விட்டார்.

பெரியவர்கள் வந்தனர். மக்கள் வந்தனர். நாதஸ்வரத்தின் இன்னிசை பரவியது. கடங்கள் புறப்பட்டன. ஒவ்வொரு கோபுரத்திலும் புனித நீர் கொண்டு செல்லப்பெற்றது. ஒவ்வொரு கோபுரத்திலும் பட்டர்களும் துணைவர்களும் கும்பாபிஷேகம் செய்யத் தயாராக நிற்கின்றனர்.

10 மணிக்கு சிகப்புப் பொறி ஒன்றைப் பாய்ச்சுவோம் அதற்கு ஐந்து விநாடிகளுக்குப் பின்னர் மீண்டும் ஒன்று பாய்ச்சுவோம் அப்பொழுது கும்பாபிஷேகம் ஆகும் என்ற அறிவிப்பை ஒலிபெருக்கி தந்தது.

நிசப்தமான நிலை. தெய்வத்தமிழ் பாட்டாகப் பரவுகிறது.

மணி பத்து ஆனதும் சிகப்புப் பொறி தோன்றியது. சில நிமிடங்களுக்குப் பின் இரண்டாவது சிகப்புப்பொறி பாய்ந்தது வானத்தில்.

கும்பாபிஷேகச் சடங்குகள் துவங்கின. வீற்றிருந்தவர்கள் கரங்கள் வணங்கின. கும்பாபிஷேகம் ஆகிறது; தீபாராதனை நடக்கிறது. பரம்பரையாக ஒருக்கால் பல பிறவிகளாக உயிரில் கலந்து ஊனில் கலந்து ஊறி வந்த பண்பாடு பிரிக்கப்பெற முடியுமா? எழுந்தன கால்கள்; என் கால்கள் மட்டிலுமல்ல. எல்லோரது கால்களும் எழுந்தன. கூப்பிய கரங்களுடன் ஒரு சுற்றுச் சுற்றினர் அனைவரும். ஒவ்வொரு கோபுரத்திலும் கும்பாபிஷேகம்; ஒவ்வொரு கோபுரத்திலும் தீபாராதனை.... வணங்கினோம். அன்னை கோபுரத்தில் கும்பாபிஷேகம் தீபாராதனை. அப்பன் கோபுரத்தில் கும்பாபிஷேகம், தீபாராதனை வணங்கினோம்......

மக்கள் திரளை நோக்கினேன். கூப்பிய கரங்களுடன் வலம் வருகின்றனர். முகங்களிலே நிறைவு, உருக்கம். என்ன வாய்ப்பு என்ற நிறைவோ, அன்றி இந்த நல்லருள் கிடைத்ததே என்ற உருக்கமோ?

பட்டர் ஒருவர் கும்பாபிஷேக தீர்த்தத்தைக்கொண்டு வந்து அமைச்சர்கள் முதலியவர்கட்கும் பின்னர் மக்கள் மேலும் தெளித்தார். மீனாட்சிபுத்திரன் கும்பாபிஷேக தீர்த்தம் தன் மேல் விழ வேண்டும் என முன் சென்றார். இவரது முகத்தைக் கவனித்த பட்டர் தாராளமாக தீர்த்தத்தை முகத்தில் தெளித்தார்.

இவர் முகத்தில் தீர்த்தம் கிடைக்க வேண்டும் என்ற ஆவலும், அதை உணர்ந்து அவர் தீர்த்தத்தைத் தெளித்த தன்மையும். இவர் நிறைவுடன் ஏற்றுக்கொண்ட நிலையும் என் நினைவில் நீங்காது உளது.

கோபுரங்களில் மகா கும்பாபிஷேகம் ஆகிவிட்டது. மக்கள் மேலிருந்து கீழே இறங்க ஆரம்பித்தார்கள். கூட்டத்துடன் சேர்ந்து நாங்களும் நடந்தோம்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தபடி வகுத்த வழிப்படியே அனைவரும் செல்ல வேண்டும். சிந்தையை அம்மையப்பன் பால் வைத்து இந்த வழியையே தொடர சுந்தரேசப்பெருமான் ஆலயம் வந்து சேர்ந்தோம். கூட்டம் நடந்து கொண்டேயிருக்க வேண்டும். ஆகவே கிட்டத்தட்ட நடந்து கொண்டே பொறுமையின் சின்னம் போல் விளங்கும் விநாயகப் பெருமானைத் தரிசித்து முன் நடந்தோம்.

பட்டர் ஒருவர் வெள்ளிச் செம்புடன் முன் வந்தார். தீர்த்தம் தரும்படி கேட்டோம். முடிந்துவிட்டது என்றார். விபூதிப் பிரசாதம் தந்தார்.

அடுத்த சந்நிதானத்திற்கு முன் வணங்கி எழுந்தோம்.

அந்த சமயத்தில் காஞ்சி காம கோடி பீட ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகள் வந்துகொண்டிருந்தார்கள். அன்பின் வடிவாகக் காட்சி தந்தார்; அவரை வணங்கினோம்.

கட்டிய வழிகாட்டும் கயிறைத் தொடர அன்னை மீனாட்சியம்மன் சந்நிதானத்திற்கு வந்து சேர்ந்தோம். இங்கு பெருந் திரளான மக்கள்; அன்னையை தரிசிக்க எண்ணக்கூட இயலவில்லை நடந்து கொண்டே பாதையைத் தொடரவேண்டும். அதைப் பின்பற்றினோம்.

பொற்றாமரைக் குளத்தருகில் வீற்று கும்பாபிஷேகமான விமானங்களையும், கோபுரங்களையும் தரிசித்தோம்.

ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலயத்தில் உள்ள திருக்குளத்தில் தவளையே இல்லை என்று சொல்லக்கேட்டிருந்தேன்.

காலத்தோடும், தமிழோடும், நம் ஊனோடும் உயிரோடும் கலந்து வரும் இந்த பொற்றாமரைக் குளத்தில் மீன்களே இல்லை என அறிந்தேன்.

## மீன் இல்லை

இதற்குக் காரணமாக பழைய கதையும் உண்டு.

ஒருகாலத்தில் பொற்றாமரைக் குளத்தில், மீன்கள் மிகுந்திருந்தனவாம். பறந்து சென்ற கொக்கு ஒன்று இந்த மீன்கள் அங்கயற்கண்ணி ஆலயத் திருக் குளத்தில் உள்ள மீன்கள் என எண்ணாது கொத்தித் தின்ன யத்தனித்ததால் சாபம் பெற்று உயிர் நீங்க வேண்டிய நிலை வந்தபோது வேறு கொக்குகளும் இதே நிலை அடையாமல் இருக்க இந்தக் குளத்தில் மீன்கள் இல்லாமலே இருந்தால் சபலம் ஏற்படாது என்று வேண்டிக்கொண்டதாம்.

இது பெற்ற வரத்தினால் பொற்றாமரைக் குளத்தில் மீன்களே இல்லை என்பர்.

திருஆலயத்தையும், கோபுரங்களையும், அங்கு தவழ்ந்த தெய்வத்தன்மைக்கு மத்தியில் நடமாடிக் கொண்டிருந்த பக்த கோடிகளையும் பார்த்துக்கொண்டேயிருக்க நேரம் போவது தெரியாமலேயே போய்க்கொண்டிருந்தது.

அன்னையின் இல்லத்தில் இருக்கிறோம் என்ற சொந்தம் கலந்த நிறைவு உள்ளத்தில் மிகுந்திருந்தது.

ஆனால், அன்னை தரிசனமும் கிடைக்கவில்லை அப்பன் தரிசனமும் கிடைக்கவில்லை. கும்பாபிஷேக வைபவ மத்தியில் இருவரும் உள்ளனர்; அவர்கள் இருவரையும் தரிசிக்க வேண்டும்; அர்ச்சனை செய்யவேண்டும். இந்த சமயத்தில் நெருக்கடியை முன்னிட்டு அர்ச்சனை சீட்டுக்கள் விற்பதை நிறுத்தி வைத்திருந்தார்கள்.

நேரம் ஓடியது. மத்தியானத்திற்கு மேல் இல்லம் திரும்பினோம். இங்கு உயர்திரு. ஆறுமுகம்பிள்ளை குடும்பம் சுற்றம் சூழ தங்கியிருந்தனர். எல்லோரும் உணவருந்தினோம்.

எல்லோரையும் ஆனந்தமான நித்திரை வந்து பிணைத்து ஓய்வைத்தந்தது.

மாலையில் திரு. ஆறுமுகம்பிள்ளை திருப்புத்தூருக்குத் திரும்பினார்கள்.

நாங்கள் ஹோட்டல் மிட்லண்டில் ஒரு ரூம் பார்த்துக் கொண்டு திருமுருகன் படைவீடுகளில் முதலாவது வீடாகிய திருப்பரங்குன்றத்தைத் தரிசிக்கச் சென்றோம்.

## *திருப்பரங்குன்றத்தில்*

ஆறுபடை வீடுகளில் முதலாவது படைவீடு திருப்பரங்குன்றம். சூரசம்ஹாரப் போர்முடிந்ததும் திருமுருகப் பிரானுக்குத் திருமணம் நடந்த திருத்தலம்.

இயலும் இசையும் வடிவும் அழகும் எழுத அரிய அண்ணலுக்கும் தேவேந்திரன் மகள் தெய்வயானைக்கும் நடந்த திருமணத்திற்கு வந்தவர்கள் பட்டியலை எண்ணும்போது உள்ளம் புளகாங்கிதம் அடையும். சிவபெருமானும் பார்வதி தேவியும் மாப்பிள்ளையின் பெற்றோர்களாக எழுந்தருளும் போது ஸ்ரீமான் நாராயணன் பிரம்மதேவன் அங்குதானே வந்திருப்பார்கள்.

இந்த இனிய நினைவில் திளைத்து வளர்ந்து அருளில் ஊறும் அன்பர் சூழாம் திருப்பரங்குன்றத்தை, அரிக்கணம் ஒலிக்கும் இந்த குன்றத்தை, ஓயாது நாடுதலும் பாடுதலும் வியப்பன்று.

குன்றம். குன்றத்தைத் துளைத்து எழுந்துள்ளது திருப்பரங்குன்ற ஆலயம். படிக்கட்டுக்கள் வழியே பிரார்த்தனை பொருட்களை வாங்கிச் சென்றோம்.

அங்கு சந்நிதானத்தில் ஒரு பகுதியில் திரளான கூட்டம். ஓயாது அர்ச்சனை. குன்றுதோறும் அமரும் குமரனைத் தரிசிக்க வந்தவர்கள் அவரவர்கள் குறையை அவரிடந்தானே கூறுவார்கள்.

அர்ச்சனை நடந்துகொண்டிருப்பதைக் கவனித்துக் கொண்டேயிருந்தேன்.

உள்ளம் மதுரையில் நங்கூரமிட்டிருந்தது. இங்கு திருமுருகன் ஆலயம். இன்னும் அன்னையைத் தரிசிக்கவில்லை. வழி தரவேண்டும் என்ற பிரார்த்தனை எழுந்தது.

விநாயகருக்கும் அன்னைக்கும் திருமுருகபிரானுக்கும் ஸ்ரீ நாராயணனுக்கும் அர்ச்சனை செய்யவேண்டும் என்றோம் ஆனந்தமாக அர்ச்சனை நடைபெற்றது. பிரசாதங்களைப் பெற்று வணங்கி மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சமர்ப்பிக்க சில மலர்மாலைகளையும் வாங்கிக்கொண்டு மதுரைக்கு உள்ளத்தில் சொந்தம் எனக்கொண்ட அன்பு ஊருக்குத் திரும்பினோம்.

இன்று இரவு அன்னையும் அப்பனும் திருவீதி உலா வருவார்கள். அந்தத் திருக்காட்சியைத் தரிசிக்க திருஞான சம்பந்தர் மணிவாசகர் நடந்த அந்தப் புனித மண்மிசை நின்று தரிசிக்கப் போகிறோம்.

இந்த ஆனந்தத்தில் இரவை எதிர்நோக்கினோம். இதற்கு இடையில் கிடைத்த நேரத்தில் மதுரை ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயம் சென்றோம்.

அங்கு அன்னை அன்பு தவழக் காட்சி தந்தார்கள்.

அன்னை மகாமாரியம்மன் அன்பு தாயன்பு மிக்கது. குழந்தைகள் சட்டைகளைப் மண்ணில் தோய்த்து, மண்ணில் புரண்டு விளையாடுவதைப் பார்த்தால் அதை நிம்

மதியான ஆனந்தத்துடன் குழந்தைகள்தானே, விளையாடட்டும் என்ற அன்புடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

இந்த அன்பின் சின்னம் இவர்கள் ஆலயத்தில் காணலாம். பொறுமையுடன் பரபரப்பின்றி அவரவர் தன்மைக்கேற்ப பிராத்தனை நடக்கும்.

எல்லாவற்றிற்கும் நடுநாயகமாக அன்னை வீற்றுக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கவனிப்பில் எல்லாம் நடந்துகொண்டேயிருக்கும்.

என்ன பேருண்மை. தனித்துணை நீ நிற்க யான் தருக்கித்தலையால் நடக்கும் வினைத்துணைக்கு இங்கு இடமில்லை...

நீயே சரண்.

ஆலயத்துக்கு முன்னால் பெரியவர் அர்ச்சனைச் சீட்டு வழங்குகிறார். பிராத்தனைப்பொருள்களை வாங்கி அர்ச்சனைச் சீட்டுக்களை வாங்கி அன்னையைத்தரிசித்தோம்.

ஹாட்டல் இல்லம் திரும்பி இரவு 11-00 மணிக்கு திரு வீதி உலா வந்து கொண்டிருந்த மதுராம்பிகை அன்னையையும் மதுரேச அப்பனையும் தரிசிக்கச் சென்றோம்.

தெற்கு மாசிவீதியில் சகடைகளில் வெள்ளிவாகனங்களில் திரு ஊர்வலம். நாதஸ்வர இன்னிசை தவழ்கிறது. மக்கள் திரள்.

விநாயகப் பெருமான், திருமுருகன், மணிவாசகர், அன்னை, அப்பன், இன்னும் பலமூர்த்திகளுடன் பவனி வந்தனர்.

நாங்களும் உடன் வந்தோம். மதுரையை சொந்தமாக உள்ளங்கொண்ட பின்னர் வெறுமனே நடந்து செல்வது போதுமா.

தாம்பளத்தில் சூடம், வெற்றிலை பாக்கு திருப்பரங்குன்றத்தில் வாங்கி வந்த மாலைகள் முதலியன வைத்து தெற்கு மாசி வீதியில் அன்னைக்கும் அப்பனுக்கும் அர்ச்சனை செய்தோம்.

விநாயகப் பெருமானுக்கு உடைக்க வேண்டிய தேங்காய்களை அவசரத்தில் ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருமுன்னர் உடைத்தோம்.

பொறுமையாக சாவகாசமாக தரிசனம் செய்து உள்ளத்தில் உலாவைக் கொண்டு மறுநாள் (29-6-63ந்தேதி) காலை மணி 4-30க்கு ஆலயம் செல்ல முடிவு செய்து இல்லம் திரும்பினோம்.

அதிகாலையிலேயே பக்தர் திரளும் மிகுந்திருந்தது. காலை பூஜைகள் நடைபெற்றன. அன்னையைத் தரிசிக்க ஒவ்வொருவரும் விரும்பினர். என்னை அன்னை முன் நிறுத்த மீனாட்சிபுத்திரன் அன்புடன் வழி வகுத்துத் தந்தார். ஓரளவு தான் தரிசித்தேன். இங்கும் சொக்கேசருக்கும் பூஜை ஆன பின்னர் அர்ச்சனை செய்ய எண்ணினோம். ஆனால், கும்பாபிஷேக நெருக்கடியை முன்னிட்டு அர்ச்சனை டிக்கட்டுகள் வழங்குவது இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

பிரார்த்தனைக்கு வாங்கிய மாலை முதலியவற்றை என்ன செய்வது என்ற சிந்தனைக்கு சுலபமான வழியைக் காட்டிக் கொண்டிருந்தார் கணேசப் பெருமான் ஒருவராக அல்ல இருவராக.

## இரட்டை விநாயகரின் அன்பு

ஸ்ரீ மீனாட்சியம்மனுக்கு வலது பக்கத்தில் இரட்டை விநாயகர் இருந்தனர். எங்களைப் போல பிரார்த்தனைப் பொருள்களை வாங்கி வந்தவர்கள் மாலைகளை இருவருக்கும் சாற்றி, ஊதுவத்தியை ஏற்றி வைத்து தேங்காய் உடைத்து தீபாராதனை செய்து வணங்கி பிரசாதங்களை தாங்களே எடுத்துச் செல்வதைக் கவனித்தோம்.

அன்னை மீனாட்சியம்மன் பிரதிநிதியாக விநாயகப் பெருமான் பொறுப்பேற்றுள்ளார். பெரிய பொறுப்பாயிருப்பதால் இருவராய் இருக்கிறார் போலும்.

மீனாட்சிபுத்திரனும் நானும் "அர்ச்சகர் பொறுப்பேற்றோம்" மாலைகளைச் சாற்றி தேங்காய் உடைத்து சூடம் ஏற்றி ஆராதனை காட்டி வணங்கி இப்பிறவிதனில் மதுரையம்பதி தனில் இப்படியும் பிரார்த்தனை சேர்ந்து செய்ய நேர்ந்த பெரும் வாய்ப்பினைப் போற்றி நல்லருள் சித்திக்கப் பிரார்த்தனை செய்தோம்.

இரட்டை விநாயகர் அருள்பாலித்தார். என்ன உரிமையுடன் அவர்கள் இருவரையும் அணுக முடிந்தது. என்ன சொந்தத்துடன் மலர் மாலைகளைச் சாற்றி வணக்கம் செய்ய முடிந்தது.

முதல் வணக்கத்தை ஏற்று விக்கினம் இன்றி செயல் நிறைவேற அருளும் விநாயகப் பெருமான் இரட்டையாக இங்கு இருப்பது ஏன்?

இந்தக் கேள்வி எழவேயில்லை. தில்லையில் நர்த்தனம் செய்யும் கோலத்தில் நிற்கிறார்; ஐயன் திருக் கூத்தாடும் சித்சபை; ஆகவே முதற்பிள்ளை நர்த்தனம் செய்தார் என்று மனது தெளிவைக் கூறுகிறது.

இங்கு இருவராக ஒருவரே இருந்து வரப்பிரசாதம் அளிக்க முன் வந்தது ஏன்?

வேலை மிகுதியானபோது இன்னும் இரண்டு கைகள் இருந்தால் வசதியாக இருக்கும் என நம் எண்ணம் ஆவலுறுவது போல அன்னையைத் தரிசிக்க ஓயாது வரும் பக்த கோடிகள் முதலில் தன்னைச் சந்திப்பதால் இவர்களுக்கு ஓயாது வணங்க தான் ஒருவராக இருந்தால் போதாது ஆகவே இருவராக இருக்க வேண்டும் என எண்ணினாரோ தெரியவில்லை.

ஒருவராக நல்லவர் இருப்பதை விட இருவராக இருப்பது சிறப்புத்தானே.

ஒரு நல்லவரிடம் நல்லதை பெறுவதோடு மற்ற நல்லவரிடமும் அன்பைப் பெறலாமல்லவா?

எங்கள் உள்ளத் துடிப்பில் அன்னையைப் பார்க்க முடியவில்லை என்றாலும் அவர்களுக்கு வேண்டியவற்றையும் சேர்த்து விநாயகர் இருவருக்கும் சமர்ப்பிக்கிறோம் என்ற நிறைவில் இரட்டையர் பற்றிய விபரத்தைத் தெரிந்துக் கொள்ள நினைக்கவில்லை. திருப்தியாக தீபாராதனை நடத்தினோம்.

வணங்கினோம்.

ஆனந்தத்துடன் புறப்பட்டோம்.

மதுரையின் வீதியின் வழியே ஆனந்தமாய் நடந்து சென்று கொண்டிருந்தோம். மீனாட்சிபுத்திரன் உறவினர் ஒருவர் ஒரு கடைக்கு முன் நின்றார். விசாரணை ஆரம்பித்தது. கடையுள் நுழைந்து அங்கு அன்புடன் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தோம்.

அங்கு அன்னை காலை பசியாற அவர்கள் மூலம் உண வளித்தார். இனிய அன்புடன் அளித்த உணவை அருந்தி ஒரு விசித்திரமான காரியத்தைச் செய்ய புறப்பட்டோம்.

நாளை நடப்பதை யார் அறிவார் என்று சொன்னாலும் நாளை நடப்பதை யார் அறிய விரும்பார்?

## எதிர்காலமும் புளியோதரையும்

மதுரையில் தேசிகாசாரியார் ஒருவர் பரம்பரையாக எப்பொழுதோ எழுதியுள்ள ஏடுகளை வைத்திருப்பதாகவும், பரம்பரை முறையை அனுசரித்து கைபார்த்து இன்ன ரகக் கை என நிர்ணயித்ததும் அதற்குரிய பெயரைக்குறிப்பிட்டு ஏட்டுக்கட்டில் தேடுவார்கள். முதல் காண்டம் கிடைக்கும். இதில் பிறந்தது வளர்ந்தது, நட்சத்திரம் முதலியன இருக்கும். அடுத்து இதை அடுத்த காண்டங்களைத்தேடினால் பூரண மாய் விபரம் கிடைக்கும். இது சொல்லப்பெற்ற தகவல்.

தேசிகாசாரியாரை தெற்கு ஆவணி மூல வீதியில் கண் டோம்.

மீனாட்சிபுத்திரன் ரேகைக் குறிப்பு மணி மகுட மயூர வேல் புள்ளி 5 என்றார். என் ரேகை விரிமகரத்தரி வட்டம் புள்ளி 2 என்றார்.

மாலை மணி 4-00க்குள் வந்தால் ஏடுகளைத் தேடி இருந் தால் வைத்திருப்பதாகக் கூறினார்.

தாங்கள் அவரிடம் பயணம் சொல்லி ஸ்ரீலஸ்ரீ பன்றி மலை சுவாமிகளைத் தரிசிக்க திண்டுக்கல் புறப்பட்டோம்.

மதுரையிலிருந்து திண்டுக்கல் 39 மைல் தூரமிருக்கும்.

அங்கு சேரும்போது மணி 2-45.

ரயில்வே ஸ்டேஷன் உணவுசாலை சென்று புளியோதரை தயிர்சாதம் அருந்தினோம்.

பிரமாதமாய் இருந்தது.

திருச்சி ஜங்ஷனில் பிரசாதம் வாங்கித் தருவதாக மீனாட்சிபுத்திரன் கூறினார். அதையும் ருசிக்க ஒத்துக் கொண் டேன்.

திரு சுவாமியவர்கள் இல்லத்தில் இல்லை. அவர் மகனும் மருமகளும் குழந்தையும் இருந்தார்கள். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து தாக சாந்தி செய்து மதுரை மாநகர் திரும்பினோம்.

மதுரையில் மகாலட்சுமி மில் அதிபரும் மீனாட்சிபுத்திரனுக்கு மிகவும் வேண்டியவருமான உயர் திரு அழகுசுந்தரம் செட்டியாரவர்கள் இல்லத்தில் இரவு உணவு. உணவுக்கு இடையில் அன்னை ஆலயம் சென்று வர முடிவு செய்தோம்.

அன்னையை தரிசிக்க சுலபமான வழி ஒன்றைச் செய்ய எண்ணினோம். அதிகார நிலையில் உள்ள ஒருவரை அழைத்துச் சென்றால் தரிசனம் சுலபமாகக் கிடைக்கும் என்ற சபலம்.

ஆனால், அஷ்டசக்தி மண்டபத்தை அணுகியதும் இந்த எண்ணத்தை விட்டு விட்டோம்.

## விருந்தும், பொருட்காட்சியும்

அன்னையின் அன்பைப் பெற இது வழியல்ல அன்னையின் கிருபை யாதோ அதை ஏற்றுக் கொள்வது என முடிவு செய்து உள் சென்று வணங்கிப் புறப்பட்டோம்.

தமிழ் வளர்த்த மதுரையில் 'ஐஸ்லாண்ட் தாக சாந்திக் கடை கண்ணில் தெரிந்தது, பார்க்க' சென்றோம்.

இத்தனை நாட்கள் கண்ணில் தோன்றாமல் இருந்த கடை கண்ணில் தெரியவும் இழுக்கவும் காரணம் வேண்டும் அல்லவா?

அங்கு தாக சாந்தி செய்து கொண்டிருந்த அன்பரைக் கண்டதும், மீனாட்சிபுத்திரன் ஆனந்த மடைந்தார். உயர் திரு. அழகுசுந்தரம் செட்டியார் அவர்களின் இளைய புதல்வர் திரு. லட்சுமணன் தம்பதிகளை அறிமுகம் செய்து வைத்தார்.

ஒலி பெருக்கி ஆங்கில இசையை செவிகளில் கொட்டியது.

அன்புடன் அளவளாவி இனிய பாதாம் கீர் உட்கொண்டோம்.

விருந்தின்போது சந்திப்பதாகக் கூறிப் புறப்பட்டோம்.

அங்கு திரு. அழகுசுந்தரம் செட்டியாரவர்களின் அன்பு மகன் திரு. ராமநாதன் இருந்தார்.

திரு. மீனாட்சிபுத்திரன் அன்புடன் எங்களை அறிமுகப் படுத்தி வைத்தார்.

திரு. செட்டியாரது நண்பர் சிலோனிலிருந்து வந்த வக்கீல் ஒருவரும் இருந்தார்.

எல்லோரும் அன்புடன் அளவளாவிய பின்னர் உணவருந்தினோம் திவ்யமான உணவை மதுரை மாம்பழம் அமிர்தமாக்கியது.

விடைபெற்று சித்திரைப் பொருட்காட்சி பார்க்கச் சென்றோம்.

சுற்றிச் சுற்றி வந்து புத்தகக் கடை ஒன்றின் முன் நின்றோம். இங்கு புத்தகங்கள் சில வாங்கினோம்.

புறப்படும்போது எங்கள் கையில் ரஷ்ய நூல்களின் பட்டியல்கள் கொடுக்கப்பெற்றன.

அவற்றை ஆகாயத்தில் பறக்கவிட்டு பிரச்சாரத்தின் உன்னத சக்தியையும், அதன் மயக்கும் தன்மையையும் எண்ணி சுதந்தர நாட்டில் நடக்கும் சுதந்தரப் பொருட் காட்சியில், இந்தியப்பட்டியல் கிடைக்கவில்லை, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பாடு செல்லும் விசித்திரத் தன்மையை நினைத்து வருந்தி புருட்னிக் குளிர்பானம் அருந்தி ஹாட்டல் மிட்லண்ட் திரும்பினோம்.

## அன்னையின் அன்பணைப்பில்

நித்திரை கொள்வதற்கு முன் சிந்தனையை கோர்வை செய்து பார்த்தேன்.

நாளை மதுரையை விட்டுப் புறப்படுகிறோம் என்ற நினைப்பு முதலில் நின்றது, மத்தியில் நின்றது, இறுதியில் நின்றது.

மதுரை—

மதுரையில் உள்ள சக்திதான் என்ன? உற்றார் உறவினர் மலாயாவில் இருக்க மிகச்சொந்தத்துடன் ஈர்ப்பதன் காரணம் அன்னை அப்பன் இல்லம் இருப்பதனால் மட்டிலுமா?

நாளை புறப்படவேண்டும்.

அதிகாலையில் மீண்டும் எங்கள் உள்ளம், அன்னை ஆலயத்தில் நின்றது.

அர்ச்சனைப் பொருட்களின் சிலவற்றை அஷ்ட சக்தி மண்டபத்தைத் தாண்டியதும் வாங்கினோம். விநாயகரை வணங்கினோம். அடுத்த கட்டத்தில் மலர்மாலைகளையும் குங்குமத்தையும் மஞ்சளையும் வாங்கினோம்.

பொற்றாமரைக் குளத்தைத் தரிசித்து எங்களுக்கு மிகவும்சொந்தமான இரட்டை விநாயகரை வணங்கி அர்ச்சனை செய்ய பட்டரை அணுகினோம்.

இன்றும் அர்ச்சனை இல்லை என்ற செய்தி ஏமாற்றமாக உள்ளத்தில் பாய்ந்தது.

அப்படி என்றால் அன்னைக்கும் அப்பனுக்கும் அர்ச்சனை செய்யாமலேயே புறப்படப் போகிறோமோ?

என்ன நிலை...

மீனாட்சிபுத்திரனும் நானும் யோசித்தோம்.

இரட்டை விநாயகப் பெருமானுக்கு வந்தனை செய்வதைத் தவிர வேறு வழியில்லை. வழியில்லாதவர்கட்கு வழி தந்து விக்கினம் இன்றி ஆட்கொள்ள ஒருவர், இருவராக இரட்டிப்பு பலத்துடன் இருக்க சோர்வை நீக்க வேண்டியதுதானே.

இரட்டயரை அணுகி நேற்று பிராத்தனை செய்த பழக்கம் துணைசெய்ய இன்று அனுபவத்துடன் மாலைகளைச் சாற்றி ஆராதனை செய்து, பிராத்தனை செய்தோம்.

சாஷ்டாங்கம் செய்து எழுந்தோம்.

இரட்டை விநாயகர் அருள் பாலித்தார்.

இன்று அர்ச்சனைச் சீட்டுக்கள் கொடுப்பார்கள் என்று செய்தி காதில் விழுந்தது. ஓடினேன். என்னுடன் ஓடி வந்தார் முருகையா, பொற்றாமரைக்குளத்தைத் தாண்டி, வெளியில் சென்று தேங்காய்களையும் மலர்மாலைகளையும் அர்ச்சனைச் சீட்டுக்களையும் வாங்கி வந்தோம்.

பிராத்தனைக்காகக்கொடுத்தோம், பிராத்தனைத் தாம்பாள வரிசையில் சேர்ந்தது எங்கள் அன்புமிக்க தாம்பாளம்...

கோடி அர்ச்சனை ஆரம்பமானல் அது ஆன பின்தான் அர்ச்சனை செய்வார்கள் என்ற விவரத்தை பக்தர்கள் பேசிக்கொண்டார்கள்.

அன்னை அருள்பாலித்தார். எங்கள் தாம்பாளம் உள்ளே சென்றது. தீபாராதனை ஆகி பட்டர் அன்புடன் எங்களுக்கு மாலை தந்து, ஆசி தந்து, குங்குமம் தந்து தாம்பாளத்தை தந்தார்...

அன்னையின் அன்பு அன்பேயன்றே.

அன்னையின் ஆலயத்தில் இரட்டை விநாயகப் பெருமான் அருகில் தாம்பாளத்தை வைத்து வணங்கினோம்.

புறப்பட எழுந்தேன்.

எங்கு புறப்பட என்றது உள்ளம்.

அன்னையை விட்டுப் பிரியவா? அன்னை இல்லத்தை விட்டுப் புறப்படவா?

முடியாது என்றது உள்ளம்.

அன்னையிடமிருந்து பிரிக்கவா, முடியாது?

முடியாது, முடியாது அன்னையை விட்டுப்பிரிய முடியாது.

கொஞ்சும் பொற்றாமரைக்குளம்; அருள் பாலித்துக் காக்கும் அங்கயற்கண்ணம்மை, புறப்பட முடியாது.

என்ன செய்வாய்?

படியாய் கிடந்து உன் பவள வாய் காண்பேன் எனப் பாடிய ஆழ்வார் உள்ளம் அப்பொழுது சிந்தனையில் வந்தது.

அவர் படியாய் கிடந்து பார்ப்பார் மதுரை மண்ணில் வாழ்வதற்கா முடியாது? அன்னையின் ஆலயப் படியில்......

பொறுத்துச் செல்லலாம் என மீனாட்சிபுத்திரன் கூறினார்.

பொறுத்துப் பொறுமையாகச் செல்லலாம்.

திவ்ய நாம அர்ச்சனை ஆரம்பித்தது. உள்ளே பட்டர் ஓதுவது வெளியில் ஒலிபெருக்கியில் கேட்கிறது. சந்நிதானத்தில் கூடியிருப்பவர் அனைவரும் சேர்ந்து கோஷிக்கின்றனர். என்ன திவ்விய நாதம், என்ன தேவாமிர்தம்,

என்ன இன்ப உலகு, என் அம்மை அன்னையின் நாம சங்கீர்த்தனம் கேட்கின்றன செவிகள், ஓசை, பாய்கிறது, மோதுகிறது, இன்பம், இன்பம்.

இப்பிறவியும் பிறவியே.

பாவம் நீங்க, வினை ஓட, ஓதும் இவர்கள் மத்தியில் சென்று நிற்போம் கொட்டும் மழையில் நின்றால் உடலில் தோய்ந்துள்ள அழுக்கு ஓடாதா? அதே போல முழங்கும் நாமார்ச்சனையில் புலன்கள் புனிதமடையாதா?

ஒலிக்கின்றது, ஒலிக்கின்றது அன்னையின் திருநாமப் புகழ்...பையன் ஒருவன், சிறுவன் ஒன்பது அல்லது பத்து வயது இருக்கும், இனிய குரலுடன் நாமத்தைச் சேர்ந்து கோஷிக்கிறான். என் பக்கத்தில் வந்து ஓதுகிறான். அங்கு சென்று ஓதுகிறான். மீண்டும் வந்து வந்து ஓதுகிறான். நாதத்திற்குள் இவன் நாதம் அறிவுள் அறிவை அறிவது போலிருந்து.

நாமங்கள் காலத்தை நிர்மூலமாக்கி அனைத்தையும் தனதாக்கி தன்னொளியில் வாழ்வளிக்கும் அன்னையை அர்ச்சிக்கின்றன.

மனது அமைதியானது, நாம மழை தோய்ந்து வலுவைத் தந்தது.

அர்ச்சனை பூர்த்தியானது.

தீபாராதனை.

பிராத்தனை செய்து மகிழ்ந்தோம்.

கருணை வடிவானவள் மூன்றும் நாள் கருணை மழையால் ஆட்டி ஆட்கொண்ட அன்பினை எண்ணி உவந்தது உள்ளம்.

அப்பனுக்கு மதுரை மணாளனுக்கு அர்ச்சனை செய்து வணங்கி, மீண்டும் அன்னை திருமுன் நின்று இதயத்தை

அடிமையாக்கிக் கொண்டு பொற்றாமரைக் குளத்தைப் பார்த்துப் பார்த்து புறப்பட்டோம்.

அஷ்டசக்தி மண்டபத்தைத் தாண்டி, வணங்கி உள்ளபடியே புறப்பட்டோம்.

கள்நெஞ்சப்புலையன் என்று பாடல் வர்ணிக்கிறது நெஞ்சக்கனகல்லு என்று கூறுகிறது.

அன்னையின் அன்பு அணைப்பிலிருந்து பிரியும் இதயம் எப்படி இருக்க முடியும்?

ஹாட்டல் மிட்லண்டில் பசியாறினோம்.

புறப்படத் தயாரானோம்.

காருக்குப் பெட்டிகள் சென்றன.

திரு. கோவிந்தசாமி அவர்கள் பயணத்துக்குத் தந்த 'பிளாஸ்க்' நிறைய நன்னீரை நிரப்பிக் கொண்டோம்.

## அழகர் மலையில் மதுரேசர்

மதுரையில் அன்னை தரிசனம் செய்ய தங்க இடம் தந்த மில்லண்ட்ஸ் ரூமுக்கு வணக்கம் செய்து புறப்பட்டோம் அழகர் கோயிலுக்கு.

பழமுதிர்ச்சோலை, அழகர் கோயில் முருகப் பிரானின் ஆறுவது படை வீடு.

திருமாலிருஞ்சோலை என வைஷ்ணவர் பாடும் திவ்ய ஸ்தலமும் இதுவேதான்.

ஆலயத்தினுள் நுழைந்ததும் அங்கு வரிசையாக நின்றகார்கள், கூடியிருந்த கூட்டத்தினர் யாரோ பெரியவர் வந்துள்ளார் என்பதைக் காட்டியது.

விசாரித்தோம்; அறநிலையப் பாதுகாப்பு, அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் ஆலய அலுவலக மண்டபத்தில் இருப்பதாகவும், ஆலயத்தில் அடுத்து பூஜை நடைபெறும் என்றும் அறிந்தோம்.

மலையின் மேல் முருகன் உள்ளார் பார்க்கலாம் என்ற ஆவல் பிறந்தது. அலுவலகத்தில் கூட்டம் நடக்கிறது. பார்த்துக்கொண்டே மலை செல்லும் பகுதியை நோக்கி நடக்க முற்பட்டோம்

முப்போதும் திருமேனி தீண்டும் அர்ச்சகர் போல ஒருவர் நின்ருர்.

மேலே செல்வது பற்றி விசாரித்தோம், அவர் பதில் சொல்வதற்குள் "வைஷ்ணவ ஆலயக்காரரை சிவாலய விஷயம் பற்றி கேட்கலாமா" என எங்களுக்குள் பேசிக் கொண்டே நடந்தோம்.

நுழைவாயில் தாண்டி நடந்தோம்.

சோலையின் குளிர் நிழல், வண்ண மரங்களின் எழில் பழமுதிர் சோலை ஆயினும், திருமாலிருஞ்சோலையாயினும் ஆகுக, இனிய தெய்த மணம் கமழும் சோலை என்பதை உணர்த்தியது.

ஒரு குளம், கீழேஆழத்தில் தீர்த்தம். அதன் புனித நீரை உடலில் ஊற்றிக் கொள்ள நல்ல அமைப்பில் வாளிகள் கட்டப்பெற்றிருந்தன.... தீர்த்தத்தை எடுத்து தெளித்துக் கொண்டோம். கொஞ்சம் தூரம் நடந்தோம்.

மேலிருந்து பக்தர்கள் திரும்பி வந்து கொண்டிருந்தனர் மேலே சென்ருல் திரும்பி வர அதிக நேரம் செல்லும் ஆகவே ஒரு கட்டத்தில் குடம் ஏற்றி வைத்து வணங்கி திரும்பி பூஜையில் கலந்துகொள்ள முடிவு செய்தோம்.

மரத்தின் அடியில் இருந்த சந்நிதானங்களில் குடனை ஏற்றி வைத்து மேலே செல்லும் படியிலும் ஏற்றி வைத்து வணங்கிேேனம்.

செல்லும் பாதை திரும்ப வரும்படி அழைத்தது. தவழும் நிழலும், நிழல் தரும் மரங்களும் பசுமையின் அழகுடன், கொஞ்சி அழைத்தன.

இல்லை, முடியவில்லை, என வணங்கித் திரும்பினோம்.

முதலில் "வைஷ்ணவ அர்ச்சகர்" என நாங்கள் நினைத்துச் சென்றவர் நகை முகத்துடன் நின்றுகொண்டிருந்தார். எங்களைப்பார்த்ததும், வெள்ளி டப்பாவிலிருந்து விபூதிப் பிரசாதம் தரும் நிலையிலிருந்தார். வியப்புடன் வாங்கிக் கொண்டோம். மீனாட்சி சுந்தரரேஸ்வரர் ஆலய பட்டர் என்றார், அன்னையின் குங்குமம் தந்தார். மீனாட்சியம்மனே எனக்குத் தருவது போலிருக்கிறதே. என்றேன்.

என்ன வியப்பு? மதுரையில் அன்னையைப் பிரிய முடியாமல் பிரிந்து வந்த உள்ளத்திற்கு சக்தியைத் தர தன் பட்டரை, பிரதிநிதியை அன்னை அனுப்பி வைத்துள்ளார்களா?

நீண்ட நாட்களாக எனக்கு ஒரு ஆசை. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலிருந்து கட்டளை அர்ச்சனை விபூதி குங்குமப் பிரசாதங்களைப் பெறவேண்டும் என்பது அது.

இது நடந்த பாடில்லை.

பட்டர் அவர்களைக் கட்டளை அர்ச்சனை செய்து அனுப்ப முடியுமா என்று கேட்டேன்.

முடியும் என்றார்.

இருவரும் அமர்ந்தோம். பெயரை எழுதிக் கொடுத்தேன்.

தங்கள் பெயர் முகவரி யாதோ என வினவினார் மீனாட்சிபுத்திரன்.

"மதுரேச பட்டர்" என்றார்; முகவரியைக் கூறினார்.

மணாளன், மதுரன், மதுரேசன், அப்பன் சொக்கேசன், கருணையின கடைக்கண் என்ன அமுதம் பொழிகிறது!

யாரையும் அனுப்பவில்லை பிரதிநிதியாக மதுரேசனை அனுப்புகிறார். அந்த நாமம் உள்ளத்தில் உணர்வைத் தட்டி ஊனினை உருக்கவேண்டுமல்லவா ?

ஆகவே மதுரேசனை அனுப்புவோம்...

உள்ளத்தில் உணர்ச்சி பொங்கியது. மதுரேச பட்டராக என் உள்ளத்தில் அவர் தோன்றவில்லை...

வணங்கி விடை பெற்று திருவிளையாடல் இதில் தோய்ந்து, நாச்சியார் சமேதராக அருள் பாலிக்கும் பெருமாள் அழகரை, மதுரேசனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்த செம்மலைத் தரிசிக்கச் சென்றோம்.

அமைச்சர் வருகையினால் ஏற்பாடுகள் பலமாக இருந்தன.

தாயாரையும் சுவாமியையும் தரிசனம் செய்தோம். அர்ச்சனை செய்தோம்.

மதுரேசப் பட்டரை அழகர் மலைக்கு அனுப்பி அன்பைத் தந்த கருணையை எண்ணி உருகிப் புறப்பட்டோம். புறப்படும் போது மணி 11.00 இருக்கும்.

## திருப்பெருந்துறைக்கு

மதுரையிலிருந்து திருப்புத்தூர் வழியே ஆவுடையார் கோயிலுக்கும் அங்கிருந்து காரார் கடலை அடுத்திட்ட மீமிசலுக்கும் சென்று காரைக்குடி செல்வது இன்றைய திட்டம்.

அன்று மன்னவன் பாண்டியன் தன் அருமை அமைச்சரை கீழ்க்கரையோரத்தில் அரபுக்குதிரைகளை வாங்க அனுப்பியபோது அவர் இப்படித்தான் ஒரு வழியாக திருப் பெருந்துறை சென்றிருக்க வேண்டும்.

மதுரையிலிருந்து தென்னவன் பிரமராயனாகப் புறப் பட்ட அமைச்சர்பிரான் திருபெருந் துறையில் குருந்த மரத்

தடியில் அருள் பாலித்த குருநாதரைக் கண்டு, உள்ளத்தை அவரிடம் இழந்து, பெற்று. ஆவுடையார் கோயில் ஆலயத்தை நிறுவி, மதுரைக்கு அழைத்து வரப்பெற்று மணிவாசகப் பெருமான் ஆனார்; திருவாசகமும், திருக்கோவையாரும் தந்தருளினார்.

திருப்பெருந்துறை அன்று துறைமுகமாய் இருந்தது; ஆகவே இங்குதான் குதிரைகள் வந்து இறங்கியிருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர் சிலர்

திருப்பெருந்துறை தென்னவன் பிரமராயன் தொல்லை இரும் பிறவியில் இணைத்து கரை சேர்த்த துறை ஆனதால் திருப்பெருந்துறை ஆனது என்பர் சிலர்.

ஆவுடையார் கோயிலை அடுத்து கடற்கரையில் சேது மார்க்கத்தில் விளங்கும் நல்லூர்கள், யாத்திரீகர்கள் தங்குதற்காக காதத்திற்கு ஒரு சத்திரத்தைத் தாங்கியுள்ள ஊர்கள், வரிசையாக உள்ளன, காரார் கடலை அடுத்து இலங்கைக்கு இவ்வழியே தான் தம்பியுடன் அண்ணன் ராமபிரான் சென்றிருப்பார் என்றால் திருப்பெருந்துறை பிறவிக்கடல் நீந்தி இறுதியாய்ச் சேர்ந்த துறையேயன்றி குதிரை வந்து சேர்ந்த துறையல்ல என்று எண்ண வேண்டியுள்ளது.

இந்த எண்ணத்தை மணிவாசகப் பெருமான் வழியைத் தொடர்ந்து பார்த்தால், அவர் ஆவுடையார் கோயிலை அடைந்ததும் பயணத்தை நிறுத்தினார், அதை அடுத்து கடற்கரையை ஒட்டியுள்ள ஊர்கள் தொண்டி, கட்டு மாவடி மீமிசல்........முதலிய ஊர்களாகத்தோன்றுவதால் இந்த ஊர்களில் ஏதேனும் ஒன்று அல்லது எல்லாவற்றிலும் அரபுக் குதிரைகள் வந்து சேர்ந்திருக்காலாமோ, தெரியவில்லை.

இன்றுள்ள நிலையில் பார்த்தால் இப்பகுதிகளுக்குத்தான் குதிரைகள் வந்திருக்க வேண்டும் என எண்ணவேண்டியுள்ளது.

திருப்புத்தூர் சேரும்போது மணி 2.00 ஆகிவிட்டது. அன்புடன் அருட்திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்

வரவேற்றார்கள். விபூதி குங்குமப் பிரசாதங்களைக் கொடுத்தோம். உணவுக்குப்பின் எல்லோரிடமும் பயணம் சொல்லி திருவாசகம் தந்த செம்மலை உருவாக்கிய ஆவுடையார் கோயிலைத் தரிசிக்கப்புறப்பட்டோம்.

காரைக்குடி, அறந்தாங்கி வழியே கோயிலுக்கு இருட்டு வேளையில் வந்து சேர்ந்தோம்.

இதுவும் அவன் திருவருள்.

ஆவுடையார் கோயிலை இருட்டும் நேரத்தில், துலக்கமாய் பார்ப்பது எப்படி. ஆவுடையார் கோயிலைத் தவிர்த்து என்று சிற்பிகள் ஒப்பந்தம் செய்வதென்றால் அதன் ஒப்பற்ற வேலைத்திறனைக் காண்பதெப்படி ?

லாந்தர் விளக்கு கொண்டு வர மீனாட்சி புத்திரன் ஏற்பாடு செய்தார்.

அர்ச்சனைப் பொருள்களையும் மணிவாசகரின் திருவாசகத்தையும் தாங்கி ஆலயத்திற்குள் சென்றோம்.

உள்நுழையும்போதே கொடுங்கைகளைக் காட்டினர். நுண்ணிய தகடு போல இருந்தது. அஸ்பெஸ்டஸ் தகடோ என எண்ணினேன். கல்லைப்பிசைந்து கனியாக்க வல்ல பெருமானுக்கு அமைத்த ஆலயத்தில் என்ன விசித்திரமான வேலைகள்தாம் இரா ? குதிரை மேல் ஏறிவரும் கோலத்தைப் பார்த்தோம். இருட்டு முந்தியது, வேகமாகச் சுற்றிப்பார்த்தோம்.

பின் புறத்தில் குருந்த மரத்தை அடைந்தோம். இந்தக் குருந்த மரத்தில் அன்று வீற்றிருந்து ஐயன் தென்னவன் பிரமராயனை ஈர்த்து ஆட்கொண்டார்.

இன்று நாங்கள் குருந்த மரத்தைத் தரிசிக்கும்போது அங்கு மரத்தருகில் ஒருவர் தியானத்தில் வீற்றிருந்தார். அவர் யாரோ ? மௌனமாக மரத்தை வலம் வந்தோம். அவருக்கு ஒரு வணக்கத்தைச் செய்து பிராத்தனை செய்து சந்நிதானத்திற்கு வந்தோம்.

ஆத்தமநாத சுவாமிக்கும் யோகாம்பாளுக்கும் அர்ச்சனை செய்தோம். இதற்கிடையில் மீனாட்சி புத்திரன் முன் சென்று அர்ச்சகர் உறவினர் ஒருவரை நமச்சிவாயப்பதிகம் பாட ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

நான் மீண்டும் உள் சென்றேன். குருந்தமர சந்நிதானம் என அர்ச்சகர் காட்டினார், என் திருவாசகத்தை அங்கு வைத்து என்னை ஆசிர்வதித்தருள வேண்டினேன். அவர் அவ்வண்ணமே அங்கு வைத்து பிரார்த்தனை செய்து தந்தார். திருவாசகம் எனக்குப் புரிய வேண்டும் என வேண்டினேன்.

சந்நிதானத்திற்கு வந்தேன்.

இங்கு நமச்சிவாயப் பதிகத்தைப் பாடுகிறார் அன்பர்; சேர்ந்து பாடினோம். அவருக்கு திருவாசகத்தில் வேறு பாடல்கள் தெரியாது எனக் கூறினார். பல பாடல்களைத் தெரிந்து வைத்துக் கொண்டால் உருகிப் பாடலாம் எனக் கூறினோம்.

தோற்ற அளவில் திருவாசகம் இங்கு விலைக்கு வாங்க முடியுமா என்று தெரியவில்லை. ஆலய அலுவலகத்தில் பல கட்டங்களில் இறைமாகத் தருவதிலிருந்து மிக்க குறைந்த விலையிலிருந்து மிக உயர்ந்த விலை வரை உள்ள திருவாசக நூல்கள் ஆவுடையார் கோயிலில் இருக்கவேண்டும்.

மணிவாசகரின் திருவாசகம் இங்கு தாராளமாய் கிடைக்க வேண்டும். இத்தகைய உன்னத சமயகுரவரைத் தந்த ஆவுடையார் கோயிலில் திருவாசகம் கிடைக்கும் என்பது பிரதானமாயிருக்க வேண்டும். திருவாசகத்தின் நல்ல பிரதி இங்குதான் கிடைக்கும் என்பது செயலாக வேண்டும்.

இந்த எண்ணம் மணிவாசகரின் திருவாசக நினைப்போடு கலந்தது.

## மீமிசலுக்கு

இங்கிருந்து மீமிசலுக்குப் புறப்பட வேண்டும்.

ஏன் மீமிசலுக்கு?

திருவாசகத்தையும், திருமுறையையும், என்னையும் என் பெயரையும் தமிழையும் தமிழின் சுவையையும் எனக்குத் தந்த எந்தையைத் தந்தது மீமிசல்.

அங்கு கரையை முத்தமிட்டுத் தாலாட்டும் கடலையும் அதில் உதயமாகும் சூரியனையும், அதில் வண்ண நிறங்களில் தோன்றும் மாலையையும், அதை ஒட்டிய மக்கள் வாழ்க்கையையும்; ஊரின் குளத்தையும் அதைச் சுற்றியுள்ள அரளிச் செடிகளையும், கீழைத் தெருவையும் மேலைத் தெருவையும். சேதுபந்தன மார்க்கத்தில் செல்லும் வழியே யாத்திரீகர்கள் ஹரேரரம் என வந்து சத்திரத்தில் தங்குவதையும், அவரவர்கட்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பெறுவதையும், அங்குள்ள சிவன் கோயிலையும். சீதாலட்சுமி சமேத ஸ்ரீகலியாண ராமசுவாமி ஆலயத்தையும், வீரமாகாளியம்மன் ஆலயத்தையும் நடக்கும் திருவிழாக்களையும் எந்தையும் தாயும் கூறி என்னை ஊருக்கு அறிமுகம் செய்து வைத்திருந்தார்கள்.

அங்கு செல்ல ஆவுடையார் கோயிலை விட்டுத் தாண்டும் போது சிந்தனை ஈன்றவர்கட்கு நன்றியாய் நின்றது.

எனக்குத் திருவாசகத்தைத் தந்தது தந்தையன்றோ?

ஆகவே ஆவுடையார் கோயில் வழியே மீமிசல் செல்லப் பணிப்பு வந்தது போலும்.

ஆவுடையார் கோவில் கிராமச் சுங்கச் சாவடிப் பாலத்தைத் தாண்டும்போது கதிரவன் வண்ண எழிலுடன் மறைந்து கொண்டிருந்தான். உள்ளங்கவர்ந்த இந்தக் காட்சியைக் கண்டதும், காரை நிறுத்தச் சொன்னார் மீனாட்சிபுத்திரன். தனது சினி-காமிராவில் படம் பிடித்தார் அந்த அழகைப் பார்த்து இன்பம் பெற்றோம்.

தென்னஞ்சாலை வழியே கார் சென்றது. மீமிசல் சேர்ந்தோம்.

பெரிய ஆலய முகப்பு முன் கார் நின்றது. மணி 8-30 இருக்கும். ஆலயம் ஸ்ரீ சீதாலட்சுமி சமேத ஸ்ரீ கல்யாணராம சுவாமி ஆலயம் முன்பே அறிந்திருந்த ஆலயம். நேரில தரிசிக்கின்றோம் என உள்ளம் துடித்தது. இந்த உள்ளத் துடிப்புடன் தந்தை தாயின் துடிப்பும் கலந்தது.

இவ்வழியாகத்தானே ஸ்ரீ இராமபிரான் இளைய பெருமாளுடன் அன்னையைத் தேடி சேது சென்றிருப்பார்.

உள்ளே சென்றோம்; அங்கு நின்ற இளைஞரிடம் திரு. 'கோ. சுப்பையா பிள்ளை இருக்கின்றாரா' என விசாரித் தேன்; அழைத்து வருவதாகச் சென்றார்.

தீட்சிதர் வந்தார்; தரிசித்தோம். சம்புகேச தீட்சிதர் அவர் முழுப் பெயர். அன்புடன் வரவேற்றார்... எந்தையைப் பற்றி தனது பழைய நினைவுகளை உருக்கமாகச் சொன்னார். அவரது பேச்சு அவருக்குள்ள விஷயஞானத்தைக் காட்டியது. ஸ்ரீ ராம சேவையில திளைப்பதில் வாழ்வை அர்ப்பணித்து இன்புறுவதை உணர்ந்தோம். இதற்கிடையில் திரு. கோ. சுப் பையா பிள்ளையும் உறவினர்களும் வந்தனர். எல்லோரும் அப்பன் கலியாணராம சுவாமி மண்டபத்தில் அளவளாவிய பின்னர் யாவரும் சீதா பிராட்டியார், ஸ்ரீ கலியாணராமசுவாமி, ஸ்ரீ இளைய பெருமாள் சந்நிதானம் சென்றோம்.

அர்ச்சனையை தீட்சிதர் நன்றாகச் செய்தார். தீப ஒளி யில் உள்ளம் நிறைவு பெறத் தரிசித்தோம். ஆசீர்வதித்து அருளினார்.

மூர்த்திகளும், எழுந்தருளி மூர்த்திகளும் வியத்தகு அழகுடன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

ஆலயத்தை வலம் வந்தோம்; எப்படியோ சிவன் கோயில் பக்கத்தில் இருந்தும் தரிசிக்க வாய்ப்பு கிட்ட

வில்லை. வண்ணப் பணித்திடும் நாள் வைத்திருப்பார் போலும்.

மீண்டும் மண்டபத்தில் வந்து வீற்றோம்; நிம்மதி உள்ளத்தில் நிலவியது. உணவு அருந்துவதற்கு முன் ஸ்ரீ வீரமாகாளியம்மனைத் தரிசிக்கச் சென்றோம்.

முன்னால் குருந்த மரம். சுற்றி தெய்வச் சிலைகள்.

ஆலய முகப்பு மண்டபம் இடி விழுந்து உடைந்துள்ளது. இங்கு ஊது பத்தி ஏற்றிச் சூடம் கொளுத்தி வைத்து அன்னையை வணங்கி திருமபினோம்.

உப்புமா அருந்தினோம், நன்றாக ருசித்தது.

மீமிசலைச் சுற்றிப் பார்க்க உள்ளம் ஆவல் கொண்டது. கடற்கரை, குளம், சத்திரம் எல்லாம் உள்ளத்தில் ஊறியவை; பார்க்க முடியுமா ?

ஓரளவுதான் பார்க்க முடிந்தது, பார்க்க முடியாதவற்றையெல்லாம் பார்ப்பதற்கு காலம் உண்டு; இல்லை என்றாலும் மறு பிறப்பில் நம்பிக்கை உள்ள நாம் அது குறித்தே ஒய்ந்து போக வேண்டியதும் இல்லை.

சிந்தனை ஓடியது; பின்னோக்கினால், எண்பது ஆண்டுகளுக்கு முன் இங்கு பிறந்த என் தந்தையின் நினைவு என் மூச்சானது. அந்த மூச்சு இயங்கிய பாதையில் செல்ல வேண்டும். சீதாலட்சுமி சமேத கல்யாணராம சுவாமி வழி காட்ட வேண்டும்.

மணி 10.30க்கு மீமிசலிலிருந்து அன்புடன் அனைவரிடமும் பயணம் சொல்லிக் கொண்டு காரைக்குடி நோக்கிப்புறப் பட்டோம்.

உள்ளம் மீமிசலிலிருந்து புறப்படும்போது மக்கர் செய்தது போல் காரும் மக்கர் செய்தது. காரைக்குடி சேரும் போது இரவு மணி 1.30 குறிப்பிட்ட ஒருவரையும் தொந்தரவு செய்யலாகாது என முடிவு செய்து நியூ கௌரி லாட்

ஜில் இரவைக்கழித்து அதிகாலையில் நாதஸ்வர இசை தவழ விழித்தோம்.

## திருமண வைபவம்

வேகமாகத் தயாராகி மெ. செ. மெ. மெ. வீட்டுத் திருமணத்திற்கு மீனாட்சிபுத்திரனும், நானும் புறப்பட்டோம். கந்தசாமியும் முருகையாவும் டிரைவரும் காரை பழுது பார்ப்பதில் முனைந்தனர்.

இதுவே இந்தியாவில் நான் பார்க்கும் முதல் திருமணம்.

மலாயா நண்பர்கள் சிலர் அங்கு என்னை இந்தியாவில் கண்டதில் வியப்புத் தெரிவித்தனர்; மீனாட்சிபுத்திரன் என்னை ராஜா சர் முத்தையா செட்டியாருக்கும் மற்றும் பலருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

திருமணம் மங்களகரமாக நிறைவேறியது. பின்னர் அங்கு திருமண காலை உணவைப் பசியாறி புறப்பட எண்ணியபோது இந்தியன் ஓவர்சீஸ் பேங் திரு. தேனப்பன் எங்களைக் கண்டு அன்புடன் பேசி அன்புடன் தன் காரில் ஏற்றி பள்ளத்தூருக்கு தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.

பள்ளத்தூரின் வீதிகள் மிக நேராக உள்ளன தேனப்பன் வீட்டை நெருங்கும்போது அவர் வீட்டுச் சுவற்றில் மீனாட்சி சுந்தரத்துக்கு வாக்குப் போடுங்கள் என்ற எழுதியிருந்ததைக் கண்டு ''நான் இங்கு தேர்தலில் நிற்கவில்லையே'' என்றேன்

அது மாணவர்கள் பள்ளித் தேர்தலுக் குரியது என அறிந்தேன். இல்லத்தில் திரு. தேனப்பன் தாய் தந்தையரையும் திருமதி தேனப்பனையும் குழந்தைகளையும் கண்டோம். அன்புடன் பேசிக் கொண்டிருந்து தாக சாந்தி செய்து காரைக்குடி திரும்பி நியூ கௌரி லாட்ஜ் சேர்ந்தோம்.

கார் தயாராக இருந்தது. புதுக்கோட்டை சென்று திரு. சாமி அவர்கள் இல்லம் சென்றோம். அவர் அன்புப்

புதல்வர் திரு. ராஜகோபால் அன்புடன் வரவேற்றார். இங்கு மலாயா டெலிபோன் கிடைத்தது. செய்திகளைப் பரிமாறிக் கொண்டோம்.

திரு. ராஜகோபால் அன்புடன் உணவு கொண்டு வந்து தானே பரிமாறினார், எல்லோரும் ஆனந்தமாகச் சாப்பிட்டு சித்தன்ன வாசல் புறப்பட்டோம்.

சித்தன்னவாசல் சமணர்களின் குகைக்கோயில். அங்கு வர்ணத்தில் தீட்டி எஞ்சியுள்ள படங்கள் தாமரை மலர்களின் எழிலைக் காட்டின.

## மயில் வழிகாட்டியது

இங்கிருந்து விராலிமலை செல்கிறோம்.

விராலிமலை முருகன் ஆலயம்; அதை அணுகு முன் சந்தை நடந்து கொண்டிருந்தது. போய் சுற்றிப்பார்த்தோம். எண்ணை காணாத தலை உடையவர்களாக இப்பக்கத்து மக்கள் காட்சி தந்தனர்.

நாட்டுக்கு முதுகெலும்பாகிய இவர்கள் மத்தியில் சாவகாசமாய் இருந்து விற்பனைக்கு வந்துள்ள ஆடுகள், மாடுகள், பொருள்கள், பலகாரம் முதலிய பல பொருட்களையும் பார்த்துவிட்டு மலையினை நாடினோம்.

விராலிமலை படிக்கட்டுகளுக்கு வந்து சேர்ந்தோம்.

மேலே ஏறிச் செல்ல வேண்டும்.

படிக்கட்டின் இடது கைப்பிடிச் சுவற்றில் பெண் மயில் ஒன்று நின்றது.

இங்கு மயில்கள் நிறைய உண்டு என்றார் மீனாட்சி புத்திரன்.

படியில் ஏறினோம். எங்களை அழைத்துச் செல்வது போல பெண் மயில் முன்னால் சென்றது.

முருகபிரானின் வாகனம் மயில்; ஆண் மயில் வாகனமாய் அங்கு பணியாற்றுவதால் பெண் மயில் அழைத்துச் செல்கிறதா?

ஆலய முகப்பை அண்டும்போது பெண் மயில் வழி இது தான் எனக்காட்டும் வேலைமுடிந்தது போல இடது புறமாகப் பறந்து சென்றுவிட்டது.

உள்ளே நுழைந்தோம்; அண்று, விநாயகப் பெருமான் காட்சி தந்தார்.

வணங்கி திருமுருகன் சந்திதானம் செல்ல முந்தினேன்.

ஒரு மயில் சாவகாசமாய் இரை பொறுக்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

மௌனமாகக் கவனித்தேன்.

இதற்கிடையில் மீனாட்சிபுத்திரன் முதலியோர் வந்தனர்.

நாங்கள் வேலவருக்கு அர்ச்சனை செய்து துவஜஸ்தம்ப மரத்தருகில் பிராத்தனைப் பொருட்களை வைத்து வணங்கி வெளியில் எட்டிப் பார்த்தோம்.

மயில் நடனமாடுகிறது.

அதன் சிறகில் அந்த வண்ணத்தை எந்த தெய்வச் சித்திரக்காரன் எப்படிப் புனைந்தானோ?

ஆடுகிறது. சிலிர்க்கிறது. வேலும் மயிலும் துணை எனும் பண்பில் ஊறிய உள்ளம் கொண்டவர்கள் நாம் எல்லோரும். இந்தக் காட்சி பரவசமாக்கியது.

மயிலின் வண்ண நிறங்களும் நடனமும் உள்ளத்தில் நிறைந்திருக்க திருச்சி மலாயா ஹவுஸ் திரும்பினோம். மீனாட்சி புத்திரன் தாயாரும் உறவினர்களும் அன்புடன் வரவேற்று கும்பாபிஷேகம் பற்றியும் எங்கெல்லாம் நாங்கள்

சென்று வந்தோம் என்பது பற்றியும் விசாரித்தார்கள். நாங்கள் பிரசாதங்களை வழங்கி பெற்ற இன்பத்தை சொல்ல முயன்றோம்.

உணவுக்குப் பின் மீனாட்சிபுத்திரன் எங்களுக்கு ஆஸ்பி ஹாட்டலை அறிமுகம் செய்து வைத்தார். அங்கு 'காட்டேஜ்' எனும் குடிசையில் முருகையனும் நானும் தங்கினோம். மீனாட்சிபுத்திரனும் கந்தசாமியும் வேறு அறையில் தங்கினார்கள்.

அதிகாலையில் ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம் செல்ல முடிவு செய்திருந்தோம். சுவாமி சித்பவானந்த மலாயா விஜயத்தின்போது "நமது பொருளாதாரம், நமது வாழ்க்கை மணல் குவியல் மேல் கட்டப்பட்டது போலிருக்கிறது. நெருக்கடி எனும் புயல் வந்தால் சிதறடிக்கப்படும். பலப்படுத்திக்கொள்ள கூட்டுறவு முறையில் தோட்டங்கள், வீடுகள் எல்லாம் வாங்கவேண்டும்" என தனது சுற்றுப்பிரயாண முடிவில் கோலாலம்பூர் அன்னை மகா மாரியம்மன் ஆலயத்தில் பேசியதும் அதைத் தொடர்ந்து மாதம் பத்து வெள்ளி சேர்த்து தேசிய நில நிதிக் கூட்டுறவு சங்கம் மலாயாவில் இந்தியர்கள் வாழ்விலேயே முதன் முறையாக புக்கிட் சிடிம் எஸ்டேட்டை வாங்கியதும் அந்த திறப்பு வைபவத்திற்கு சுவாமி சித்பவானந்தா வந்திருந்ததும மறக்கமுடியாத நிகழ்ச்சிகள்.

ஓயாமல் உழைப்பதுடன், நேரத்தை பொன்போல் கருத்துடன் உபயோகித்து வாழ்க்கையை இங்ஙனம் வாழ்தல் இயலும் என வழிகாட்டி மாணவர்கட்கு உன்னத பயிற்சியும் அளிக்கும் சுவாமி சித்பவானந்தாவையும் தபோவனத்தையும் பார்க்க அவா முந்தியது.

மீனாட்சிபுத்திரன் காலையில் தபோவனத்திற்குப் போன் செய்தார். ஆனால், சுவாமி திருச்சி வழியே முக்கியமான நிகழ்ச்சிக்குச் செல்வதால், செல்லும் வழியில் ஹாட்டலுக்கு வருவதாகத் தகவல் கிடைத்தது.

சுவாமி என்னைக் கண்டதும் வியப்படைந்தார். சமூக சம்பந்தமான விஷயங்களைப் பேசினோம். சுவாமியுடன் பேசியதிலும், மீண்டும் கண்டதிலும் உள்ளம் உரம் பெற்றது.

சுவாமி புறப்பட்ட பினனர் ஹாட்டலுக்கு எதிரில் ஏர் இந்தியா அலுவலகத்தில் மலாயா பிரயாண தேதிகளை ஊர்ஜிதம் செய்து கொண்டோம்; இன்று 2-7-63 (மலாயா விலிருந்து இந்தியா வந்த தேதி 24-6-63 — நாட்கள் 9).

திருச்சி வானொலி உலகநாதன் இல்லத்தில் காலை உணவு. சிவபிருந்தாதேவியின் சகோதரர் இவர். மலாயாவுக்கு இவர் சமய சொற்பொழிவுகள் ஆற்ற வந்துள்ளார். சிவபிருந்தாதேவி, அவர் சகோதரர் உலகநாதன், அவர் பெண் குழந்தை திருமதி உலகநாதன் எல்லோரும் இருந்தனர். உலகநாதன் குழந்தை திருப்பாடல்களை அழகாக ஒப்புவித்தது.

அன்பு உணவுக்குப் பின் அன்னை மகா மாரியம்மன் ஆலயங்களில் பிரபலமான சமயபுர ஆலயத்திற்குப் புறப்பட்டோம். வழியில் அன்னை காவேரியைத் தரிசனம் செய்தோம்.

சமயபுரம் சேர்ந்தபோது மழை வருவது போல் வந்து நின்றது. உலகத்து நாயகி அன்னை முத்து மாரியம்மனை, கேடதனை நீக்கி கேட்டவரந்தரும் அன்னையை, சமயபுரத்தாளை சமயபுரத்திலேயே தரிசித்தோம்.

மணச்சநல்லூர் வழியே தத்துவ மங்கலம் என்று சொல்லா நின்ற தத்தமங்கலத்திற்கு கார் புறப்பட்டது.

ஏன் மீமிசலுக்கு என்ற கேள்விபோல ஏன் தத்தமங்கலத்துக்கு?

### தத்தமங்கலம்

தத்தமங்கலம் செல்லுமுன் பாம்பளம்மன் ஆலயம் சென்று கோயிலைப் பொறுப்பேற்று, அர்ச்சகராகப் பணி

யாற்றும் திரு. தவசியா பிள்ளையைக் கண்டு பிரார்த்தனை செய்தோம்.

மீனாட்சிபுத்திரன் பிறந்த ஊர் தத்தமங்கலம்.

அங்கு அவர் புராதான இல்லத்தில் அவரது சிற்றப்பாவும் சிற்றன்னையும் உறவினர்களும் அன்புடன் வரவேற்றனர். உணவு அருந்திய பின் மீனாட்சிபுத்தின் தத்தமங்கலத்தில் தனது பொருட் செலவினால் கட்டப்பெற்ற தமிழ்ப்பள்ளிக்கு அழைத்துச் சென்றார். அங்கு தலைமை ஆசிரியர் திரு. கலியாண சுந்தரத்தையும் ஏனைய ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஒரு சேர சந்தித்தோம். திரு. மீனாட்சிபுத்திரன் சில வார்த்தைகள் பேசி என்னையும் பேசச் சொன்னார்.

ஆண்டுக்கொரு முறை எப்படியேனும் இந்தியாவுக்கு வரவேண்டும்; அப்பொழுது ஒரு சில மணி நேரம் தத்தமங்கலத்திலும் ஒரு மணி நேரம் பள்ளிக்கூடத்திலும் இருக்க வேண்டும் என்ற கருத்தை மீனாட்சிபுத்திரன் தெரிவித்தார்.

நல்ல கருத்துத்தான். அம்மையப்பன் செயலால் நிறைவேற வேண்டும் எனக் கூறினேன்.

மீனாட்சிபுத்திரன் இல்லம் திரும்பி பயணம் சொல்லி மணச்ச நல்லூர் வழியே திருவானைக்கா சேர்ந்தோம்.

திருவானைக்காவின் உயர்ந்த பிரம்மாண்டமான மதில்களைத் தாண்டி ஆலயம் சென்றோம். கம்பீரமான தெய்வ மணம் கமழும் இந்த ஆலயம் பஞ்சபூத ஆலயங்களில் ஒன்று. மண்ணுக்கு அடையாளம், திருவாரூர்; தீக்கு அடையாளம் திருவண்ணாமலை. நீருக்கு அடையாளம் திருஆனைக்கா; காற்றுக்கு அடையாளம் திருக்காளத்தி; ஆகாயத்திற்கு அடையாளம் சிதம்பரம்.

நீருக்கு அடையாளமாகிய திருவானைக்கா பஞ்சபூத ஸ்தலங்களில் நாங்கள் தரிசிப்பதில் இரண்டாவது. தில்லை வெளியை அன்று தரிசித்து வந்தோம்.

மதில் பெரியது என்றேன்; இந்தக் காலத்தில் இப்படிப் பட்ட பெரிய மதில் எழுப்புவதற்கு எத்தனை மக்கள் வேலை பார்க்க வேண்டும். இவர்களின் சம்பளம், சம்பள உயர்வு, தங்குமிடம், வசதி, பேரம் பேசுதல் முதலியவற்றிற்கே பிர மாதமாக நேரம் போயிருக்குமே...

அந்தக் காலத்தில் இந்த மதிலைக் கட்டியது எவ்வண் ணமோ?

கட்டிய முறை வியப்பளிக்கும்.

சிவபெருமானே சித்தராக எழுந்தருளி ஆட்களைத் திரட்டி கூலிக்குப் பதிலாக திரு வெண்ணீறு கொடுத்தாராம்; அவரவர்கள் உழைப்பிற்கேற்ற அளவினதாக திரு வெண் ணீறு பொன்னாக மாறியதாம். இதனால்தான் இந்த மதிலுக்கு ''திருநீறிட்டான் மதில்'' என்பது பெயர்.

இதை மேற்கொண்டு ஒரு படி சென்று பார்த்தால் ஒருக்கால் ஆலயம் கட்ட வேண்டும் என்ற பேரவாவினால் அனைவரும் திரு வெண்ணீறை ''பெரிய சம்பளமாகவும்'' உணவு, உடை, தங்கும வசதியை ஓரளவு ஏற்றுக் கட்டியிருப்பார்களோ, தெரியவில்லை. மதில் முதல் கோபுரம் வரை ததும்பும் வண்ண அழகும் பிரம்மாண்டத் தன்மையும் அன்புச் சேவையைத்தான் பாடுகின்றன.

திரு ஆனைக்காவின் நாதன் ஜம்புகேஸ்வரர்; அன்னை அகிலாண்ட நாயகி.

ஜம்புகேஸ்வரரை சிலந்தியும் யானையும் ஒரு காலத் தில் பிரார்த்தனை செய்தன. ஐயன் மேல் இலை முதலியன விழாமல் காக்க சிலந்தி கூடு கட்டியது; யானை அபிஷேகம் செய்தது. சிலந்திக் கூண்டு அபிஷேகத்தைத் தாங்குமா? இதனால் சினங்கொண்ட சிலந்தி யானை துதிக்கையுள் நுழைந்து கடித்திட இரண்டும் மாண்டு போயின.

இறைவன் யானையின் பக்திக்காக யானைக்கா ஆக்கினார் நகர் பெயரையே; சிலந்தி மறு பிறப்பில் கோச் செங்கட் சோழனாகப் பிறந்தது. முன்பு செய்த பணி, ஞாபகத்தில் எங்கேயோ இருந்தது. இதனால் யானையே புகாத கோயிலை ஜம்புகேஸ்வரருக்குக் கட்ட முடிவு செய்தான் சோழ மன்னவன். பிரம்மாண்டமான மதிலைத் தாண்டி ஆலயத்தினுள் நுழைந்து ஜம்புகேஸ்வரரைத் தரிசிக்கச் சென்றால் தலை குனிந்து செல்லக்கூடிய சிறு வழிதான் உண்டு. யானை செல்லக்கூடாது என்பதனால் இந்த நிலை போலும்.

## நீரில் மூழ்கிய ஐயன்

அகிலாண்டேஸ்வரி அன்னையும் ஐயனைப் பூசித்த திருத்தலம் ஆனைக்காதான்.

ஜம்புகேஸ்வரரை, நீரில் மூழ்கி பஞ்சபூதங்களில் ஒன்றைக் காட்டி நின்ற கருணை மாவள்ளலைக்காண. அருள் நிறை மண்டபங்களைத் தாண்டித் தாண்டிச் சென்றோம். குனிந்து ஐயன் திருமுன் நின்றோம்.

அர்ச்சனை ஆனதும் ஓயாது ஊற்றெடுக்கும் நீர்வரும் வழியைக்காட்டினார் அர்ச்சகர். நீரில் மூழ்காமல் இருக்க பம்பு சாதனம் உபயோகித்துள்ளனர். கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டும் ஐயனை, நீராக நிற்கின்ற தோற்றத்தில் தரிசித்து அன்னையைத் தரிசிக்க வந்தோம்.

அன்னையின் அன்புருவம் உள்ளத்தில் தோய்ந்துள்ளது. அவர்களுக்கு நேரே விநாயகப் பெருமான் வீற்றிருக்கிறார். விண்ணும் மண்ணும் தனியாளும் அன்னையை வணங்கி உள்ளத்தில் நிறைவுடன் திருச்சிக்கு ஸ்ரீரங்கம் வழியே திரும்பப் புறப்பட்டோம்.

ஸ்ரீரங்கநாதரைத் தரிசிக்க நேரமாகிவிட்டது.

## காவேரியின் கருணை

அன்னை காவேரி உள்ளத்தில் நிறைவு. தண்ணீர் காலை யில் பார்த்தபோது குறைவு; இப்போது பெருக்கெடுத்துக் தவழ்ந்து வருகிறது.

அம்மாமண்டபத்தின் வழியே காவேரிக்கரையில் அமர்ந்தோம். காற்று சில்லென்று வீசி சல சல எனப்பாடி புனித நீர் செல்கிறது, உயர்கிறது. காவேரிப் பெருக்கைக் காண்பது நல்லது என்பார்கள் என்ருர் மீனாட்சி புத்திரன். நம் அதிர்ஷ்டந்தான் என மணிக்கணக்காய் வீற்றிருந்தோம் உயரும்காவேரி எங்களைத் தள்ளி உயர்ந்த இடத்துக்கு தள்ளி வந்தது. நேரம் மிகுந்தது; காவேரியின் இனிய இசை யும், குளிர் காற்றும் அலுப்பை நீக்கி ஆனந்த நித்திரையைத் தர முந்தியது. காவேரி அன்னையை வணங்கி திருச்சி திரும் பினேம்.

உச்சிப் பிள்ளையார் கோயில், தாயுமான சுவாமி கோயில் திருச்சிறுப்பள்ளியில் உண்டு எனும்போதும் படத்தில் குன்று போல் தோன்றும் கோபுரத்தைக் காணும்போதும் உள்ளம் குளிரும்.

சிந்தை அன்பு சேரவே நைந்து நின்னை நாடினேன். வந்து வந்து இன்பமே தந்திறங்கு தாணுவே என தாயுமான சுவாமிகள் பாடல் இந்த நாதனருளினுல் பிறந்ததன்ருே.

காலையில் தாயுமானவர் நினைவில் விழித்துப் புறப்பட் டோம். திரிசிர புரத்தில் உள்ளத்தைத் தொடும் வனப்புடன் குன்றின் காட்சி நிறைந்தது.

## தாயான செம்மல்

நேற்று அம்மா மண்டத்தில் காவேரி அன்னையைத் தரிசித்து இன்று தாயுமானவரைத் தரிசிப்பதும் ஒரு பெரு வாய்ப்புத்தான் போலும், ஏனெனில் காவேரி அன்னையினல்

தானே இங்கு எழுந்தருளியிருக்கும் திருமலைக் கொழுந்தர் செவ்வந்தி நாதர் தாயுமானவர் ஆனார்.

காவிரிப்பூம்பட்டின வணிகர் ஒருவரின் புதல்வி இரத்னவதி எனும் பெயர் உடையவர் திருச்சிராப் பள்ளியில் திருமணமாகி நலம் பல பெற்று வாழ்ந்து வந்தார். இரத்னவதியும் அவர் கணவர் தனகுப்தரும் உலகுக்கு நாயகமாய் விளங்கும் செவ்வந்தி நாதருக்கும் பட்டுவார் குழலம்மைக்கும் அன்பு பூண்டவர்கள்.

அம்மையப்பன் நல்லருளினால் இரத்னவதி கருப்ப முற்று குழந்தை பிறக்கும் நாள் நெருங்க காவிரிப்பூம் பட்டணத்திலுள்ள தன் அன்னைக்கு மருந்து முதலியவற்றுடன் வரும்படி சொல்லி அனுப்பினாள்; முதல் பிரசவம்; அன்னை அருகில் இருப்பதற்கு ஒப்ப துணை வேறு யாது உண்டு?

ஈன்ற பொழுது பெரிதுவக்கும் தன் மகளைத் தாயாகக் காணும் தாய் உள்ளம் பொங்காமலா இருக்கும். செய்தி கிடைத்ததும் அன்னை உரிய மருந்துகளுடன் உணர்ச்சி பொங்கும் இதயத்துடன் புறப்பட்டு வந்தார்.

அன்னை காவேரி வழி மறித்தார். பெரிய வெள்ளம் பாய்கிறது; படகோ செல்ல முடியாது. அக்கரையிலேயே தங்கித் துடித்துக் கொண்டிருக்கிறாள் அன்னை.

இங்கு அன்னை வரவில்லையே, வரவில்லையே என இரத்னவதி துடித்து சீக்கிரம் அன்னை வரவேண்டுமே என செவ்வந்தி நாதரைச் சிந்தித்து வணங்கினாள்.

பிரசவ நேரம் நெருங்கி விட்டது. இரத்னவதி சிந்தனை செவவந்தி நாதர் பால் சென்றது.

செவ்வந்தி நாதர் இரத்னவதியின் தாயாகத் தோன்றினார். மருந்தும் எண்ணெயும் கொண்டு வந்து மருத்துவத்திற்கு உதவினார். ஆண் குழந்தை பிறந்தது. சில நாட்கள் தாயாகத் தங்கி இரத்னவதியைத் தாங்கி வந்தார் உலகத்தைத் தாங்கும் தாயான வள்ளல்.

காவேரி அன்னையின் சீற்றம் குறைந்தது. இரத்னவதியின் தாயார் மகள் நிலைமை எப்படியோ எனக் கவலையுடன் வந்து சேர்ந்தார் தன்னைப் போல ஒருவர் மகளுக்குத் துணையாய் இருக்கக் கண்டார்.

இரத்னவதிக்குப் புரியாமல் புரிந்தது.

செவ்வந்தி நாதா என்ற எண்ணம், பிரார்த்தனை, அழுகையாக முந்தியது; தாயாக என்னைக் காத்த வள்ளலே என்று குமுறினள்.

தாயாக வந்த வள்ளல் மறைந்து அம்மையப்பனைக் காட்சி தந்து அருளினர்... தாயுமானவர் ஆனர்

காவேரி அன்னை வழி மறித்ததால் இரத்னவதிக்கு தாயாக வந்து அருளினர்; சுய தாய்க்கும் காட்சி தந்தார்.

காவேரி அன்னை ஏற்றத்தின் போது தரிசனம் செய்ததால் இன்று காலை அந்தத் தாயான வள்ளலைத் தரிசிக்கச் செல்கிறோம்.

உள்ளே செல்ல முற்பட்டபோது தாயுமான சுவாமிகள் ஞாபகம் மேலோங்கியது. அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்க வந்த இன்பப் பெருக்காகிய இறைவனை இங்கிருந்துதானே அவர் பாடினர். ஆற்றல் மிக்க தாயுமானவர் தன் பதவியைச். செல்வத்தை எல்லாம் துறந்து கண்டதெல்லாம் மோன உருவெளியதாகக் கருதி அஞ்சலி செய்ய வைத்தது அம்மையப்பன் தானே.

தெய்வ மணங்கமழ்கின்றது. விநாயகப் பெருமான் மாணிக்கவிநாயகப் பெருமான் காட்சி தந்தருளினர்; அவரை வலம் வந்தோம். திருவாக்கும், செய்கருமம் கூட்டுவிக்கும் வள்ளல் பொறுமையாக வந்து தரிசிக்க வாய்ப்பைத் தர வேண்டுமே. ஐயனே நின் திருமுன்னர் வீற்று தாயுமானவர் எப்படிப் பாடினர், சிந்தித்தார் எனத் தெரிய வேண்டுமே! இல்லை; அது இன்றைக்கில்லை.

மேலே செல்வோம். எங்களுடன் சுப்ரமணியம் என்ற பையனும் சேர்ந்து கொண்டார்; பெயரில் எனக்குப் பிரியம். துணை தரும் பெயர் அல்லவா?

அன்னையையும் அப்பனையும் வணங்கி உச்சி மலைப் பிள்ளையாரைத் தரிசிக்க சென்றோம். செல்லும் வழியில் திருப்பராய்த் துறை தபோவனப் புத்தகங்கள் மற்றும் சமய புத்தகங்கள் உள்ள கடை இருந்தது.

கடை வியாபாரப் பொறுப்பாளர் வைஷ்ணவர் என்பதை அவர் நெற்றியில் தீட்டியிருந்த நாமம் காட்டியது.

சமயத்தின் ஒருமைப்பாடும் சகிப்புத் தன்மையும் இந்தக் காட்சியில் தோன்றியது.

படிகளின் வழியே மலை ஏறிச் சென்றோம், அங்கு ஸ்ரீ விநாயகப் பெருமான் சந்நிதானத்திற்கு இன்னும் அர்ச்சகர் வரவில்லை. ஆகவே நாங்களே தேங்காய் உடைத்து சூடம் ஏற்றி வணங்கினோம்; எங்களைப் போலவே இன்னும் பலரும் வணங்கினர்.

திருச்சி மாநகரை மேலிருந்து உள்ளம் நிறையப் பார்த்து வந்த வழியே திரும்பி மாணிக்க விநாகப் பெருமானை வணங்கி, இருப்பிடம் திரும்பினோம்.

இன்றைய நிகழ்ச்சித் திட்டத்தில் திருமணங்களுக்குச் செல்வது முதலாவது.

புத்தனூம்பட்டியில் நல்லதொரு பள்ளிக்கூடம் கட்டி அறச் சேவை செய்து வரும் திரு. மூக்கபிள்ளை அவர்களின் புதல்வருக்குத் திருமணம்.

மணச்சநல்லூர் வழியே புத்தனூம்படி சேர்ந்து காந்தி உயர்நிலைப் பள்ளி மைதானம் சேர்ந்தோம். பள்ளிக் கட்டடங்கள் சேவையையும் உறுதியையும் எடுத்துக் காட்டின.

மங்களகரமான திருமணப்பந்தல் சேர்ந்து திரு. மூக்கப் பிள்ளை அவர் புதல்வர்கள் இன்னும் மற்றவர்களைப் பார்த்து அளவளாவிக் கொண்டிருக்கும்போது செஞ்சுரி மாவு மில் அதிபரின் சகோதரர் திரு. கோவிந்தசாமி அவர்கள் வந்து சேர்ந்தார்; எங்களை சென்னையிலிருந்து பயணம் அனுப்பின பின்னர் இங்கு தான் இவரை மீண்டும் சந்திப்பதால் சென்று வந்த இடங்களைப் பற்றி எல்லாம் பேசி மகிழ்ந்தோம்.

இங்கு வாலாஜா பாத் இந்து மதப் பாடசாலையை நிறுவி நடத்தி வரும் அண்ணல் மாசிலாமணி முதலியாரைத் தரிசித்தோம்; அவருடன் முன்பு பினங்கிலிருந்த திரு. நடராஜ மூப்பனரையும் கண்டு அளவளாவினோம்.

திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமண விருந் தருந்தி பெரியண்ணன் காமாட்சி ஆலயத்திற்குச் சென்றோம்.

## தத்துவத்தை விளக்குகின்றதா?

ஓமாந்தூர் பெரியண்ணன் காமாட்சி ஆலயத்தில் நாங் கள் சென்ற போது அர்ச்சகர் இல்லை. ஆலயத்தோப்பில் வில்வ மரங்கள் அதிகமாய் இருந்தன.

அன்னையும் அப்பனும் ஜோதி வடிவாக இருந்தனர். மூர்த்தி இல்லை. தீபம் இருந்தது.

ஓமாந்தூர் எனும் பெயரில் ஓம் ஒலிக்கிறது. கோவிலில் வில்வம் தழைக்கிறது. மூலஸ்தானத்தில் தீபம் ஒளி தருகிறது.

விபூதிக்குப் பதிலாக இங்கு கிடைக்கும் மண்ணை உப யோகிக்கிறார்கள்.

ஏதோ தத்துவத்தை இவை எல்லாம் உணர்த்துகின்றது.

இங்கிருந்து திருவெள்ளறை சென்றோம்; அங்கு திரு. கருப்பண்ண பிள்ளை வீட்டில் திருமணம்; திருமணம் நாங்கள் செல்லும்போது மங்களகரமாய் முடிந்திருந்தது. திருமணத்

தினரை வாழ்த்தி திருவெள்ளரையில் உள்ள ஸ்ரீ சுவேதகிரி ஆலயம் சென்றோம்.

வெண்மையான சிறு குன்றின் மேல் ஆலயம் எழுந்துள்ளது. நாங்கள் சென்ற நேரம் பொருத்தமில்லாத நேரம். ஆகவே ஆலயத்தை வலம் வந்து முறையாகப் பார்க்க வாய்ப்புக் கிட்டவில்லை. இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ புண்டரீகாக்ஷப் பெருமான், சண்பகவல்லித் தாயார் தரிசனம் கிட்டவில்லை. உள்ளத்தால் அவர்களைப் போற்றி மணச்சநல்லூர் திரும்பினோம்.

இங்கு முன்பு மலாயாவிலிருந்த திரு. தாயுமானபிள்ளை என்னைக் கண்டு கொண்டார்; "சுந்தரம்" என அன்புடன் அழைத்து பலகாரமும் காபியும் தந்து அன்புடன் அனுப்பி வைத்தார்.

## ஸ்ரீ ரங்கநாதன்

திருச்சி திரும்பியதும் மீனாட்சிபுத்திரன் இன்று மாலைக்குள் ஸ்ரீ ரங்கம் சென்று வந்தால் தான் நமக்கும் நேரம் உண்டு இல்லை என்றால் ஸ்ரீரங்கம் செல்லாமலே சென்னை புறப்பட வேண்டி வரலாம் என நினைவு படுத்தினார்.

அரவணைத்துயிலும் அம்மானைத் தரிசிக்க உடனே புறப்பட்டோம்.

ஸ்ரீ ரங்கத்தில் நாங்கள் சேரும் போது இருட்டிவிட்டது.

பெரிய பிரஹாரங்கள் வழியே உள்ளே செல்லும்போது ஆழ்வார்கள் நினைவும் சூடிக் கொடுத்த நாச்சியார் ஸ்ரீ ஆண்டாள் நினைவும் மேலோங்கி நின்றது. துலுக்க நாச்சியார் நினைப்பும் வந்தது.

போதெல்லாம் போது கொண்டுன் பொன்னடி புனைய மாட்டேன், தீதிலா மொழிகள் கொண்டுன் திருக்குணம் செப்ப மாட்டேன் காதலாய் நெஞ்சம் அன்பு கலந்திலேன்

என்று ஆழ்வார்கள் எண்ணிப் பணிந்து உள்ளம் குழைந்தது அரவணை துயிலும் ஐயனை எண்ணி அல்லவோ?

குழந்தையுள்ளத்துடன் ஆண்டாள் சூட்டிக்கொடுத்த மாலைகளை வேண்டும் என விருப்பம் தெரிவித்தது ஸ்ரீ ரங்கநாதன் அல்லவா?

ஸ்ரீ ரங்கநாதனைத் தரிசித்தோம் அன்புருவாகிய அன்னை ஆண்டாளைத் தரிசித்தோம். துலுக்க நாச்சியாரைத் தரிசித்தோம்.

உலகத்து நாயகனுக்கு அன்பினால் பல்லாண்டு பாடுகிறார் பெரியாழ்வார்.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதிவலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டு

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு...

ஸ்ரீ ரங்கநாதருடன் பிரிவின்றி ஆழ்வார்கள் வாழ்க்கை நடத்தி பிரபந்தங்களை அருளி அவரருளில் கலந்ததை எல்லாம் எண்ணித் துதிக்க வேண்டும்.

பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு; ஆனால் வேகமாக வந்து வேகமாய் புறப்படுகிறோம்.

வாய்ப்பு எப்பொழுதோ என்றோ வடிவாக வைத்திருப்பாய், தந்திடுவாய் ஸ்ரீ ரங்கா....

வணங்கி வெளியில் வந்து உணவு அருந்த போஜன சாலைக்குள் நுழைந்தோம்.

*பரிமாறுபவர் உடை*

இலை போட்டார்கள்; பரிமாற ஆரம்பமாயிற்று. மீனாட்சி புத்திரன் பரிமாறுபவர் கட்டியிருந்த உடையைப் பார்த்து சள்ளைப் பட்டார். அழுக்கு, உடையைக் கறுப்பாக்கியிருந்தது.

இந்த உடையைக் கட்டித்தான் பரிமாற வேண்டுமோ, வேறு யாரையாவது பரிமாறச் சொல்லலாம் என்றார்.

வேறு ஒருவர் பரிமாற வந்தார்; இந்த வேலையில் உடையை சுத்தமாக வைத்துக் கொள்ள முடியுமா என்று கூறிக்கொண்டே பரிமாறினார்.

மற்றவர், நான் பார்க்கிற வேலையில் வெள்ளையும் சொள்ளையுமாய் உடை போட்டுக்க முடியுமா, என்ன என்று புலம்பிக் கொண்டே இருந்தார்.

ஒருவழியாக உணவு அருந்தி வெளியில் போஜனசாலை நிர்வாகியிடம் மீனாட்சிபுத்திரன் தன் உள்ளக் கிடக்கையை எடுத்துக் கூறினார்.

உணவு பரிமாறுவர்கள் அழுக்கு உடையை அணிந்து கொள்ள வேண்டும் என்பது நம் நாட்டின் தலைவிதியா?

வெளி நாடுகளிலிருந்து இங்கு வந்து சுற்றிப் பார்த்து இந்திய உணவை ருசிக்கலாம் என்று யாரேனும் வந்தால் பரிமாறுபவர் உடையைப் பார்த்ததும் உயிர் போய்விடுமே?

பரிமாறும் போது போட்டுக் கொள்ள வேண்டும் என்றே ஒரு உடையை துவைக்காமலேயே வைத்திருப்பது போலல்லவா தெரிகிறது?

இதில் கவனத்தைச் செலுத்தி பரிமாற வழி செய்தல் சுகாதாரத்துக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது. மேலும் இந்த உண்மையைச் சொன்னதற்காக உங்கள் கடையில் பரிமாறுபவர் தத்துவம் பேசிக் கொண்டிருக்கிறார் என்று எடுத்துச் சொன்னார்.

எல்லாவற்றையும் கவனிப்பதாக நிர்வாகி உள்ளே சென்றார். திரும்ப வரவில்லை.

நாங்கள் சென்ற சில உணவுக்கடைகளில் பெரும் பாலானவற்றில் பரிமாறுபவர்கள் உடை சகிக்கக் கூடிய தாயில்லை.

இந்த நிலைமை சமைப்பவர்கட்கு இருக்கலாம்; பரிமாறு பவர்கட்கு ஏன்?

இத்தகைய உடையை அணிந்து பரிமாறினால் உணவு உட்கொள்பவர்கள் அருவருப்படைவார்கள் என்பது ஒரு புறம் இருக்க, காலத்தை ஒட்டி; பரிமாறும்போது ஒழுங்கான உடை அணிந்து கொள்ளலாகாதா?

## திரிசிரபுரம் திரும்பினோம்

மறுநாட் காலை மலாயா ஹவுசில் மீனாட்சி புத்திரன் அன்னையார் மற்றும் உறவினர்களிடம் சென்னை செல் வதற்காக பயணம் சொல்லிக்கொண்டு தாயுமான சுவாமி மலைக்கு வணக்கம் செலுத்தி புறப்பட்டோம்.

## திருக்கழுக் குன்றத்தில்

வழியில் கட்பாளையத்தில் மீனாட்சிபுத்திரன் மைத்துனர் இல்லத்தில் சிற்றுண்டி அருந்தி உளுந்தூர் பேட்டையில் உணவுக்கடையில் உணவருந்தி 7-15 மணிக்கு திருக்கழுக் குன்றம் வந்து சேர்ந்தோம்.

வழியில் ஒரு பழைய கோட்டையைக்கண்டு ஏறிப் பார்த்து வந்திருந்தோம். இந்தக் களைப்பு எல்லோருக்கும் இருந்தது.

திருக்கழுக்குன்றத்தில் மலை ஏறிச் செல்ல வேண்டும் குறிப்பிட்டநேரத்திற்குப் பிறகு பூசை இருக்காதே என்றனர் சிலர்.

பாதகமில்லை; அர்ச்சனைப் பொருள்களை எடுத்து வேகமாய் செல்லுங்கள் என்ற யோசனையைக் ஒருவர் சொல்ல அதைக்கடைப் பிடித்தோம்.

திருக்கழுக்குன்றத்திற்கு படி வழியே செல்லும் யோசனை நல்ல யோசனை; ஆனால் வேகமாகச் செல்ல களைப்பு இடந்தரவில்லை.

முருகையாவும், கந்தசாமியும் முன் சென்றனர்; மீனாட்சி புத்திரனும் நானும் பின் தொடர்ந்தோம்.

திருக்கழுக்குன்றம் என்பது இதுதானா?

மணிவாசகப்பெருமான் குருவைக் காணக் கலங்கி அலைந்து திருக்கழுக்குன்றத்தில் தானே அருளைப் பெற்றார்.

மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலங் கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக் கேடனேன்
இனிமேல் விளைவது அறிந்திலேன்
இலங்குகின்ற நின் சேவடிகள் இரண்டும்
வைப்பிடம் இன்றியே கலங்கினேன்
கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே

என்னை அப்பா அஞ்சல் என்று சொல்வதற்கு ஒருவரும் இல்லையே எனக் கலங்கிய மணிவாசகருக்கு கலங்காமலே வந்து காட்டிய புண்ணிய நல்லிடம் திருக்கழுக்குன்றம்.

வேதகிரி என்ற பெயரும் திருக்கழுக்குன்றத்துக்கு உண்டு; நான்கு வேதங்களும் இங்கு நான்கு மலையாக அம்மையப்பனைத் தாங்கி வருவதால் இந்தப் பெயர் வந்தது மற்றும். யுகத்திற்கு யுகம் கழுகுகள் வணங்கி முத்தி பெற்றதும் இங்கு தான். இன்றும் தினசரி மத்தியானம் இரண்டு கழுகுகள் கிரியை வலம் வந்து பிரசாதம் உண்டு செல்கின்றன என்பதை அறியும்போது திருவிளையாடல் உள்ளத்திற்கு உவப்பைத் தருகிறது.

இந்தியாவில் இந்த இரண்டு கழுகுகளைத் தவிரவேறு கழுகுகள் இல்லையா; இவை மட்டிலும் குறிப்பிட்ட நேரத்திற்கு வருவது ஏன்?

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்கு சங்கு பிறப்பதாகவும் அறிந்தோம்

அடி வாரத்தின் ஆலயத்தில் பக்தவத்ஸலரும், திரிபுர சுந்தரி அன்னையும் மலையில் ஏறிச் சென்று வந்ததும் அருள் பாலிக்க திருவுளங்கொண்டுள்ளார்கள்.

வேதம் பாடிய சோதியைக் காணச் செல்கிறோம்; ஆனால் படிகள்; ஏன் இந்தக் களைப்பு. என்ன சோதனை. பூசை நேரத்திற்குள் செல்ல முடியுமா; இதுவா இத்தனை காலத்திற்குப் பின் வந்து தரிசிக்கும் முறை?

கோலமேனி வராகமே
குணமாம் பெருந்துறைக் கொண்டலே
சீலம் ஏதும் அறிந்திலாத
என் சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமே கரியாக நான் உன்னை
நச்சி நச்சிட வந்திடும்
காலமே உனை ஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே

படிகள் ஏறுவது பெரும் பாடானது. அவனருளால் மேலே நெருங்கும் போது, நேரம் இருக்கிறது மெதுவாக வரலாம், என்ற குரல் தைரியத்தைத் தந்தது.

சந்நிதானம் சேர்ந்தோம்.

வேதபுரீஸ்வரருக்கும், (வேத கிரீஸ்வரர்) சென்னினல்லானம்மைக்கும் (மலைச் சொக்கநாயகி திருபுரசுந்தரி அம்மாள்) உயர் திரு வேதாத்ரி குருக்கள் அன்புடன் அர்ச்சனை செய்ய பிரார்த்தனை செய்தோம்.

குரு வடிவாக வந்து நல்லருளை தந்தருள வேண்டும் எனப் பிரார்த்தித்து அன்பர் ஒருவர் வழிகாட்ட பட்சி தீர்த்தத்தையும், கழுகுகள் வந்து இறங்கி பிரசாதம் உண்ணும் இடத்தையும் தரிசித்து பக்தவத்ஸலர், திருபுரசுந்தரி அன்னையைத் தரிசித்தோம்.

தேனகத்தார் வண்டதுவுண்ட திகழ்கொன்றை
தானகத்தார் தண்மதிசூடித் தலைமேலோர்
வானகத்தார் வையகத்தார் தொழுதேத்தும்
கானகத்தார் காதல் செய் கோயில்கழுக்குன்றே

என்றும் கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினுய் கழுக்குன்றிலே என்ற வார்த்தைகள் உள்ளத்தில் ஒலிக்க சென்னை நோக்கி பிரயாணத்தை தொடர்ந்தோம்.

## மகாபலிபுரம் பயணம்

மாமல்லன் கட்டிய மஹாபலிபுரம் செல்லும் வழியிலே வரும்; இரவில் மாமல்லன் செய்த விந்தைகளைப் பார்த்தால் போதுமா? அல்லது மகாபலிபுரத்தில் தங்கி காலையில் பார்ப்போமா? இந்தக் கேள்விகள் எங்களுள் எழுந்தன.

மலாயா திரும்ப வேண்டிய காலம் நெருங்கி விட்டது. எனவே மஹாபலிபுரம் சேர்வோம் பின்னர் யோசிப்போம் என்று முடிவு செய்தோம்.

மஹாபலிபுரம் சேரும்போது மணி 10-00 இருக்கும். மோட்டார் காரின் விளக்குகள் எதற்கெல்லாம் பயன் படுத்தலாம் என்பதை மஹாபலிபுரத்தில்தான் நாங்கள் கண்டோம்

விளக்கு வெளிச்சத்திலும் டார்ச் லைட் வெளிச்சத்திலும் பாண்டவர் தேர்களைப் பார்த்தோம். பின்னர் கடற்கரை சென்று எண்ணற்ற நந்திகள் வீற்றிருக்க எழுந்து நின்ற கற்கோயிலுக்குச் சென்று கடற்கரை மணலில் படுத்தோம்.

கடல் தந்த இசை; வானில் நிலா. பக்கத்தில் ஆலயம். மாமல்லன் கனவு கண்ட சிற்ப நகர் இப்படிதான் இருக்கும் என்பதை விளக்கு வெளிச்சத்தில் பார்த்த நிலை; எல்லாவற்றையும் கற்பித்து, மாமல்லன் கனவு கனவாகவே போனதை எண்ணி, அன்று என்ன இதயத்துடன் இந்தத் திருப்பணியை ஆரம்பித்தாஞே என யோசித்தோம்....நித்திரை எங்களை ஆட் கொண்டது.

பாதகமில்லை; சென்னைக்கே திரும்புவோம். மாமல்லன் கனவை மீண்டும் ஒரு முறை சாவகாசமாய் பார்ப்போமே எனப் புறப்பட்டு சென்சரி ஹவுசுக்கு இரவு 1-00 மணிக்கு வந்து சேர்ந்தோம்.

நாங்கள் வருவது பற்றி முன்னதாகவே அறிவிக்கவில்லை வாயிலைத் ஏறிக்குதிக்கலாமா என்று மீனாட்சி புத்திரன் யோசித்து முடிவு செய்வதற்குள் வீட்டிலிருந்து கணக்குப் பிள்ளை வந்து எங்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

25-6-1963ல் புறப்பட்டது இங்கிருந்துதான். 4-7-63 இரவு வந்து சேர்ந்து விட்டோம் (நாட்கள் மொத்தம் ஒன்பது); மலாயாவிலிருந்து வந்து 10 நாட்கள்.

## மலாயாவுடன் விஞ்ஞானத் தொடர்பு

காலையில் திரு. கோவிந்தசாமி அவர்கள் நாங்கள் வந்து சேர்ந்த நேரம் முதலியவற்றை விசாரித்து மத்தியானத்துக்கு மேல் திருவேங்கடம் செல்லலாம் என்று நல்வாக்குக் கொடுத்தார். எல்லோரும் திரு. சி.பி. மைக்கல் இல்லத்திற்கு சென்று மாம்பழ சகிதம் பசியாறி ஸ்ரீலஸ்ரீ பன்றிமலை சுவாமிகளை தரிசனம் செய்து ஆசீர்வாதம் பெற்று இல்லம் திரும்பி மலாயாவுக்கு டெலிபோன் பேச ஏற்பாடு செய்தோம். வெகு சீக்கிரத்திலேயே போன் கிடைத்தது. விஞ்ஞானம் இனிய குரல்களை எவ்வளவு சீக்கிரத்தில் எவ்வளவு தூரத்திலிருந்து இணைந்து அன்பைத் தருகிறது.

இதற்கிடையில் அன்பர் திரு. எஸ். வி. சம்பத்குமார் அவர்களும் வந்து சேர்ந்தார்கள்; அன்பினால் நானும் அவரும் சகோதரர்கள்; அவருடன் தனியே நிறையப் பேசிக் கொண்டிருக்க முடியவில்லையே என மனம் வாடியது. அதற்கு ஒரு காலம் வரும் என உள்ளத்தில் தேற்றிக் கொண்டு திருப்பதி செல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்தோம்.

திருப்பதி செல்வதற்கு முன் ஒரு வேடிக்கை நடந்தது.

மீனாட்சிபுத்திரன் ரூபாய் நோட்டுகளை மாற்றி என்னை வைத்துக் கொள்ளச் சொன்னார். அதை ஒரு பையில் போட்ட ஞாபகம் திண்ணமாய் இருந்தது. ஆனால் புறப்படுவதற்கு முன் பார்த்தால் பணத்தைக்காண முடியவில்லை. பெட்டிகளிலும் எங்கும் தேடிப்பார்த்தோம்; புரியாத புதிராக இந்த சம்பவம் வேதனை தந்தது.

திருப்பதியப்பன் படம் போட்ட பெட்டி ஒன்றினுள் விபூதி முதலியவற்றை நான் பிரயாணத்தின் போது வைத்திருப்பது வழக்கம். இதைத் திறந்துபார்த்ததும் இதற்குள் பணம் இருந்தது.

ரூபாயை பையினுள் போட்ட ஞாபகம் எனக்கிருந்தது. ஆனல் பெட்டிக்குள் வைத்த ஞாபகம் எனக்கு அறவே இல்லை. இதுவும் திருப்பதியின் திருவருள்தான் என்று சூடம் ஏற்றி வணங்கிப் புறப்பட்டோம். எங்களுக்கு துணையாக திரு. கோவிந்தசாமி வந்தார்.

வழியில் மழை, வயல்கள் பசுமை கொஞ்சின. ஏழுமலையானைத் தரிசிக்கச் செல்லும் பாதை எல்லாம் குளிர்ச்சியாய் இருந்தது.

திருப்பதிக்குத் தெற்கில் திருச்சானூரில் பத்மாவதித் தாயார் திருக்கோயில் கொண்டுள்ளார்கள்.

பத்மாவதித்தாயார் ஆலயத்திற்கு அருகில் உள்ள பத்மசரோவரம் எனும் திருக்குளத்தில் அன்னை தாமரை மலரில் அருள் பாலித்ததாக வரலாறு கூறுகிறது.

அன்னையின் ஆலயத்தைச் சேரும்போது மாலை மணி 6-00க்கு மேல் இருக்கும். பக்த கோடிகள் மிகுந்திருந்தனர். இங்கு அர்ச்சனை செய்து அன்னையை வணங்கி திருமலையை நோக்கிப் புறப்பட்டோம்.

## திருப்பதியில்

திருப்பதியப்பா. திருப்பதி வெங்கட்டரமணு, திருப்பதி வெங்கடாசலபதி, திருப்பதி, திருப்பதி...

யார்தான் இன்று திருப்பதியை நினையாதவர், வரையாது வழங்கிக் காத்து அருள் புரியும் அண்ணலாக திருவேங்கடமுடையான் காட்சி தருகிறார்.

அவருக்குச் செலுத்தப் பெறும் அன்புக் காணிக்கைகள். அவரை வணங்க ஏழுமலையையும் நடந்தே கடந்து வரும் பக்தர்கள் அவரது கருணைக்கு அஞ்சலியாகும்.

கார் வளைந்து வளைந்து அழகான காட்சிகளை தந்து கொண்டே சென்றது. இடை இடையே பக்தர்கள் நடந்தே மலைக்கு ஏறிவரும் காட்சிகள் அன்பைப் பெருக்கின.

திருமலை அடிவாரத்துக்கு அழகு தவழும் வண்ணப் பொழிலுக்கு வந்து சேர்ந்தோம்.

மணி 9-00 ஆகி விட்டது. தங்குவதற்கு விடுதியை திரு கோவிந்தசாமி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்; அதற்கு முன் வயிற்றுக்கு சிறிது அளிப்பதற்காக திருச்சி போஜனசாலையுள் நுழைந்தோம்.

எதிரில் உள்ள கடையில் கிராமபோன் ரிகார்டுகள் முழங்குகின்றன; ஒரு ரிகார்ட் உள்ளத்தைக் கவர்ந்தது. அது பகவத் கீதையில் சில கட்டங்களை இசையாய் தந்தது; சாதுக் களைக் காக்கவும் நீதியை நிலை நாட்டவும், யுகத்துக்கு யுகம் அவதரிக்கிறேன் என்ற கட்டம் முழங்கியது.

கண்ணன் இசைத்த கீதம்; அது முழங்க வேண்டிய இடம் உள்ளம்; கண்ணன் மலையல்லவா? அதுதான் போலும் நினைவு தருகிறது.

மேலே செல்லும்போது பொன் வேய்ந்த கோபுரத்தைத் தரிசித்தோம். காலையில் சுப்ரபாதத்திற்கு நின்னைக் காலை எழுப்பும் பக்த கோடிகளுடன் நிற்க அருள் பாலிக்க வேண்டும் என வேண்டி இல்லத்திற்குச் சென்றோம்.

தனித்தனியே அமைந்துள்ள இந்த இல்லங்கள் ஒவ் வொருவரது காணிக்கை. அறைகள், குளிக்கும் அறை. இதில் சுடு தண்ணீர் வசதி, சமையலறை, கச்சிதமாய் பயனுடன் பிரார்த்தனைக்கேற்ப அமைந்திருந்தது.

சுப்ரபாத தரிசனம் செய்வதென்றால் மணி 3-00க்கே தயாராக இருக்க வேண்டும் என திரு. கோவிந்தசாமி பணித் தார்.

அவ்வண்ணமே அதிகாலையில் துயில் களைந்து புறப்பட் டோம்.

முன்னால் திரு. கோவிந்தசாமி அவர்கள் வேகமாகச் செல்கிறார்; அவருக்குப் பின்னால் நான்; எனக்குப் பின்னால் மீனாட்சிபுத்திரன் மற்றவர்களும் வருகின்றனர்.

திருப்பதி வேங்கடமுடையான் திருப்பூமியில் இந்த நேரத்தில் நடக்கும் பேறு பேறல்லவா?

ஆலயத்தைச் சேர்ந்தோம்; எங்களுக்கு முன்னதாகவே பக்தர்கள் கூடியிருந்தனர்.

மண்டபத்தைத் தாண்டி உள் மண்டபம் செல்வதற்குள் பணியாளர்கள் கூட்ட அமைப்புக்காக கயிறு கட்ட ஆரம்பித்தனர். கோவிந்தசாமி கயிறுள் நுழைந்து செல்ல நானும் தொடர்ந்தேன்... மீனாட்சி புத்திரனும் மற்றவர்களையும் கயிறு தடுத்தது.

கோவிந்தசாமியும் நானும் அவர்கள் உள்ளே வரவில்லையே எனத்தவித்தோம்; அவர்கள் பாதகமில்லை அடுத்த வரிசையில் வருவோம் என்று கூறி விட்டார்கள். திருக்கதவை இதற்கிடையில் பணியாளர்கள் சாத்திவிட்டார்கள்.

இங்கு உள் மண்டபத்தின் உள்ளும் பக்த கோடிகள் நிறைந்திருந்தனர். கதவு மூடியிருக்கிறது. உள்ளே செல்ல முடியாது. உள்ளே செல்ல வழி கேட்போம் என நடமாடியதும் அர்ச்சகர் ஒருவர் நடக்கலாகாதே உட்காரலாம் எனப் பணித்தார். படியில் உட்கார்ந்தோம்.

வரிசையாக அர்ச்சகர்கள் நிற்கிறார்கள். திருவேங்கடமுடையான் சந்நிதான வாயில் மூடியிருக்கிறது. பக்த கோடிகள் மண்டபத்தில் காத்திருக்கின்றனர்; இதோ படியில் காத்திருக்கின்றனர்; வெளியில் காத்திருக்கின்றனர்.

சந்நிதானவாயில் மூடியிருக்கிறது. பக்த கோடிகள் காத்திருப்பதை அண்ணலுக்குத் தெரிவிக்கவேண்டாமா? யார் தெரிவிப்பது? அவரது சேவையே வாழ்வாகக் கொண்டிருக்கும் அர்ச்சகர்கள் தானே தெரிவிக்க வேண்டும்.

இதோ வேண்டுகோள் விடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

கௌசல்யா ஸுப்ரஜாராம
பூர்வாஸந்தியா ப்ரவர்த்ததே
உத்திஷ்ட நரசார்தூல கர்த்தவ்யம்
தைவமாஹ்நிகம்

கோசலை மனங் குளிர அவள் மணி வயிற்றில் தோன்றிய ஸ்ரீராமா. காலைவேளையாகி விட்டது; அருணோதயத்தில் செய்ய வேண்டிய சந்தியா வந்தனம் முதலிய நித்திய கருமங்களைச் செய்ய வேண்டும். ஆதலின் நீ என் சகோதரருடன் நித்திரை எழுந்தருள்வாயாக, என்று 29 பாடல்களை உள்ளம் குளிரப் பாடுகிறார்கள்.

லக்ஷ்மீநிவாஸ நிரவத்யகுணைகசிந்தோ
ஸம்ஸார ஸாகர முத்தரணைகஸேதோ
வேதாந்தவேத்ய நிஜவைபவ பக்தயோக்ய
ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம்

அடியார்களின் உன்னை அன்பர்களின் எளியனாய் எண்ணுகிறார்கள். நீயும் அவர்களை அப்படி நினைக்கின்ற படியால் நித்திரை எழுந்து வாயிலில் காத்திருக்கும் பக்தர்களுக்கு அருளுக.

ஸுப்ரபாதத்தை அடுத்து ஸ்ரீ வெங்கடேச ஸ்தோத்ரமும் ஸ்ரீ வெங்கடேச மங்கள சாஸனமும் பொங்கி வந்தது.

என்ன கிருபை; என்ன வாய்ப்பு அன்று குலசேகரப் பெருமான்

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவாநின்கோயில்நின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய் கிடந்து உன் பவளவாய் காண்பேனே

என்று நின் திருவாயைக் காண உருகிப் பாடினார். அந்தப் பாட்டை சிந்தையில் கொண்டதால் இன்று காலை உன் படியிலசை வீற்று அவர் உள்ளத்தையும் நினைவூட்டி நின்னையும் காட்டுகின்றாய்போலும்.

பங்காருவாயில் திறந்து உண்டியலை வெளியே கொண்டு வந்தார்கள். பக்தகோடிகள் தரிசனம் செய்ய வரிசையாக உள்ளே சென்றனர்.

திருவேங்கடத்தம்மானை முதலில் பார்த்ததும் எனக்கு பிரமை உண்டாகியது. வரிசையில் சென்று வணங்கி வந்து கொண்டிருக்கும்போது மீனாட்சிபுத்திரனும், கந்தசாமியும், முருகையாவும் உள்ளே சென்று கொண்டிருந்தனர்.

எல்லோரும் பின்னர் தோமாலை சேவைக்கு அர்ச்சனை டிக்கட் வாங்கி உள் சென்று அமர்ந்து பிரார்த்தனை செய்தோம். திருப்பதியான் திரு முன் நின்று அருளை வேண்டினோம். பின்னர் வெளியில் வந்து துவஜஸ்தம்பமரத்தருகில் சாஷ்டாங்கம் செய்து செம்பில் தீர்த்தம், வடை, லட்டு வாங்கிக் கொண்டு யாத்ரீகர் இல்லம் திரும்பினோம்.

இங்கு புத்தகம் விற்பதற்கு அன்பர் ஒருவர் வந்தார். பி. ஸ்ரீயின் அர்த்தத்துடனும் படங்களுடனும் கூடிய ஆண்டாள் அருளிய திருப்பாவை கவர்ந்தது. இதில் ஒன்று வாங்கி கூட்டுறவு போஜனசாலைக்குச் சென்றோம்.

உப்பு மா விசேஷமாக ருசித்தது.

திரும்பும் வழியில் திருப்பதியார், பத்மாவதித்தாயார் படங்களை வாங்கிக்கொண்டு காளத்தி நாதனைத் தரிசிக்கப் புறப்பட்டோம்.

'கைலாயத்தான் காளத்தியான் அவன் என் கண்ணுளானே' என அப்பர் பாடுகிறார். காளத்தி என்றதும் கண்ணப்பர் ஞாபகம் வருகிறது.

ஓடும் நாட்களில் ஆறு நாட்கள். எத்தனையோ ஆறு நாட்கள் எல்லோரது வாழ்விலும் ஓடியிருக்கின்றன. ஓடப் போகின்றன.

ஆனால் கண்ணப்பர் வாழ்வில் ஓடிய ஆறு நாட்கள் மறக்க முடியாத ஆறு நாட்கள்.

பொத்தப்பி நாட்டின் ராஜ்யத்தை இளவரசன் திண்ணன் ஏற்ற நாள் அவன் தந்தைக்கும் தாய்க்கும் இனிய நன்

நாள். கண்ணினுமினிய தங்கள் செல்வன் வளர்ந்து கற்பன கற்று இன்று நாடாளும் பொறுப்பை ஏற்பது மகிழ்ச்சி தருவதேயன்றோ.

## கண்ணப்பரின் ஆறு நாட்கள்

திண்ணனுக்கு முடி சுமப்பதில் இது முதல் நாள். அன்னையையும் அரசனையும் இளமை முதல் தானறிந்த தெய்வ மாதையும் வணங்கிக் கடமை ஏற்க உறுதிகொண்டனன். இன்று தனக்கு முதல் கடமை மக்களுக்குச் சேவை செய்வதே. கானகத்து மிருகங்கள் பயிர்களை அழிக்கின்றன என மக்கள் அலறுகின்னர்.

விலங்குகளை விரட்டப் புறப்படத் தயாராக வேண்டும். முன்பெல்லாம் தந்தையுடன் வேட்டைக்குச் சென்றிருக்கிறான். இன்று தானே வேட்டைக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லவேண்டும். நாணனும் காடனும் உள்ளனர். எல்லாம் தயாரானதும் எம்மிடம் தெரிவிப்பர்; புறப்படுவோம். என்ன ஆர்வத்துடன் வீரர்கள் நிற்கின்றனர்; என்ன ஆசையுடன் தந்தை உத்தரவு தந்தார்; அன்பு அன்னைக்கு என்னை அனுப்பப் பிரியமில்லை; ஆனாலும் அனுப்பி வைத்தார்கள்.

இதோ புறப்பட்டு விட்டோம். கானகத்தை வளைத்து மிருகங்களை ஒருசேர மிரட்டிக் கொண்டு வருகின்றன எக்காளமும் பறையும். கொல்பவற்றை மட்டிலும் கொன்றால் போதும்; தேவையில்லாது பறவைகளை எல்லாம் எய்து கொல்ல வேண்டாம்.

என்ன வேகம்; என்ன ஓட்டம்; என்ன உற்சாகம். எனக்குப் பின்னால் ஒருவரையும் காணேம்; அதோ நாணனும் காடனும்....

நேரம் மிகுந்துவிட்டது; எங்களால் இனி உணவின்றி யாதும் செய்ய முடியாது என வீற்று விட்டனர் இருவரும். காடா, நீ பன்றியைச் சுத்தம்செய்; சமைத்துண்போம்; நாணா எங்குளது நீர், அருந்துவோம்.

அந்த மலையருகில் நீருண்டு என நாணன் முன் செல்ல பின் செல்கிறான் மன்னன் திண்ணன், அன்றே முடி தாங்கிய செம்மல்.

மலை நெருங்குகிறது. என்ன மலை இது என வினவுகிறான்.

இது குடுமித்தேவர் மலை. மேலே அவர் உள்ளார் என்கிறான் நாணன்.

குடுமித் தேவர் என்றதும் ஏனோ திண்ணன் உள்ளம் சிலிர்த்தது. அவரைப் பார்க்க வேண்டும போலிருக்கிறது. மேலே செல்வோம் வா.

மேலே செல்வோம். குன்று. வேட்டையாடிய அலுப்பு, உணவருந்திச் செல்வதென்றாலும் திண்ணன் ஒத்துக்கொள்ளப் போவதில்லை; நாணன் வழிகாட்டி மேலே செல்கிறான்.

குடுமித் தேவர் இருப்பிடம் சேர்ந்தனர் இருவரும். குன்றின் மேல் சிறு கோயிலுள் விளங்கும் நாதன் குடுமித்தேவர்.

திண்ணன் பார்த்தான். குடுமித் தேவர் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார்.

இங்கு தனியே தாங்கள் இருக்கலாமா? துணையின்றித் தாங்கள் எப்படி இருக்கிறீர்கள்? காட்டு மிருகங்கள் இங்கு வந்து வேதனை தராவா, ஐயனே நீங்கள் இப்படித் தனியே இருக்க நான் பொறுக்கேன் என்று உள்ளே ஓடிக் கட்டிப் பிடித்துக்கொண்டான.

குடுமித் தேவருக்குச் சாற்றிய மலர்கள், அபிஷேக நீர் ஆகியவற்றை நாணனிடம் காட்டி இது எல்லாம் என்ன எனக் கேடடான்.

கீழிருந்து மேலே ஒரு அந்தணர் வந்து தினசரி காலையில் குடுமித் தேவருக்கு அபிஷேகம் செய்து மலர் சாற்றி வணங்குவார், முன்பு தந்தையுடன் வந்தபோது கண்டேன் என்றான் நாணன். நானும் அவ்வண்ணமே செய்வேன். ஐயனே பத்திரமாய் இருங்கள் என நாணனுடன் கீழே இறங்கினான்.

என்ன பைத்தியமா, உனக்கு; கீழே காடன் பன்றி சமைத்திருப்பான்; தின்று திரும்புவோம் என்பது காதில் விழவில்லை; ஏற வில்லை.

நாணன் கெஞ்சினன்; கீழிறங்கியதும் காடனும் சேர்ந்து கெஞ்சினன்; திண்ணன் காதுகள் செவிடே ஆனவோ.

தேக்கிலே தேடி இறைச்சியை எடுத்து வைத்தான். பூக்களைக் கொய்து முடியிலே சூட்டிக் கொண்டான், அபிஷேக நீரை வாயில் எடுத்துக் கொண்டான்; ஒரே சிந்தையுடன் புறப்பட்டான் குடுமித் தேவருக்குச் சேவை செய்ய.

வந்துவிட்டேன் ஐயனே என உள்ளே சென்று முன்பு அணிந்திருந்த மாலையை ஒரு காலால் தட்டிவிட்டான்; வாயில் உள்ள நீரால் அபிஷேகம் செய்தான்; தலையில் செருகியிருந்த மலரால் அர்ச்சனை செய்தான. தேக்கிலேயில் வைத்திருந்த இறைச்சியை எடுத்துச் சுவைத்து, இது இனியது இது இனியது என ஊட்ட முற்பட்டான்.

பைய வானத்தில் கதிரவன் மறைந்தான். நாள் ஒன்று திண்ணன் வாழ்வில் முடிந்தது. இரவு முழுவதும் விலங்குகள் வந்து குடுமித் தேவருக்குத் தொந்தரவு செய்யாமல் காத்தான்.

காலைக் கதிரவன் விழிக்கும்போதே உணவு கொண்டு வரச் செல்லுகிறேன், எனக் கீழே சென்றான்.

இங்கு அந்தணர் ஆலயத்தை வந்து பார்த்து நிலையைக் கண்டு துடித்துச் சுத்தம் செய்து ஐயனே உனக்கு இந்நிலைமை வரலாமா என அழுது நித்திய அர்ச்சனை செய்து போயினர்.

திண்ணன் முதல் நாள் வந்த திருக்கோலத்திலே திரும்புகிறான். அபிஷேகம்; மலர் சாற்றுதல்; உணவளித்தல் முறையே நடக்கின்றன.

திண்ணன் சாப்பிட்ட பாடில்லை; நினைவு எல்லாம் குடுமித் தேவரிடம் அடங்கியுள்ளது. இரவும் கழிந்து காலையும் வந்து இவ்வண்ணமே ஐந்து நாட்கள் ஓடுகின்றன. ஐந்து நாட்களும் திண்ணன் மனநிலை என்ன நிலையிலிருந்திருக்க வேண்டும் என்பது யோசித்துப் பார்க்க வேண்டிய விஷயம்; எவ்வளவு கூர்ந்து ஆர்வத்துடன் குடுமித் தேவருடன் கலந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அந்தணருக்கும் ஐந்து நாட்கள் வேதனை தரும்நாட்கள்; ஐயன் முன் திடசங்கற்பம் செய்தார்; நாளை ஒளிந்திருந்து எவன் இப்படிச் செய்கிருனே அவனை ஒழிப்பேன் என்று முடிவு செய்தார்.

முடிவை அவர் செய்தார்; அவர் கனவில் குடுமித் தேவர் தோன்றி நாளை நீ ஒளிந்திருந்து பார்; நடப்பதை அறிவாய் என்றார்.

ஆரும் நாள்; அன்று இல்லத்தை விட்டுப் புறப்பட்ட திண்ணன், மகாராஜா திண்ணன், அன்னையையும் அப்பனையும் நாட்டையும் மறந்து மலையின் மேலிருக்கும் குடுமித் தேவருக்குக் காவலாளியாகி விட்ட திண்ணன், வாயினுல் கொண்டு வந்த நீரை அபிஷேகம் செய்யும் திண்ணன், தலையில் சூட்டியமலரை அணிவிக்கும் திண்ணன், எச்சில் செய்து ருசிபார்த்த இறைச்சியை ஊட்டி வைக்கும் திண்ணன் இதோ வருகிருன். காலையிலேயே கீழே சென்று சேவைபுரிய வருகிருன்.

ஆறு நாட்கள் தன்னைக் கவனிக்கவில்லை; சாப்பிட்டான் இல்லை. குடுமித் தேவர், குடுமித் தேவர் சிந்தை மூச்சு எல்லாம் குடுமித் தேவர்... குடுமித் தேவருக்குக் குழைந்து வெந்து சமைந்த உணவு போலாயினுன்.

உள்ளே குடுமித் தேவருக்குப் பின் அந்தணர் மறைந்திருக்கிருர்.

உருகும் நெஞ்சத்துடன் திண்ணன் உள்ளே சென்று மலரை நீக்கி அபிஷேகம் செய்து, மலரைச்சாற்றி, இறைச்சியை ருசித்து ருசிக்க ஊட்டுகிருன். என்ன கோலம்.

திருப்தியுடன் குடுமித் தேவரைப் பார்த்தான்; ஆகா இது என்ன வலக் கண்ணில் ஏதோ இரத்தம் போல் கசிவு ஏன்? என நாதனுக்கு என்ன?

துடைத்தான். கசிவு நிற்கவில்லை; கதறினுன். பச்சிலைகளைத் தேடிக்கொண்டு வந்து கசக்கி ஊற்றினுன். நிற்கவில்லை கசிவு. விழுந்து புரண்டு அழுதான். ஐயகோ, என கண்களுக்கு முன்னுல் உங்கள் கண்ணுக்கு ஒரு ஊறு? ஆம், என் கண்ணை எடுத்து அணைப்பேன், என உறுதி செய்து ஊறு கொண்ட கண்ணை நீக்கினுன்; அம்பினுல் தன் கண்ணைக் குத்தி எடுத்துச் சாற்றினுன்....

என்ன அமைதி; என்ன நிம்மதி. இந்தக் கசிவு நின்றது.

ஆனந்தக் கூத்தாடினுன்....

குடுமித் தேவர் விடுவதாயில்லை...

மறு கண்ணிலும் இரத்தம் கசிந்தது. திண்ணன் பார்த்தான்; ஐயனுக்கு ஏன் இந்த வேதனை இன்று; ஆனுல் கவலை வேண்டாம்; மருந்து என்னிடம் உண்டு என்று தன் இடக் காலைத் தூக்கிக் குடுமித் தேவரின் இடக் கண்ணின் மேல் வைத்தான அடையாளத்துக்காக.

அம்பை எடுத்து இடக் கண்ணைத் தோண்ட முற்பட்டான்

குடுமித் தேவர் 'நில்! கண்ணப்பா, நில்! கண்ணப்பா! எனப் பாய்ந்து திண்ணன் கரங்களைப் பிடித்துக்கொண்டருளினுர்.

திண்ணன் கண்ணப்பன் ஆயினுர்; கண்ணப்ப நாயனுர் ஆயினுர்.

நாட்கள் மொத்தம் ஆறு. வேட்டையாடப் புறப்பட்டவர் வீடு திரும்ப வில்லை; வீடு பேறெய்தினுர்.

அந்தணர் இந்தக் காட்சியில் அன்பின் எல்லையைக் கண்டார். மாணிக்கவாசகரும் அதைத்தான் சொல்கிருர்.

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு" என்கிருர். குடுமித் தேவர் மலை காளத்திமலை கண்ணப்பர் எனும் அன்புருவைத் தந்த மலை.

காளத்தி சேர்ந்தோம். குன்று, கல் குன்று, உச்சியில் ஆலயம் தெரிகிறது; அதுதான் திண்ணனைப்பிடித்துக் கவர்ந்து கண்ணப்பராக்கிய ஆலயம்.

அடி மலையில் ஆலயம் பெரியது. வழிகாட்டி ஒருவர் இடையில் வந்து சேர்ந்தார்; கண்ணப்பர் வணங்கிய தெல்லாம் இங்குக் கீழேதான். மேலே இல்லை என்று பிடிவாதம் செய்தார்; அவருக்கு மேலே ஏறிச் செல்ல விருப்பம் இல்லை, அதற்காகச் சொல்கிருர் போலும்.

அன்னையை வணங்கினேம். காளத்தி நாதனை வணங்கினேம். கண்ணப்பரை வணங்கினேம். பாதாள விநாயகரை வணங்கினேம்.

பின்னர் ஆலயப் புளியோதரையை வாங்கி விருட்சத்தின் கீழ் வைத்துச் சாப்பிட்டோம்; குடுமித் தேவர் மலை தெரிந்துகொண்டே யிருந்தது. மரக்கிளைகளில் கல் ஒன்றும் காசும் வைத்துத் துணியில் முடிந்து கட்டினுல் வேண்டிய வரம் கிடைக்கும் என்ருன் ஒரு பையன்; விடுவதாயில்லை. அவன் திருப்தி அடையவும், நம் நினைப்பு வெற்றி பெறவும் அவ்வண்ணமே செய்தோம்.

மலை ஏறுவதை ஒத்திப் போட்டோம்; உள்ளத்தால் வணங்குவதைத்தவிர வழி இல்லை; காளத்திநாதனையும் கண்ணப்பரின் ஆறு நாள் தவத்தையும் உள்ளத்தில் அடக்கிச் சென்னை நகரை நோக்கிச் செலுத்தச் சொன்னேம் காரை.

மீனட்சிபுத்திரன் மேற்பார்வையில் கார் திரு. அழகு சுந்தரம் செட்டியார் இல்லம் வந்து சேர்ந்தது; அங்கு அவருடன் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்து தாகசாந்தி செய்து சென்ஷரி ஹவுசுக்கு "கோவிந்தா" என வந்து சேர்ந்தோம்.

## கலை வயலில்

"கோவிந்தா" என வந்து சேர்ந்ததும் ஓய்வு உடன் வந்தது. இரவு உணவு ஒரு வாய்ப்புள்ள அமைப்பில் அன்பர் திரு வயிரவன் செட்டியார் இல்லத்தில் நடைபெற்றது. இனிய நண்பர்கள், திருமணமான தம்பதிகள், "புபே" சாப்பாடு. பல பொருள்கள் பற்றிய பேச்சு நேரம் இனிதே ஓடியது.

இங்கிருந்து மரீனு பீச்சைப் பார்க்கச் சென்றேம், மீனட்சி புத்திரனும் அன்பர் கோவிந்தசாமி அவர்களும் மரீனு பீச்சின் அழகைக் காட்டி ஹாட்டல் ஒன்றில் ஐஸ் கிரீமை ரசிக்கச் செய்தனர்.

மறுநாள் திருவான்மியூர் புறப்பட்டோம்.

கலாக்ஷேத்திரம் கலைக்கு வயல்; அடையாறு கலை வயிலை அறியாதார் யார்; அங்கு மீனட்சிபுத்திரனின் அன்புப் புதல்வி சுப்புலட்சுமி படித்துக் கொண்டிருப்பதால் சுப்பியைப் பார்க்கச் சென்றேம். அடையாறிலிருந்து திருவான்மியூரில் உள்ள கலா க்ஷேத்திரத்தின் புது இடத்தில் சுப்புலட்சுமி பயிலும் பள்ளி அமைந்திருந்தது.

கலாக்ஷேத்திரக் கட்டிடங்களின் அமைப்பை ரசித்தோம்; எளிமையில் தவழ்ந்த எழில் உள்ளத்தை கவர்ந்தது. சுப்புலட்சுமி படிப்பைப் பற்றி விசாரித்து திருவான்மியூர் ஆலயத்திற்குப் புறப்பட்டோம்.

## பால்வண்ண நாதர்

பாடல் பெற்ற ஸ்தலம் திருவான்மியூர். காமதேனு பால் சொரிந்து இங்குள்ள நாதனை அபிஷேகம் செய்த இடம்; லிங்கத்தில் பால் கறந்ததனுல் ஏற்பட்ட தழும்பும் லிங்கத்தில் உள்ளது.

ஆலயத்தில் அன்னை சொக்கநாயகி அருள் பாலித்தார்.

ஐயன் பால்வண்ணநாதர்; தேவர்கள் இவரை அமுதத்தால் பூசை செய்து மருந்தீசர் என்ற பெயரையும் தந்துள்ளனர். வான்மீக ரிஷி இங்கு தவம் செய்து நடன தரிசனம் பெற்றுள்ளார்; சுவாமி சுயம்பு மூர்த்தி.

அனைத்துமாய் நின்று ஆட்டுவிக்கும் ஐயனின் திருக்கோலங்கள் எத்தனை, அவர் நல்லருளைப்பெற வணங்கினேம்

குளத்தைத் தரிசித்தோம் பசுமாடு ஒன்று பழைய படிகளின் வழியே நீரருந்தக் கீழே சென்றது· இந்த இடத்தில் காமதேனு செய்த தவத்தின் பெருமையினுல் எனக்கும் சொந்தம் உண்டு என்பதை அதன்செயல் உணர்த்தியது.

## அங்கும் இங்கும்

திருவான்மியூரிலிருந்து திரும்பி வரும் போது மரத்தின் கீழ் விற்பதற்குக் கிடந்த இளநீர் எங்களை ஈர்த்தது. ருசித்தோம். சென்ஷரி ஹவுஸ் திரும்பி இரவு உணவுக்குப் பின் டி. கே. எஸ். நாடகத்தைப் பார்க்கச்சென்ருேம்.

அன்று "பலி" நாடகம். தாகூரின் கதை. பிரம்மசமாஜ உள்ளத்துடன் கவிஞர் எழுதியது. நடிப்பு நன்ருயிருந்தது என்று சொல்லவேண்டியதில்லை. டி. கே. எஸ். மகனும் நடித்துத் தந்தைக்கு வணக்கம் செய்தார்.

ஔவை ஷண்முகமும் பகவதியும் அன்புடன் பேசி உணவருந்த திட்டம் எல்லாம் வகுத்தனர், இந்திய மண்மிசை இருக்க வேண்டியது இன்னும் ஒன்றரை நாள். அன்பிற்கு நன்றி கூறி, ஓடும் நேரத்தோடு உறவு கொண்டு, வேகத்தைக் குறைக்க முயன்ருேம். நாள் ஓடி மறுநாள் வந்தது.

வேகமாக கிராமயுத்யோகபவனைப் பார்க்கச் சென்றோம்; இந்தியக் கைத் தொழில்தரும் பொருட்களில் எத்தனையோ ரகங்களை அழகுடன் அடுக்கிவைத்து விற்பனைக்கு வைத்துள்ளார்கள்.

கலை தவழும் அழகுடைய பொருள்கள் நிறைந்திருந்தன. சில பொருட்களை வாங்கினோம். ஓய்வாயிருந்தால் சாவகாசமாய்ப் பார்த்து பித்தளையில் கை வண்ணம், வெள்ளியில் ததும்பிய ஓவியம், பஞ்சில் பொங்கிய பேரழகு என்றெல்லாம கட்டம் கட்டமாய் அறிமுகம் செய்து வைத்திருக்கலாம்.

ஏர் இந்தியா அலுவலகத்தில் கப்பல் புறப்படும் நேரம் முதலியவற்றை உறுதி செய்து மாலையில் இராமகிருஷ்ண ஆசிரமத்துக்கும் இராமகிருஷ்ண ஆசிரம புத்தகக் கடைக்கும் சென்றோம்.

ஆசிரமத்தில் தோய்ந்த அமைதியில் வீற்று இராமகிருஷ்ணரையும், அன்னையையும், வீரகேசரியையும் சிந்தித்து வணங்கினோம்.

இரவு அன்பர் திரு கோவிந்தசாமி அவர்கள் இனியதொரு விருந்து வைத்தார். இதற்கு அன்பர்கள் பலர் வந்திருந்தனர்.

வ. உ. சி. மகன் அவர்களும் வந்திருந்தார்; அவர் அருகில் உட்கார்ந்து உணவருந்திக் கொண்டிருக்கும்போது செக்கிழுத்த அந்தச் செம்மலின் நினைவு உள்ளத்தில் நிறைந்திருந்தது.

உணவை அடுத்து மீனாட்சிபுத்திரன் தனது சினிமாப் படங்களைக் காட்டி மகிழ்வித்தார்.

இந்தியாவில் கழிக்கும் இந்த இரவுடன் நாளைக்காலை மலேயா புறப்படுகிறோம்.

### வட பழனி முருகா

வட பழனி செல்வோம் காலையில் என்றார் திரு. கோவிந்தசாமி.

ஆலயத்தை அணுகியதும் அங்கு அன்னை மீனாட்சியம்மன் அருள் பாலித்தார். ஸ்ரீ விநாயகப் பெருமானும் முருகப்பனும் மீனாட்சியம்மனும் சொக்கேசரும் அன்புடன் அருள் தந்து உயிருக்கு உரம் தந்தனர். வட பழனி முருகனை எண்ணிச் சென்று அம்மையப்பன் தரிசனம் கிடைத்தது பெரும் பிரசாதம் அல்லவா?

## *சென்ஷரி மில்*

'சென்ஷரி மாவு ஆலையை நீங்கள் இதுவரை பார்க்கவில்லை; பார்க்காமல் போகலாமா' என திரு. கோவிந்தசாமி எங்களை நவீன அமைப்புள்ள சென்ஷரி மாவு மில்லுக்கு அழைத்துச் சென்றார்.

இந்தப் பகுதியிலேயே பெரியது எனக் கருதப்பெறும் இந்த மாவு ஆலையில் கோதுமையைப்பிரித்து ஒரு இடத்தில் கொட்டினால் போதும்; காற்றில் மூட்டை மூட்டையாகக் கோதுமையை இழுத்துச் சென்று பல மாடிகளுக்கு மேல் கொண்டு சென்று சுத்தம செய்து கழுவி, அறைத்து ரகவரிசையாகப் பிரித்து கோதுமையைப் பிரித்துக் கொட்டிய இடத்துப்பக்கத்திலேயே மாவாக, தவிடாக, சூஜியாகக்கொண்டு வந்து சேர்க்கிறது.

இதைப் பார்த்து விஞ்ஞானத்திற்கு வாழ்த்துக் கூறி ஏதேனும் ஒரு புத்தகக் கடையைப் பார்க்கலாம் என்று சென்றோம்.

ஹிக்கின்பாதம்ஸ் கண்ணில் தென் பட்டது. உள்ளே சென்றோம். இன்று மலாயா புறப்படும் நாள், விமானம் 1.45க்குப் புறப்படுகிறது என்று நினைவு படுத்தினார் திரு. கோவிந்தசாமி. புத்தக ஞாபகத்தில் பயணத்தை மறந்து விடலாகாதல்லவா?

எந்தப் பகுதியில் சென்று என்ன புத்தகத்தைத் தேடுவது? 'சமயம்' என்ற பகுதியைப் பார்த்தேன்.

குருவாயூரப்பன் புகழைப்பாடும் ஸ்ரீ நாராயணீயம் இருந்தது. சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் உரையும் விளக்கமும் கொண்டது. சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் இடை இடையே படித்து வந்திருந்தேன்.

குருவாயூரப்பன் அன்பில் அருளில் உருகி பாடப் பெற்றது ஸ்ரீ நாராயணீயம்; இதுவும் திருவருள் என ஸ்ரீ நாராயணீயத்தையும் 'ஜய ஜய சங்கரா' என கல்கியில் ரா. கணபதி தொடர்ந்து எழுதி வந்த சங்கராச்சாரியார் வாழ்க்கையும் வாங்கினேன்.

நேரத்தை நினைவு படுத்தினார் திரு. கோவிந்தசாமி, புறப்பட்டோம். இடையில் சென்ஷரி அலுவலகத்தில் 'சில விநாடிகள்' என அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தார்.

சென்ஷரி இல்லம் திரும்பினோம்.

மீனாட்சிபுத்திரன் புறப்படுவதற்குத் தயாராக இருந்தார்; நேரம் ஆகி விட்டது; 'இந்நேரம் விமான அலுவலகத்தில் இருந்திருக்க வேண்டுமே' என்றார்.

வாயு வேகமாக எங்கள் பெட்டிகளைக் காருக்கு மாற்றி மின்னல் வேகத்தில் பயணம் சொல்லி வழியில் இந்த வேகத்திற்கு மத்தியில் முருங்கைக்காய் கட்டும் வாங்கி விமானத்திடல் வந்து சேர்ந்தோம்.

வேகமாக அன்பர்களிடம பயணம், அன்பு தந்த உறவு; நேரத்தின் சுருக்கம் பயணம் சொல்வதை எளிதாக்கியது. கஸ்டம்ஸைத் தாண்டினோம்; கும்பாபிஷேகத்திற்கு நாங்கள் வந்ததை நினைவில் வைத்திருந்து 'கும்பாபிஷேகம் எப்படி இருந்தது' என விசாரித்தனர் கஸ்டம்ஸ் அன்பர்கள்.

இனி புறப்பட வேண்டியதுதான்

கப்பலில் எங்களுடன் பரத நாட்டியத்திற்கு புத்துயிரளித்த திரு. இ. கிருஷ்ணையரும் வருவதாக அறிந்து மகிழ்ந்தோம். அவர் சிங்கையில் பரத நாட்டியப் பள்ளி மாணவர்களைப் பார்வையிட வந்தார்.

மலேயாவுக்கு, நான் பிறந்த நாட்டுக்குப் புறப்பட இன்னும் சில விநாடிகளே இருக்கின்றன. 24.6.1963ல இங்குதான் வந்து முதன் முறையாக தந்தையையும் அன்னையையும் ஈன்ற, நாட்டைத் தரிசித்தேன். இன்று 9.7.1963ல புறப்படும் போது உள்ளம் தத்தளித்தது.

உள்ளூரில் நடக்கும் நிகழ்ச்சி, வைபவம், விழா,

இவற்றில் கலந்துகொள்வது எவ்வளவு பாடாய் இருக்கிறது.

கடமை என்பது கட்டி அசைக்க விடமாட்டேன் என்கிறது. உள்ளத்தால் எது முக்கியம் என எடைபோட்டு கடமையில் பூட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த நிலைமையில் உள்ளூர் விழாக்களுக்குப் போவதையே ஒரு பெரிய சோதனையாக மட்டிலுமன்றி ஒரு மகத்தான சாதனையாகக் கருதும் நிலைமையில் உள்ள என்னை, பக்கத்துக்கு சிங்கப்பூருக்குச் செல்வதை ஒரு பெரிய நிகழ்ச்சியாகக் கருதக் கூடிய நிலையில் உள்ள என்னை, மதுரையம்பதிக்குக் கொண்டு வந்த கருணை உள்ளத்தைத் தத்தளிக்க வைத்தது.

ஏன் தத்தளிப்பு? வாழ்வு தரும் அன்னை, கருணையின்/ வடிவான அனை, கடமையைப் பொறுப்புடன் ஏற்று மீனாட்சி புத்திரன் எனும் அருந்துணையுடன் இங்கு அழைத்து வந்த செல்லம் நெஞ்சை உருக்கி அன்பைப் பெருக்குவது அன்றோ. அன்னையின் பெருங்கருணை என்றும் உள்ளது; ஆனால் இந்த சில தினங்களில் அவர்கள் அன்பு வெள்ளத்தினால் என்னை ஆட்டி நாட்டில் அருள் தோய்ந்த அரிய இடங்களை எல்லாம் எனக்குக் காட்டுவித்தார்களே.

இந்தக் கருணையை எல்லாம் விட்டுச் செல்லும் போது உள்ளம் வேறு என்னதான் செய்யும்!

## உள்ளத்தை எங்கு வைத்து நிலைப்படுத்துவது

உள்ளத்தை எங்கு வைத்து நிலைப்படுத்துவது? தலைநகரில் இருந்து புறப்பட்டு இன்று இந்த விமானத்தில் வீற்றிருக்கும் வரை ஓடிய நாள் ஒவ்வொன்றும் வாழ்வில் ஒரு புனித நாள். வாழ்வை உரைத்துப் பார்ப்பதற்கு வழி காட்டிய நாள்.... சென்ற நாட்கள் தந்ததென்ன? இந்த நாட்கள் தந்ததென்ன?

'அணங்கொடு அணி தில்லை அம்பலத்தே ஆடுகின்றார் ஐயன்' என்பதைச் சொல்லக் கேட்டுள்ளேன்; எழுத்தில் கண்டுள்ளேன்; செல்வ நெடு மாடஞ் சென்று சேண் ஓங்கி செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலத்தில் நிற்கும்போது காலம் கூறும் கதைகள் எத்தனை, வெள்ளத்தில் மூழ்கி விம்முவது போல உணர்வு பொங்கி வாழ்வையே குலுக்குகின்றதல்லவா?

அன்னையுடன் அம்மையப்பன் பாலூட்டவிரைந்த வேகம் சீர்காழியில் தீர்த்தத்தினருகில் விற்றிருக்கும் போது எங்கோ புலனுவது போலிருந்ததா?

இப்படி ஒவ்வொரு தலமும் தலமெலாம் அம்மையப்பன் என்று உணர்த்தி, அனபினுல் ஆட்டியகருணை உள்ளத்தில் உள்ளது. இன்னும் சென்று தரிசிக்க வேண்டிய இடங்கள்?

நினைக்க முடியாத அளவு உள்ளன; இப்பொழுது சென்ற இடங்களையும் அமைதியாகப்பார்க்க முடிந்ததா? தரிசித்த இடங்களை மீண்டும் மீண்டும் தரிசித்துக் கொண்டேயிருக் கலாமே?

ஏன், வாழ்வில் எஞ்சியுள்ள இந்தப் பாகத்தைத் தில்லைக்கும் சீர்காழிக்கும், சீர்காழிக்கும் மதுரைக்கும் மதுரைக்கும் திருப்பெருந்துறைக்கும் உள்ளேயே சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே இன்பப் புனலில் ஆட்டி அம்மையப்பன் திரு முன் ஒட்டி விட முடியாதா?

ஏன் மதுரையிலேயே பொற்ருமரைக் குளத்தைப் பார்த்தே ஓட்டலாகாதா? அன்றி அங்கு வானேங்கி வாழ் வையே ஓங்கச் செய்யும் கோபுரங்களைத் தரிசித்தே போக் கலாகாதா?

அவற்றை அடுத்து அடுத்து அங்கயற்கண்ணி என் அம்மை முன்னிலையில் காலமெலாம் போக்கலாகாதா? எத்தனை பிறவிகள் எடுப்பினும் இந்த ஒரு வாய்ப்பே வாழ் வைப் புனிதமாக்கும் பெரும் வெற்றியைத் தாராதா?

## ஓடும் பிறவிகள்

ஓடும் பிறவிகள்; பன்றியைப் போல் இங்கு மண்ணி டைச் சேற்றில் படுத்துப்புரளாதே எனப் பாரதி பாடுகிருர். பனறி பல பிறவிகளில் ஒன்று, அதன் வாழ்வு அதன் வேலிக்குள் அதன் குட்டிகளுடன் உணவுடன், மலத்துடன் சேர்ந்து பின்னி பிறர் தின்பதற்கே உணவாகி அதன் காலத் தை ஓட்டுகின்றது.

இத்தகைய வாழ்வை எல்லாம் மனிதப் பிறவியிலும் அனுபவிக்கலாம்; அல்லது கட்டம் கட்டமாய் இத்தகைய பிறவிகளைத் தட்டி விட்டு வணங்கத் தலை தந்த பிரானை வாழ்த்த வாய் தந்த வள்ளலை அண்டி, இணங்க அவர் தந்த சீரடியாருடன் இணைந்து அணங்கொடு அணிதில்லை அம் பலத்தே ஆடுகின்ற எம்பிரான் பொன்னடிப்புகழில் வாழலாம்.

விமானம் உயரப் பறந்து செல்லப் போகிறது; மீண்டும் மண்மிசை இறங்கப் போகிறது; ஆனல் கீழிருந்து மேல் வந்த இந்த வாழ்வு உயர வேண்டும்; கீழ் இறங்கலாகாது. கீழ் இறங்கலாகாது, இறங்கவே கூடாது.

ஓடும் வாழ்க்கை; விமானம் சில மணி நேரங்களில் கடலைத் தாண்டி கோலாலம்பூர் கொண்டு சேர்ப்பது போல ஓடிப்பறந்து கொண்டிருக்கிறது.

அது பறக்கும் வேகம் மெதுவாகத் தோன்றி மயக்கி நினைப்பதற்கு முன் முடிந்து போகிறது. மயக்கம் கனவு போலக்காட்டி 'எல்லாம் இல்லை' என்று தள்ளப் போகிறது.

நிச்சயமானதுதான் என்ன? நிரந்தரமானதுதான் என்ன? வேண்டியதுதான் என்ன?

வாழ்வைப் பிழிந்து மாய்கையில் கொட்டி, தெளியும் அறிவைக் கலக்கி திககு முக்காட வைத்து மண்ணில் புரண்டு வாழ்வை முடித்து விடலாமா?

## எங்கு செல்லும்

கற்றதும் கேட்டதும் எங்கு வாழ்வை இழுத்துச் செல்லும்; அல்லது அதன் அடிப்படையில் எப்படி நடத்திச் செல்வது? அல்லது வாழ்வை ஏலத்தில் விட்டு விட்டு அது எப்படியாவது செல்வது என்று விட்டு விடுவதா?

புரியாத புதிர் என்று வாழ்வின் போதையில் மூழ்கி செல்லும் காலம் கொஞ்சம், ஊற்று மதுவை, என ஓட்டுவதா?

வாழ்ந்தவர் வாழ்க்கை வழி காட்ட தடுமாற்றத்திற்கு இடம் இல்லை. உண்மை, அன்பு, இறைவன் என நின்ற காந்தியடிகள் இந்தக் காலம் ஏற்றித் தந்ததீபம். முச்சுடர் இது மூளையைக் குழப்பாத வழிகாட்டும் சுடர்கள் அல்லவா?

இல்லை; ஒவ்வொருவருக்கும் ஒரு பாதை உண்டு; மானுக்கு ஒரு பாதை; புலிக்கு ஒரு பாதை; யானைக் கொரு பாதை; சிங்கத்திற்கு ஒரு பாதை, பாதைகள் எண்ணிறந்தன என் பாதை எதுவோ, அதை ஆட்டுவிக்கும் அவனல்லவா அறிவான்.

புறப்பட நேரமாகிறது.

ஞாபகம் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் பால் சென்றது.

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இராம பக்தர்; அவர் இதயத்தை தியாகராஜ கீர்த்தனைகள் காலத்தை வென்று தந்து கொண்டேயிருக்கின்றன.

ஓயாது ஸ்ரீ ராம மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருப்பார் தியாகராஜ சுவாமிகள்; எத்தனையோ கோடி முறை ஸ்ரீ ராம நாமத்தை ஜபித்த பின்னர் ஒரு நாள் காலை வேளையில் சுவாமிகள் வீட்டுக் கதவு முன்யாரோ தட்டுவது காதில் கேட்டது.

சுவாமிகள் வந்தார்; கதவைத் திறந்தார்.

ஆ இப்பிறவி தந்த பயனென் கொல்?

ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி இளைய பெருமாள் விசுவாமித்திரருடன் சீதாப் பிராட்டியார் திருமணத்திற்கு புறப்பட்ட கோலத்தில் நிற்கிறார்.

இருவரையும் சுவாமிகள் தரிசித்தார்: அவர் எண்ணம் புலன்கள் கிரஹித்து புரிந்து கொள்வதற்கு முன்பு அவர்கள் இருவரும் இள நகை பூத்து மறைந்தனர்.

தியாகராஜ சுவாமிகள் உள்ளம் ஏங்கியது.

ஸ்ரீ ராமா, எத்தனையோ யுகங்களை நின்னை நினைத்துப் போக்கி விட்டேன்; நின் நினைப்பில் வாழ்ந்து விட்டேன்; இன்று நீங்கள் இருவரும் காட்சி தந்து என்னை ஆட்கொண்டுள்ளீர்கள், மறைந்து விட்டீர்கள்.

எத்தனையோ யுகங்களை தங்கள் நினைப்பில் கழித்த நான் ஒரு வினாடியைக் கூட தங்களைக் காணாமல் போக்க முடியவில்லையே, தயவு செய்து என் முன் வந்தருளுங்கள் என்று கதறினார்; ஏல நீ தயராது என்று பாடி வணங்கினார்.

## 47 ஆண்டுகள்

47 ஆண்டுகளை என் உள்ளக்கோவிலில் போற்றிய ஆலயங்களின் நினைவில் கழித்து விட்டேன்; இப்பொழுது 14 நாட்களுக்குள் நேரே என் கண்களால் பார்த்து உள்ளங் குளிர்ந்துள்ளேன்.

ஆனல் 47 ஆண்டுகள் நினைப்பில் ஓடிவிட்டன. எஞ்சியிருக்கும் நாள் எல்லாம் உள்ளத்தில் போற்றும் ஆலயங்களை ஒவ்வொரு விநாடியும கண்டு வாழ வேண்டும் என்று துடிக்கின்றனவே. இதற்கு என் செய்வது?

முற்றும் நீ என்கிறர் ஞானசம்பந்தப் பெருமான்; முற்றுமாய அம்மையப்பன் வழிகாட்டட்டும்.

வாழ்வது பயனுடன் செல்லட்டும்.

அது எல்லாம் அம்மையப்பன் அருள்.

நன்றே செய்வாய் தீதே செய்வாய் நானே இதற்கு நாயகமே எனகிறர் மணிவாசகர் "நாயகம் நீ....

விமானம் காமட ஜெட்; வேகமாய் (மூன்றரை மணி நேரத்தில்) எங்களைக் கொண்டு வந்து அன்னையரனைய ஸ்ரீ இராமகிருஷ்ண சுவாமிகளிடம் சேர்த்தது.

அன்று இரவை அங்கே கழித்து மறு நாள் காலை தலை நகர் வந்து சேர்ந்தோம்.

தேவ குஞ்சரியும், தாயாரும், மாதவனும், வீரயமாளும், சகோதரர்கள் சம்பந்தனும், சுப்ரமணியம் கிருஷ்ணனும் காத்திருந்தனர்

நிறைந்த நெஞ்சு பொங்க இல்லம் திரும்பி பிரசாதங்களைத் தந்து வாயால உணர்ச்சிபொங்கச் சொல்ல முடிந்ததைச்சொல்லி, ஓரிருநாளில் பிறந்த ஊராகிய சங்கநதி செனறு அங்கும் பிரசாதங்களைத் தந்து வாழ்வு தரும் மாரியம்மனையும் வள்ளி தெய்வானை சமேத சுப்ரமணியரையும வீரமாகாளியம்மனையும் வணங்கி கடமையெனும் கட்டினுள் உரம் பெற்ற இதயத்துடன் புகுந்தேன்;

என் உள்ளம் என்னை அழைத்துச் சென்ற மீனுட்சி புதிரன் பால நன்றியாய் நின்றது.

# சுபம்

கலாசாலை அச்சகம், கங்கை சிப்புட்.